இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 32

சுடர் 32 | கதிர் 158 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 20 புதன்கிழமை 03.05.2017

## ஹன்ரர் வாகனத்திலிருந்து விழுந்த இளைஞன் சாவு

*சாவு வீட்டுக்காக குலையுடன் வாழை ஏற்றிச் சென்றவேளை*

யாழ்ப்பாணம், மே 3

வாழையைக் குலையுடன் ஏற்றிச் சென்ற ஹன்ரர் வாகனத்திலிருந்து விழுந்த இளைஞன் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தான் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் நாவாந்துறையை » 28

## பொன்சேகா தலைமையில் அத்தியாவசியச் செயலணி

### மாற்றமேயில்லை என்கிறார் மைத்திரிபால பொறுப்புடன் பேசுமாறு அமைச்சர்களுக்கும் அறிவுரை



கொழும்பு, மே 3

அமைச்சரவையில் பேசப்படும் விடயங்கள் தொடர்பில் பொறுப்புடன் பேசுங்கள் என்று அமைச்சர்களைக் கடிந்துகொண்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, சரத் பொன்சேகா தலைமையில் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுக்கும் செயலணி நிறுவப்படும் முடிவில் மாற்றமில்லை என்றும் கூறியுள் » 28

## 4 மாதங்களில் மட்டும் 40,000 பேருக்கு டெங்கு

### வடக்கில் 3,400 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 3

இலங்கையில் கடந்த 4 மாதங்களில் சுமார் 40 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத் » 28

## செல்பி மோகத்தால் பறிபோனது உயிர்

### சிலாபம் கடலில் மூழ்கி இளம்பெண் பரிதாபச் சாவு

கொழும்பு, மே 3

சிலாபம்கடற்கரையில்செல்பிஎடுத்துக்கொண்டிருந்த இளம்பெண்கடல்அலையால்இழுத்துச்செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை 5.10 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற » 28

### சிங்களவரை உசுப்பேத்தி

## ஆட்சியைப் பிடிக்க மகிந்த கங்கணம்

### அனுரகுமார சாடல்

கொழும்பு, மே 3

புலிகள் மீண்டும் எழுச்சி பெறப்போகின்றார்கள் என்று தமிழர்களுக்கு எதிராகச் சிங்களவர்களை உசுப்பிவிட்டு இழந்த ஆட்சியைப் பிடிக்க மகிந்த ராஜபக்ச முயற்சிக்கி » 28

## மருத்துவர்கள் வெள்ளியன்று நாடு முழுவதும் புறக்கணிப்பு

### அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக

கொழும்பு, மே 3

சைட்டம் எனப்படும் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை அங்கீகாரமளித்து மருத்துவப் பட்டமளிக்க அனுமதித்தல், உயர்கல்வியைத் தனியார் மயப்படுத்தல், இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்களை அமைக்க நடவடிக்கை எடுத்தல் உள் » 28

### புதிய அரசமைப்பை உருவாக்கும்

# வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை இன்றும் இறுதியாகாது

### மைத்திரியுடனான நேற்றைய சந்திப்பு கடைசி நேரத்தில் கைவிடப்பட்டதால்

யாழ்ப்பாணம், மே 3

அரச தலைவர் மைத்திரியுடனான நேற்றைய சந்திப்புக் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டதால், புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை, இன்றைய கூட்டத்திலும் இறுதி செய்யப்படாது என்று தெரிய வருகின்றது. இதன் காரணமாக, அரசமைப்பு நிர்ணய சபைக்கு (நாடாளுமன்றத்துக்கு) இடைக்கால அறிக்கையை இந்த மாதத்துக்குள் முன்வைப்பதற்கான சாத்தியங்கள் குறைவாகவே உள்ளன என்று புதிய அரசமைப்பு உருவாக்கத்துடன் தொடர்புடைய தரப்புக்களிடமிருந்து அறிய முடிகின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிக்காக நாடாளுமன்றம் அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்பட்டது. அரசியல் நிர்ணய சபையால், வழிநடத்தல் குழு அமைக்கப்பட்டது. வழிநடத்தல் குழுவின் அறிக்கை, நாடாளுமன்றத்தில் » 28

## இந்தியத் தூதரக அதிகாரிகள் ஊடக சுதந்திரத்தில் தலையீடு

### ஈ.சரவணபவன் எம்.பி. காட்டம்

யாழ்ப்பாணம், மே 3

ஊடக சுதந்திரத்தில் இன்று இந்தியத் தூதரக அதிகாரிகள் தலையிடும் ஓர் அவல நிலை யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டினார் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் யாழ். கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.

(விரிவு 10 ஆம் பக்கம்)

## ஒருபோதும் திரும்பப் பெறமுடியாது பகிரப்பட்ட அதிகாரங்களே தேவை!

### வடக்கு மாகாண அவைத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு அரசால் ஒருபோதும் திரும்பப் பெறப்பட முடியாத அளவுக்குப் பகிரப்பட்ட அதிகாரத்தைத்தான் நாம் தீர்வாகக் கேட்கிறோம் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி. கே.சிவஞானம்.

உதயன் பத்திரிகைப் பணியாளர்கள் படுகொலை மற்றும் ஊடக நிறுவனம் மீதான தாக்குதல் நடத்தப்பட்டதன் 11ஆவது ஆண்டு நினைவாக நடத்தப்பட்ட வேட்கை எனும் ஈழத்தின் மிகப் பெரும் ஊடகப் படுகொலை தினத்தில் தலைமை அதிதியாகக் கலந்துகொண்டு 'புதிய அரசமைப்பு மக்கள் மக்கள் பிரதிநிதிகள்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். (விரிவு பக்கம் 10)

### காங்கேசன் கடற்பரப்பில் கைதான

## 30 மியன்மார் அகதிகள் மீரிஹான முகாமுக்கு

யாழ்ப்பாணம், மே 3

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் கடந்த 30ஆம் திகதி கைது செய்யப்பட்ட 30 மியன்மார் அகதிகளையும் மீரிஹான தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்குமாறு மல்லாகம் நீதவான் உத்தரவிட்டார்.

இவர்கள் மியன்மாரிலிருந்து 2012ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து இந்தியாவில் தஞ்சமடைந்திருந்த நிலையில் » 28

### காணாமற்போனோர் விவகாரம்

## மைத்திரியிடம் 2 விடயங்களை வலியுறுத்தியுள்ளார் சம்பந்தன்

கொழும்பு, மே 3

காணாமற்போனோர் தொடர்பில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சந்தித்துப் பேசியுள்ளார். இதன்போது கூட்டமைப்பின் தலைவர் இரண்டு விடயங்களை வலியுறுத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், அரச தலைவர் மைத்திரிபால சிறி » 28

## காற்றோட்டத்துக்காக திறந்திருந்த வீட்டுக்குள் புகுந்து நகைகள் திருட்டு

### புத்தூரில் நேற்று அதிகாலை சம்பவம்

### மற்றொரு வீட்டுக்குள் திருட முயன்றவர் கைது

யாழ்ப்பாணம், மே 3

காற்றோட்டத்துக்காக கதவைத் திறந்துவிட்டு வீட்டிலுள்ளவர்கள் உறங்கியவேளை வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த சுமார் 25 பவுண் நகைகளைத் திருடியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், மற்றொரு வீட்டில் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் பொது மக்களால் நள்ளிரவு பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக் » 28



## குடாநாட்டுக்கான மணல் விநியோகம் விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 3
யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான மணல் விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கான பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன என மருதங்கேணிப் பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான மணல் விநியோகத்தில் ஏற்பட்ட தடையானது தற்போது பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் ஆகியவற்றின் நீண்ட முயற்சியால் நீங்கியுள்ளது. மணல் விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.
விநியோகத்துக்கான பாதை அமைத்தல் பணி இடம்பெறுகின்றது. மணல் விநியோகத்தை அம்பன் கிழக்கு மீனவர் சங்கம், அம்பன் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகிய இரு அமைப்புக்களும் இணைந்தே மேற்கொள்வார்கள் என்று முடிவு எட்டப்பட்டுள்ளது என்றார். (த-101)

# ஜி.எஸ்.பிக்காக நிபந்தனைகளை ஏற்காது கொழும்பு

## அவ்வாறான பொய்ப் பரப்புரைகளை நம்பவேண்டாம் என்கிறார் அமரவீர

கொழும்பு, மே 3
ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையைப் பெறுவதற்காக வடக்கு கிழக்கு தமிழர்களுக்குக் கூட்டாட்சித் தீர்வை வழங்குதல் அல்லது படையினரைப் போர்க் குற்றச்சாட்டின்கீழ் தண்டித்தல் போன்ற நிபந்தனைகளுக்கு நாம் ஒருபோதும் உடன்படவில்லை. அவ்வாறு உடன்பட்டதாகக் கூறப்படும் பரப்புரைகளில் எதுவித உண்மையுமில்லை என்று அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான மகிந்த அமரவீர கூறினார்.
கண்டி கெட்டம்பே மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிலாளர் தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் கூறுகையில்,
இலங்கை வரலாற்றில் முதல் தடவையாகக் கண்டி கெட்டம்பே மைதானம் முழுமையாக நிரம்பி இருக்கின்றது. வருவதற்குத் தயாராக இருந்த எத்தனையோ பேரை நாம் அழைத்து வரவில்லை.
2020 இல் இடம்பெறப் போகும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று நாம் தனித்தே ஆட்சி அமைப்போம். எமது இந்தத் தொழிலாளர் தினக் கூட்டத்துக்கு வந்திருக்கும் மக்கள் வெள்ளத்தைப் பார்க்கும்போது அந்த உண்மை நிரூபிக்கப்பட்டுவிட்டது.



எமது அரச தலைவர் நிலையான அபிவிருத்தியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றார். அவர் பன்னாட்டுச் சமூகத்தின் நம்பிக்கையை வென்றுவிட்டார். எமக்கு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை மீள வழங்குவதற்கு ஐரோப்பிய நாடாளுமன்றம் இணங்கிவிட்டது.
இந்த வரிச் சலுகையைப் பெறுவதாக இருந்தால் வடக்குகிழக்கு தமிழர்களுக்கு கூட்டாட்சித் தீர்வை வழங்க வேண்டும், ஓரினச் சேர்க்கைக்கு அனுமதி வழங்க வேண்டும், பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முதலாமிடம் நீக்கப்பட வேண்டும், நாடு காட்டிக் கொடுக்கப்பட வேண்டும், போர்க் குற்றச்சாட்டின் கீழ் படையினர் தண்டிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் பொய்ப் பரப்புரைகளைச் செய்து வந்தனர்.
அவர்கள் இன்று மூக்குடைபட்டு நிற்கின்றனர். அவ்வாறான எந்தவொரு நிபந்தனையும் இல்லாமலேயே இந்த வரிச்சலுகைஎமக்குக்கிடைக்கவுள்ளது. நாட்டைக் காட்டிக் கொடுத்து நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு துணைபோய் இந்தச் சலுகையை பெறவில்லை என்பதை அவர்கள் இப்போது விளங்கிவிட்டாலும்கூட அவர்களின் கீழ்த்தரமான அரசியல் இலாபத்துக்காக அந்த உண்மைகளை மறைத்துப் பொய் கூறி வருகின்றனர் - என்றார். (த-5-3)

## யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 3
யாழ்ப்பாண மாவட்டத்துக்கான 2 ஆவது ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெறுவதாக இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் இந்த நிகழ்வு கைவிடப்பட்டுள்ளதாக மாவட்ட செயலர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (த-10)



## சந்திரிகாவின் கணவரது படமும் கோல்பேஸில்

கொழும்பு, மே 3
மகிந்த அணியின் தொழிலாளர் தினப் பேரணி நடைபெற்ற காலிமுகத்திடல் பகுதியில் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்கவின் கணவரான விஜயகுமாரணதுங்கவின் உருவப் படங்களும் வைக்கப்பட்டிருந்தன.
மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணி காலிமுகத்திடலில் பிரமாண்டமான தொழிலாளர் தினப் பேரணியை நடத்தியிருந்தது.
இந்தக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்சவின் உருவப்படங்களுடன், சந்திரிகா குமாரதுங்கவின் கணவரான விஜயகுமாரணதுங்கவின் படங்களும் அருகருகாக வைக்கப்பட்டிருந்தன.
சந்திரிகா குமாரதுங்கவைத் தீவிரமாக விமர்சித்து வரும் மகிந்த ராஜபக்ச, அவரது கணவரான, முன்னாள் நடிகரும், சிறிலங்கா மக்கள்கட்சியின் நிறுவுனருமான, படுகொலை செய்யப்பட்ட விஜயகுமாரணதுங்கவின் படங்களைத் தமது அரசியல் நலனுக்காக பயன்படுத்த ஆரம்பித்துள்ளார் என்று அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (த-5)

## உள்ளூராட்சித் தேர்தலை உடன் நடத்தவேண்டும்

### விமல் வீரவன்ச கோரிக்கை

கொழும்பு, மே 3
உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை அரசு உடன் நடத்தவேண்டும் என்பதே காலிமுகத்திடலில் பொது எதிரணியின் தொழிலாளர் தினக் கூட்டத்தில் திரண்ட மக்களின் கோரிக்கையாக உள்ளது. மக்களின் கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்கவேண்டும். உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை உடன் நடத்த வேண்டும்.
இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.
கொழும்பில் மகிந்த அணி நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது :
நேற்று (நேற்றுமுன்தினம்) காலிமுகத்திடலில் வரலாறு காணாத மக்கள் திரண்டிருந்தனர். பொது எதிரணியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டமக்கள்தொகையை ஐ.தே.க. மற்றும் சு.கவின் மேதினக் கூட்டங்களில் கலந்துகொண்ட மக்கள் தொகையுடன் ஒன்றிணைத்துப் பார்த்தால் அருகில்கூட அவர்களால் நெருங்க முடியாது.



அரசுக்கு நாங்கள் எச்சரிக்கை சமிக்ஞையை வெளியிட்டுள்ளோம். காலிமுகத்திடலில் திரண்ட மக்களின் பிரதான செய்தி அரசு உடனடியாக உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்பதேயாகும் - என்றார்.
இங்கு உரையாற்றிய பொது எதிரணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன, நேற்று (நேற்றுமுன்தினம்) பொலிஸார் கூட எதிர்பாராத மக்கள் வெள்ளம் காலிமுகத்திடலில் குவிந்தது. இந்த தொழிலாளர் தினத்தை நடத்த நடவடிக்கை எடுத்த அனைவருக்கும் நாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றார். (த-5)

## சுட்டெரிக்கும் வெயில் 15 நாள்கள் நீடிக்கும்

கொழும்பு, மே 3
நாடு முழுவதும் தற்போது நிலவும் அதிக வெப்பமான காலநிலை இந்த மாதம் நடுப்பகுதி வரை தொடரும் வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.
ஆனால் கடந்த காலத்தில் நிலவிய அதிக வெப்பநிலை எதிர்காலத்தில் ஓரளவு குறையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.
நிறம் அதிகமான ஆடைகளை அணிவதைத் தவிர்த்தால் சூரிய ஒளி, உடலில் பரவுவதைத் தடுக்கலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் இயக்குநர் அதுல கருணாநாயக்க தெரிவித்தார். (த-4)

## சினைப்பட்ட பசு மாட்டை இறைச்சியாக்கிய பாதகர்கள்

### மட்டுவிலில் கொடுமை

தென்மராட்சி, மே 3
வயலில் கட்டப்பட்டிருந்த சினைப்பட்ட பசு மாட்டைத் திருடிச் சென்றவர்கள் அங்குள்ள மயானப் பகுதியில் வைத்து அதனை அறுத்து இறைச்சியை எடுத்துக்கொண்டு ஏனையவற்றை அவ்விடத்தில் கைவிட்டுச் சென்றுள்ளனர் எனச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
மட்டுவில் சிவன் கோவிலடியைச் சேர்ந்த சர்வேஸ்வரன் என்பவருக்குச் சொந்தமான 80 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடு வயலில் கட்டப்பட்டிருந்தது. அதனைக் கடத்திச் சென்றோர் மயானப் பகுதியில் வைத்து அறுத்து இறைச்சியை எடுத்துக் கொண்டு சென்றுள்ளனர்.
காலபோக அறுவடையின் பின்னர் அடுத்த காலபோக நெற்செய்கைக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளும் வரை அப்பகுதி மக்கள் மாடுகளைப் பகலில் மேய்ச்சலுக்கு விட்டுவிட்டு இரவுவேளைகளில் தத்தமது காணிகளில் பட்டியமைத்துக் கட்டி வருவது வழமை.
இதேபோன்று கடந்த சனிக்கிழமை மாலை வயலில் மாட்டைக் கட்டிவிட்டு மறுநாள் மேய்ச்சலுக்குக் கொண்டு செல்வதற்காகச் சென்றபோது அங்கு மாடு காணாமற்போயிருந்தது. தேடிப் பார்த்தபோது அருகில் உள்ள கொட்டடித்தூ மயானத்தை அண்டியுள்ள பற்றைப் பகுதியில் வைத்து அது வெட்டப்பட்டு இறைச்சியை மட்டும் எடுத்துக் கொண்டு ஏனையவற்றைத் திருடர்கள் கைவிட்டுச் சென்றுள்ளனர் என மாட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.
உடனடியாகக் கிராம அலுவலர் மற்றும் சாவகச்சேரிப் பொலிஸார் ஆகியோரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து அவர்கள் பார்வையிட்டுச் சென்றனர் எனவும் அவர் கூறினார். (த-9)

# பத்திரிகைத்துறை மேம்பாட்டுக்கு ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை

கொழும்பு, மே 3
இலங்கையில் பத்திரிகைத்துறையை மேம்படுத்துவதன் ஊடாக பொதுத் தகவல் மற்றும் வெளிப்படுத்தல் சுதந்திரத்தை உறுதி செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முன்வந்துள்ளது.
ஊடகத்தின் தரத்தை உயர்த்தவும் மக்களின் கருத்துச் சுதந்திரத்தை மேம்படுத்தவும் உதவிகளை வழங்கத் தயார் எனவும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான கொழும்பு காரியாலயம் தெரிவித்துள்ளது.
கருத்துச் சுதந்திரத்தை ஊக்குவிக்கும் நோக்கில் thecatamaran.org என்ற மும்மொழி இணையத்தளமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
சமூக பொருளாதார, சமூக அரசியல் விவகாரங்கள் தொடர்பில் செய்தி அறிக்கையிடப்படாத விடயங்கள் இந்த இணையத்தளத்தில் வெளியிடப்படவுள்ளன. ஜேர்மனியை மையமாகக் கொண்ட அமைப்பு ஒன்றினால் இந்த இணையத்தளம் இயக்கப்படுகின்றது. இலங்கைப் பத்திரிகைகள் நிறுவகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையம் ஆகியவற்றில் பயிற்றுவிக்கப்பட்ட பத்திரிகையாளர்களால் இணையத்தளத்துக்கான செய்தி அறிக்கைகள் தயாரிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

# உள்ளூராட்சித் தேர்தலை உடன் நடத்துமாறு கோரி

# 8 திக்கிலும் போராட்டம்

## மகிந்த அணியினர் தீர்மானம்

கொழும்பு, மே 3
உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை உடன் நடத்துமாறு அரசை வலியுறுத்தி நாடு முழுவதும் போராட்டங்களை நடத்துவதற்கு மகிந்த ஆதரவு அணி தீர்மானித்துள்ளது.
'பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் முக்கிய சந்திப்பொன்று அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறவுள்ளது. இதன்போது போராட்டத் திகதி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும்' என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா தெரிவித்தார்.
உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை உடன் நடத்துமாறு மகிந்த அணி பல வழிகளிலும் அரசை வலியுறுத்தி வருகின்றது. இந்தநிலையிலேயே நாடு தழுவிய ரீதியில் போராட்டங்களை நடத்துவதற்கு அது உத்தேசித்துள்ளது.
'பொது எதிரணியின் (மகிந்த அணியின்) தொழிலாளர் தினக் கூட்டத்தில் மக்கள் அலைமோதியது. அரசு மீது மக்கள் கடும் சீற்றத்துடன் இருக்கின்றனர் என்பது இதன் மூலம் உறுதியானது. மக்களின் ஜனநாயக உரிமைகளுள் ஒன்றான உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை உடன் நடத்துமாறு மக்களைக் கொண்டே அரசை வலியுறுத்தவுள்ளோம். இதற்காக எட்டுத் திக்கிலும் போராட்டங்கள் நடத்தப்படும்' என்றும் ரஞ்சித் டி சொய்சா கூறினார்.
ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு தேர்தலையும் சந்திக்கத் தயார் என அதன் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் நடைபெற்ற தொழிலாளர் தினக் கூட்டத்தில் சூளுரைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

# குப்பைமேடு மீண்டும் வெடிப்பதற்கு வாய்ப்பு

## மக்களை அங்கிருந்து வெளியேற்றுமாறு இடர்முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை

கொழும்பு, மே 3
மீதொட்டமுல்ல குப்பை மேடு மீண்டும் வெடிக்க வாய்ப்புள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. இதனால் உடனடியாக மாற்று நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளுமாறும் அங்குள்ள மக்களை உடனடியாக வெளியேற்றவேண்டும் எனவும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மீண்டும் எச்சரித்துள்ளது.
கண்டி கொஹாகொட குப்பை மேடு அபாயம் உள்ள நிலையில் தொடர்ச்சியாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீதொட்டமுல்ல குப்பைமேடு அதிக கனம் காரணமாக அண்மையில் சரிந்து பெரும் இடர் ஏற்பட்டிருந்தது. அதன் பின்னர் அரசு துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது. (த-4)

# பிரதேச சபைச் செயலாளர்கள் சிற்றரசர்கள் ஆகிவிடக்கூடாது

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 3
தற்போது பிரதேச சபைகளைக் கொண்டு நடத்துவதற்கு மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில் பிரதேச சபைகளின் செயலாளர்களே அனைத்துக் கடமைகளையும் புரியவேண்டிய தேவை உள்ளது. எல்லாக் கடமைகளையும் நிறைவேற்றுகின்றவர்கள் என்ற காரணத்தினால் சபைச் செயலாளர்கள் சிற்றரசர்களாக மாறிவிடக்கூடாது. உண்மையான மக்கள் தொண்டர்களாக இனம், மதம், மொழி வேறுபாடுகளைக் கடந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்ற முன்வரவேண்டும்.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
அடம்பன் மாந்தை மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகக் கட்டடம் மற்றும் திறந்த வெளி அரங்கு திறப்புவிழா, மன்னார் நகர சபையின் ஆட்சிக்கு உட்பட்ட கீரி கடற்கரையில் உருவாக்கப்பட்ட சுற்றுலா மையத் திறப்பு நிகழ்வு, சிலாவத்துறைப் பொது நூலகத் திறப்பு விழா என்பனவற்றில் முதலமைச்சர் கலந்து கொண்டார்.
மாந்தை மேற்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகக் கட்டடம் மற்றும் திறந்தவெளி அரங்கு ஆகியவற்றைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
1.37 மில்லியன் ரூபா செலவில் இந்தத் திறந்த வெளி அரங்கும் அமைக்கப்பட்டது. சில வேளைகளில் சில கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கலாம். அந்தச் சந்தர்ப்பங்களில் பொது மக்களை முறையாக நெறிப்படுத்தவேண்டியது அலுவலர்களின் பெருங் கடமை. அதைவிடுத்து தடைகளை விதிப்பதும் தண்டம் அறவிடுவதும் மட்டும் தீர்வாக அமையாது.
கடந்த வருடம் மழை வீழ்ச்சியின் அளவு மிகக் குறைவாக இருந்ததால் அரிசி விலை உச்சத்திற்குப் போய்விட்டது. தெங்குப் பொருள்களின் விலையும் அதிகரித்துவிட்டது.
ஒரு சாதாரண குடும்பத்துக்கான நாள் செலவினம் ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமாகக் காணப்படுகின்றது. தந்தை மட்டும் பொருள் ஈட்டுகின்றவராகவும் ஏனையவர்கள் தங்கி வாழ்பவர்களாகவும் இருந்து வந்த பழைய முறைமை தற்காலத்துக்குப் பொருந்ததாது. பொருளீட்டலில் கணவன், மனைவி, கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்த பிள்ளைகள் அனைவரும் இணைந்து செயற்படவேண்டும். சிறு சிறு கைத்தொழில்களில் ஈடுபட முனையவேண்டும்.
இளையோர் அரச வேலைகள் கிடைக்கும் வரை இயலுமான பிற முயற்சிகளில் ஈடுபடவேண்டும். வேலைகள் எதுவுமின்றி வெற்றாகப் பொழுதைப் போக்குகின்றபோதுதான் சண்டைகள், சச்சரவுகள் உருவாகின்றன. மூத்த பிள்ளைகள் ஏனைய வளரும் பிள்ளைகளுக்கு உதாரணமாக வளரவேண்டும். முயற்சிகளின் பயனை அவர்களுக்கு எடுத்துரைக்கவேண்டும்என்றார்.
சிலாவத்துறை பொது நூலக திறப்பு விழாவில் அவர் தெரிவித்ததாவது.
இந்தக் கட்டடம் 6.17 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது. போர் முடிவடைந்து 8 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையிலும் இப்பகுதிகள் மீளளிக்கப்படாமை வருத்தத்தைத் தருகிறது.
படையினரின் வசமுள்ள காணிகள் அனைத்தும் அவர்களின் தேவைக்கு அவசியமானவை என்று அரசு நினைப்பதாகத் தெரிகின்றது. வர்த்தக நோக்கங்களோடு படையினரால் விவசாயம் நடத்தப்படுகிறது. அதனைக் கண்டு கொள்கின்றார்கள் இல்லை. பொதுமக்களால் எம்மண்ணில் வளர்க்கப்பட்ட தென்னைகளிலிருந்து கிடைக்கப்பெறும் தெங்கு உற்பத்திகளில் வர்த்தகம், பழ உற்பத்தியில் வர்த்தகம், கடல் உணவில் வர்த்தகம் என பல வர்த்தகங்களில் படைகள் ஈடுபட்டு வருவது அரசுக்குத் தெரியாமலா இருக்கின்றது?
அவர்களை வடக்குக்கு அழைத்து வந்து ஒவ்வொரு கிராமங்களிலும் எவ்வளவு நிலங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்பதை நேரடியாகக் காண்பித்தால்க்கூட படையினரை வாபஸ் பெறுவார்கள் என்பது சந்தேகமே. இராணுவத்தினரையும் வேறு படையணியினரையும் அரசியல்வாதிகள் இங்கு வைத்திருப்பது பாதுகாப்பு காரணங்களுக்காக அல்ல. அடுத்த தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காகவே.
வாசிப்புப் பழக்கங்களைக் கைவிட்டதால் 'ல' கர 'ள' கர 'ழ' கர வேறுபாடுகள் தெரியாது போய்விட்டன. தமில் என்கின்றார்கள். சில சினிமா நடிகர்கள்கூட அவ்வாறே உச்சரிப்பதால் தமிழ் தமிலாகவே வலம் வருகின்றது. எமது மாணவ மாணவியருக்கு ஒரு பந்தியை அறுத்துறுத்து வாசிக்க முடியவில்லை. சொற்களுக்கு பொருள் புரியவில்லை. தூய்மையான தமிழைப் பேசமுடியாது ஆங்கிலக் கலப்புடன் சேர்ந்த பேச்சுத் தமிழுக்குப் பலர் மாறிவிட்டார்கள். இவ்வாறு பல தாக்கங்கள் இளைய தலைமுறையை ஆக்கிரமித்துள்ளன.
இவற்றில் இருந்து விடுபடுவதற்கு நல்ல புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து மாணவ மாணவியர் வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்ய வேண்டும். எடுத்த எடுப்பிலேயே பெரிய நூல்களை வாசிக்கப் பொறுமையில்லாதவர்கள் சிறிய நூல்களை முதலில் வாசியுங்கள். காலப்போக்கில் உங்களை அறியாமலேயே பெரிய நூல்களை நாடிச் செல்லத் தொடங்கிவிடுவீர்கள். வாசிப்புப் பழக்கம் ஒரு மனிதனை முழுமையடையச் செய்யும் என்பதை மறந்துவிடாதீர்கள். முத்தரிப்புத்துறை, அல்லிராணிக்கோட்டை ஆகிய இடங்கள் எமது புராதன அடையாளங்கள். அல்லிராணிக்கோட்டை கடலரிப்பினால் மூழ்கக்கூடிய அபாயம் உள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. இவற்றைத் தடுத்து நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்என்றார்.
மன்னார் நகரசபையின் கீரி சுற்றுலா கடற்கரை திறப்புவிழாவில் அவர் தெரிவித்ததாவது:
எனது அமைச்சின் கீழ் சுற்றுலாத்துறை என்ற தனியான அலகொன்றை அமைத்து சுற்றுலாத்துறை சம்பந்தமான விற்பன்னர்கள் சிலரை வரவழைத்து அமர்த்தி, மீளப் புதுப்பிக்கக்கூடிய சுற்றுலா மையங்களை அடையாளம் கண்டு, அவற்றைப் புனரமைத்து மக்கள் பாவனைக்காக பொழுதுபோக்கு மையங்களாக்கி வருகின்றோம்.
அவ்வாறே கீரிக் கடற்கரையும் தெரிவு செய்யப்பட்டு 3.19 மில்லியன் ரூபா செலவில் இக்கடற்கரை அழகுபடுத்தப்பட்டுள்ளதுடன் அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்றார். இந்த நிகழ்வுகளில் வடக்கு மாகாண தலைமைச் செயலர் அ.பத்திநாதன், வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் அமைச்சின் செயலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (த-4)

# ஐ.தே.கவின் கூட்டத்திலிருந்து திரும்பியவரும் நேற்றுச் சாவு

கொழும்பு, மே 3
ஐ.தே.கவின் மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த ஒருவர் பேருந்தில் சிக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.
சீகிரிய பிதுரங்கல பிரதேசத்தில் நேற்று அதிகாலை 2.15 அளவில் இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கொழும்பு கெம்பல் மைதானத்தில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களை ஏற்றிச் சென்ற பேருந்தில் இந்த நபர் மிதிபலகையில் பயணித்துள்ளார். இதன்போது கீழே விழுந்து பேருந்தின் சில்லில் சிக்கியுள்ளார்.
படுகாயமடைந்த அவர் தம்புள்ளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.
சீகிரிய நவகம்மான பிரதேசத்தை சேர்ந்த 44 வயதான ஒருவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை, காலிமுகத்திடலில் இடம்பெற்ற மகிந்த ஆதரவு அணியான கூட்டு எதிர்கட்சியின் மே தின கூட்டத்தில் கலந்து கொண்ட இருவர் உயிரிழந்துள்ளனர்.
அதிக வெப்பம் மற்றும் களைப்பு காரணமாக 5 பேர் தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களில் இருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்தனர் எனக் கொழும்பு தேசிய வைத்தியசாலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# ஜனநாயக விரோத ஆட்சிக்கு மீண்டும் இடமேயில்லை

## விக்கிரமபாகு திட்டவட்டம்

கொழும்பு, மே 3
நாட்டில் மீண்டும் பாஸிச வாத மற்றும் இனவாத ஆட்சியை ஏற்படுத்துவதற்கு கூட்டு எதிர்க்கட்சி திட்டமிட்டு வரு >> 28

# உரமானியப் பதிவுகள் நாளை ஆரம்பம்

தென்மராட்சி, மே 3
தென்மராட்சி, கைதடி கமநல சேவைகள் நிலையப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் வயல்களில் சிறுபோக காலத்தில் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானிய உரக் கொடுப்பனவு தொடர்பான பதிவுகள் நாளை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.
பதிவை மேற்கொள்ளவரும்போது தேசிய அடையாள அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம் வயல் காணி உறுதி அல்லது குத்தகைப் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகளையும் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.
மட்டுவில் சந்திரபுரத்தில் நாளையும் நாளை மறுதினமும் மட்டுவில் மத்தியில் எதிர்வரும் 8ஆம் திகதியும் மட்டுவில் தெற்கில் எதிர்வரும் 12ஆம் திகதியும் மட்டுவில், நுணாவிலில் 15 மற்றும் 16ஆம் திகதிகளிலும் தனன்களப்பு, கைதடி வடக்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த விவசாயிகளின் பதிவுகள் எதிர்வரும் 17ஆம் திகதியும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)



# டிறிபேக் மாணவர்களின் ஆக்கங்கள் கண்காட்சி

சாவகச்சேரி, மே 3
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அழகியற் பாட ஆசிரியை திருமதி ஜானகி ஆனந்தகிருபனின் வழிகாட்டுதலில் கல்லூரி மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தல் நேற்று கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றன.
கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் கலந்து கொண்டு காட்சிக்கூடத்தை திறந்து வைத்தனர்.
இந்த நிகழ்வில் முல்லைத்தீவு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) த.கிருபாகரன் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்களும் கலந்து கொண்டனர். (வ-9)

# கைத்தொழில் பயிற்சியாளர்களுக்கு ரூ.3 லட்சம் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மே 3
மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் ஆடை வடிவமைத்தல், அழகுக்கலை, மனைப்பொருளியல் மற்றும் கைவினை செயல்முறை போன்ற பயிற்சிகளை இந்த வருடம் மேற்கொள்ளும் மாணவிகளுக்கு மூலப்பொருள்கள் கொள்வனவு செய்வதற்காக மூன்று இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபையின் யாழ்ப்பாண மாவட்ட மாகாணசபை உறுப்பினரான கே.என். விந்தன் கனகரத்தினம், தனக்குரிய 2017 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.
வேலணை, நெடுந்தீவு, காரைநகர் மற்றும் ஊர்காவற்றுறை மகளிர் அபிவிருத்தி நிலையங்களுக்கு 75ஆயிரம் ரூபா வீதம் நான்கு நிலையங்களுக்கும் 3 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ஜ -10)

# அதிகாலையில் வீடு புகுந்து 8 பவுண் நகைகள் கொள்ளை

## சித்தங்கேணியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 3
அதிகாலை வீடு புகுந்த கொள்ளையர், வயோதிபத் தம்பதியரைத் தாக்கி சுமார் 8 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கொள்ளையரின் தாக்குதலில் படுகாயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
"இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவிலுள்ள சித்தங்கேணியில் நேற்றுஅதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றது. கொட்டன்களுடன் சென்ற கொள்ளையர் இருவர் வீட்டுக் கதவைப் பிரித்து உள்நுழைந்து அங்கிருந்த தம்பதியரைத் தாக்கிவிட்டு அவர்களிடமிருந்த நகைகளைக் கொள்ளையடித்துள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4-26-101)

# தொண்டர் சபையின் பொதுக் கூட்டம்

அளவெட்டி, மே 3
அளவெட்டி கும்பழாவளை விநாயகர் ஆலய தொண்டர் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு தொண்டர் சபை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. சகல தொண்டர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு தொண்டர் சபையின் தலைவர் கேட்டுள்ளார். (வ-36)

## பல்கலை மாணவர் கொலை:

# 5 பொலிஸாரின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட வழக்கில் பொலிஸ் சந்தேகநபர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 16ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு வந்தபோதே சந்தேகநபர்களின் மறியல் நீடிக்கப்பட்டது.
பின்னணி
யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சாலையில் கொக்குவில் குளப்பிட்டி சந்தியை அண்மித்து கடந்த ஒக்ரோபர் 19ஆம் திகதி நள்ளிரவு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டு பேர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த நடராசா கஜன், யாழ்ப்பாணம் அளவெட்டியைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் ஆகியோர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய குற்றச்சாட்டில் 5 பொலிஸார் கைது செய்யப்பட்டனர். (வ-4-103)

# வடமராட்சி கிழக்கு சிக்கன கடன் வழங்கும் சங்கங்கள் தரம் உயரும்

வடமராட்சி கிழக்கில் உள்ள சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை முதல் தரத்திலான சங்கங்களாகச் செயற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் செ.இலகுநாதன் தலைமையிலான சமாச குழுவினர் கடந்த வாரம் வடமராட்சி கிழக்குக்குச் சென்று சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்து அவற்றை முதல்தரச் சங்கங்களாக தரம் உயர்த்துவது குறித்துக் கலந்துரையாடினார்கள்.
போக்கறுப்பு, ஆழியவளை, செம்பியன்பற்று தெற்கு, நாகர்கோயில் பேனாட், குடத்தனை கிழக்கு ஆகிய சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்தக் குழுவினர் சென்றனர்.
இந்தச் சங்கங்களின் செயற்பாடுகளை அதிகரிக்கவும், கடன் திட்டங்கள் ஊடாக அங்கத்தவர்களுக்குக் கடன்களை வழங்கவும் ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அத்துடன் சங்கங்களைச் சீரமைத்துக் கூடுதலான சேமிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச் சமாசத் தலைவர் இலகுநாதன் தெரிவித்தார். (த-17)

# டிறிபேர்க் கல்லூரிக்கு 300 பிளாஸ்ரிக் கதிரை

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு 300 பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கப்படவுள்ளன. சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தகர்கள் மூவர் தாமாக முன்வந்து தலா 100 பிளாஸ்ரிக் கதிரைகளை வழங்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் பொதுக்கூட்டம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் அங்கு வந்த டிறிபேர்க் கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமாரன், 2004 ஆம் ஆண்டு கல்லூரியில் முதன்மை மண்டபம் அமைக்கப்பட்டுள்ளபோதிலும் நிகழ்வுகள் நடைபெறும் வேளைகளில் கதிரைகள் வாடகைக்குப் பெறவேண்டியுள்ளதெனவும், பாடசாலை நிகழ்வுகளில் மாணவர்கள் நிலத்தில் அமர்வதாகவும், ஆசிரியர்கள் வகுப்பறைகளிலிருந்து கதிரைகள் கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.
அவ்வேளையில் அங்கு நின்ற வணிகர் மன்றச் செயலாளரும் சாவகச்சேரி சிவா ரேடிங் கொம்பனி உரிமையாளருமான வை.சிவராசா சாவகச்சேரி லக் ஷ்மி ரேடேர்ஸ் உரிமையாளர் சு.பாக்கிய நாதன், சாவகச்சேரி ஸ்ரார் ஹோட்டல் உரிமையாளர் வே.சிவநீதன் ஆகியோர் தாமாக முன்வந்து தலா 100 பிளாஸ்ரிக் கதிரைகள் வீதம் வழங்குவதாக உறுதியளித்தனர் எனக் கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமாரன் தெரிவித்தார். (த-9)

# யாழ். மத்திய கல்லூரி அதிபரின் அறிவிப்பு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி கற்று 2019ஆம் ஆண்டு உயர்தரம் பயிலவிருக்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கும், புதிதாக அனுமதி பெற்ற மாணவர்களின் பெற்றோர்களுக்குமான கலந்துரையாடல் எதிர்வரும் 15ஆம் திகதி இடம்பெறும் என்று பாடசாலை அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் அறிவித்தார்.
அத்துடன் இதுவரை புதிய அனுமதிக்காக விண்ணப்பிக்காத மாணவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சை சான்றிதழ், கல்வி கற்ற பாடசாலையின் அதிபரின் நற்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் போன்ற ஆவணங்களுடன் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (வ-8)

# சிறுபோக உரமானியப் பதிவுகள் சண்டிலிப்பாயில் இன்று ஆரம்பம்

சண்டிலிப்பாய், மே 3
வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் கமநல பிரிவுக்கு உட்பட்ட சிறு போக பயிர்ச் செய்கையாளர்களுக்கு உர மானியம் விரைவில் வழங்கப்படவுள்ளது.
மேட்டுநிலம் தவிர்ந்த வயல் நிலங்களில் சிறுபோகச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் இன்று 3ஆம் திகதி புதன்கிழமை முதல் கமநல சேவை நிலையத்தில் பதிவுகளை விரைந்து மேற்கொள்ளுமாறு கமநல சேவைகள் நிலைய பெரும்பாக அலுவலர் கோ.கோகுலன் கேட்டுள்ளார்.
"இதற்கென வலய ரீதியாக அலுவலர்கள் பிரிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் காலம் தாழ்த்தாது உடனுக்குடன் பதிவு மேற்கொள்ளலாம். மேற்படி பதிவுகள் எதிர்வரும் 10ஆம் திகதி வரை இடம்பெறும்.
கடந்த பெரும்போக காலத்தில் நெற்பயிர்ச்செய்கையின்போது உரமானியத்துக்குப் பதிவுகளை மேற்கொள்ளத் தவறியவர்களுக்கு சிறப்பு பதிவுகள் மேற்கொள்ளப்படும்.
எனவே கடந்தகாலத்தில் பதியத் தவறியவர்கள் அடையாள அட்டையின் நிழற்பிரதிகள் 3, வங்கிப் புத்தக நிழற்பிரதிகள் 3, பாஸ்போட் படம் 3 மற்றும் உறுதி ஆவணங்களுடன் வருகை தர வேண்டும்" என்று கமநல கேந்திர நிலைய பெரும்பாக அலுவலர் கோ.கோகுலன் கேட்டுள்ளார்.
இதேவேளை, காரைநகர் கமநல கேந்திர நிலையத்துக்கு உட்பட்ட விவசாயிகளுக்கும் இன்று 3ஆம் திகதி முதல் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை உரமானியத்துக்கான பதிவுகள் இடம்பெறும் என பெரும்பாக அலுவலர் மேலும் தெரிவித்தார். (வ-50)

# இருபாலை கிழக்குக்குத் தினமும் 2 தடவை குடிதண்ணீர் வழங்கல்

யாழ்ப்பாணம், மே 3
இருபாலை கிழக்குப் பிரதேச மக்களுக்குத் தற்போது தினமும் இரண்டு தடவைகள் குடிதண்ணீர் வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அருகில் அமைக்கப்பட்ட தாங்கி மூலம் நிலத்தடிக்குழாய் ஊடாக இந்தக் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று வலி.கிழக்குப் பிரதேச சபை தெரிவித்தது.
தற்போது வரட்சியான காலநிலை நிலவுவதால் மக்கள் தமக்கு மேலதிகமான குடிதண்ணீர் தேவைப்பட்டால் அதற்கான கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் தண்ணீர் வழங்கப்படும்.
அதனைவிட இந்தப் பகுதியில் ஏற்கனவே தாங்கி ஊடாக விநியோகிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகமும் சீர்செய்யப்படும்.
குடிதண்ணீர் தேவைப்படும் இடங்களில் இந்தத் தாங்கி வைக்கப்பட்டு விநியோகம் மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனப் பிரதேச சபை வட்டாரங்கள் கூறின. (த-17)

# சாவகச்சேரி வணிகர் மன்றத்தால் மாணவர்களுக்குக் கல்வி நிதியுதவி



சாவகச்சேரி, மே 3
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 38 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டமும் மாணவர்களுக்கான கல்வி மேம்பாட்டு நிதி வழங்கலும் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

மன்றத் தலைவர் ந.சிவபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாகத் தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்கள் 100 பேருக்கு மன்றத்தினால் மேற்கொள்ளப்படும் 26 நிதியங்களிலிருந்து கல்வி மேம்பாட்டு நிதிகளும் மன்ற உறுப்பினர் மர்ஹூம் எம் எச்.எம்.மஹ்றூப் நினைவாக ஐந்து முஸ்லிம் மாணவர்களுக்குக் கல்வி நிதியும், மன்றின் ஏனைய நிதியங்க ளான மாற்றுவலுவுள்ளோர் நிதியம் கைம்பெண் நிதியம் ஆகியவற்றால் 56 மாணவர்களுக்கு மாதாந்த கல்வி மேம்பாட்டு நிதியும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்ற உறுப்பினர் தெய்வேந்திரம் குடும்பத்தினர் நேற்று மேலும் ஒரு மாற்றுவலுவுள்ளோருக்கான நிதியத்துக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கான நிதியை வழங்கினர். மன்றச் செயலாளர் வை.சிவராசா தனது மாமனாரான சின்னத்தம்பி நினைவாக மன்றத்தில் மேலும் நிதியத்தை ஆரம்பிக்க ஒரு லட்சம் ரூபாவை வழங்கினார். மன்றத்தில் ஏற்கனவே 26 கல்வி மற்றும் கைம்பெண் மாற்றுவலுவுள்ளோர் நிதியங்களுடன் மேலும் பலர் நிதியங்களை வழங்கவுள்ளனர் எனச் செயலாளர் தெரிவித்தார்.

(த-9)

# யாழ். சிறையில் அரசியல் கைதியை பார்வையிட அனுமதி மறுப்பு

## பெரும்பான்மையின அதிகாரிகள் தடுத்தனர் என்று குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 3
யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதியைப் பார்வையிடச் சிறைச்சாலையிலுள்ள பெரும்பான்மையின அதிகாரிகள் அனுமதி மறுத்தனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்த விடயத்தில் சிறைச்சாலைகள் அமைச்சர் சுவாமிநாதன் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் 1996 ஆம் ஆண்டு 17 வயதாக இருக்கும் போது கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவர் மத்திய வங்கி குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர் என்று குற்றச்சாட்டப்பட்டு இன்றுவரை தடுத்து வைக்கப்பட்டுள்ளார். மகசின் சிறைச்சாலையிலிருந்து அவர் சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். அவரைப் பார்வையிட 6 மாதங்களுக்கு ஒரு தடவையே அனுமதி வழங்கப்படுகிறது.

அதன்படி நேற்று அவரைப் பார்க்க அவரது சகோதரி யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குச் சென்றுள்ளார்.

அங்குள்ள பெரும்பான்மையின அதிகாரிகள் அவரைச் சந்திக்க அனுமதி வழங்காது கைதியின் சகோதரியைத் திருப்பி அனுப்பியுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்தார்.

இந்த விடயத்தை ஊடகம் மூலமாக அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்கிறோம். இந்த விடயத்தில் அமைச்சர் சுவாமிநாதன் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். கைதிகளைப் பார்வையிடுவதில் உள்ள இடையூறுகளை நீக்கவேண்டும் என்று கைதியின் சகோதரி மேலும் கோரினார்.

(த-4)

# காலாவதியான பொருள்கள் விற்றவர்களுக்குத் தண்டம்

தென்மராட்சி, மே 3
திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த ஐந்து வர்த்தகர்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட விலையை விடக் கூடுதல் விலைக்குப் பொருள்களை விற்பனை செய்த வர்த்தகருக்கும் சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 26ஆம் திகதி தண்டம் விதிக்கப் பட்டது.

யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அலுவலர்கள் கடந்த மாதம் தென்மராட்சி கிழக்குப் பகுதியில் நடத்திய திடீர் பரிசோதனைகளின் போது திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த மற்றும் நிர்ணய விலையை விடக் கூடுதல் விலைக்குப் பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக அதிகார சபையின் பொறுப்பதிகாரியினால் வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளைத் தனித்தனியாக விசாரித்த நீதிவான், வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த ஐந்து வர்த்தகர்களுக்கு தலா 9 ஆயிரம் ரூபா வீதமும், நிர்ணய விலையை விடக் கூடுதல் விலைக்கு பொருள்களை விற்பனை செய்த வர்த்தகருக்கு 6 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்தார்

இதேவேளை, அனுமதிப் பத்திரமின்றி வீடுகளில் கூடுதலாகக் கள் வைத்திருந்த ஆறு தொழிலாளர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தார். சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது தண்டம் விதிக்கப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கொடிகாமம் பொலிஸாரால் போக்குவரத்து விதிமுறை களை மீறி வாகனங்கள் செலுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டுக்களுடன் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளை விசாரித்த நீதிவான் ஐந்து பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும் ஒருவருக்கு 9 ஆயிரம் ரூபாவும் மற்றொருவருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதித்தார்.

(த-9)

# அத்துலத்முதலியின் படுகொலை பற்றிய நூல் இன்று வெளியீடு

கொழும்பு, மே 3
ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரான லலித் அத்துலத்முதலியின் படுகொலை பற்றிய முழுமையான தகவல்கள் அடங்கிய நூல் இன்று வெளியிடப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராக இருந்த லலித் அத்துலத் முதலி, ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசில் பதில் பாதுகாப்பு மற்றும் தேசிய பந்தோபஸ்து அமைச்சராகப் பதவி வகித்தவர்.

முதலாம் கட்ட ஈழப்போரை ஒடுக்குவதில் முன்னின்று செயற்பட்ட இவர் பின்னர், ரணசிங்க பிரேமதாசவுடன் ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற கட்சியை உருவாக்கினார்.

1993ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், லலித் அத்துலத்முதலி தேர்தல் பரப்புரையில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட அதேவேளை, அப்போதைய அரச தலைவர் பிரேமதாச மீதும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இந்த நிலையில், 'லலித் அத்துலத்முதலி படுகொலை - முழு உண்மை' என்ற தலைப்பிலான நூல் வெளியிடப்படவுள்ளது. தடயவியல் நிபுணர் ரவீந்திர பெர்னான்டோ இந்த நூலை எழுதியுள்ளார். இந்த நூலில், லலித் அத்துலத் முதலியின் படுகொலை தொடர்பாக ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் அறிக்கையும் இடம்பெற்றுள்ளது. கொழும்பில் நடைபெறவுள்ள நிகழ்வில், சட்டமா அதிபர் ஜெயந்த ஜெயசூரிய இந்த நூலை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

(த-5)

# மன்னார் ஆயரை சந்தித்தார் விக்கி



யாழ்ப்பாணம், மே 3
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், மன்னார் ஆயர் இல்லத்துக்கு நேற்றுச் சென்று ஆயரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். சமயங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கில் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனும் அவருடன் சென்றிருந்தார். மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர், பங்குக் குருக்கள், இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்தின் மன்னார்க் கிளையின் தலைவர் உள்ளிட்ட பலர் அதில் கலந்து கொண்டனர். அதன் பின்னர் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையையும் முதலமைச்சர் சந்தித்துக் கலந்துரையாடினர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(த-4)

# வன அதிகாரிகள் மீது தர்மபுரத்தில் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 3
கிளிநொச்சி மாவட்ட வனப் பாதுகாப்பு அதிகாரிகள் 2 பேர் மீது தாக்குதல் நடத்தியதோடு, அவர்களின் பணிக்கும் இடையூறு ஏற்படுத்தப்பட்டது என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

"சம்பவம் தர்மபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று பேரை வனப் பாதுகாப்பு அதிகாரிகள் நேற்றுமுன்தினம் கைதுசெயதனர். கைதுசெய்யப்பட்டவர்களை அழைத்துச் சென்றபோது, வேறு சிலர் வன பாதுகாப்பு அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தினர்" என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் ஒருவரையும், கைதுசெய்யப்பட்ட நிலையில் விடுவிக்கப்ப ட்டவர்களில் 2 பேரையும் பொலிஸார் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-4, 101)

# வீட்டுக் கதவு விழுந்து 8 மாதக் குழந்தை சாவு

யாழ்ப்பாணம், மே 3
வீட்டுக் கதவு விழுந்ததில் அதற்குள் அகப்பட்ட 8 மாத குழந்தை உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு வெலிஓயாவில் நிகவெவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது.

குழந்தையின் தந்தை அருகில் உள்ள குளத்துக்குச் சென்றுள்ளார். தாய் வீட்டு முற்றத்தில் வேலை செய்துகொண்டிருந்தார் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. குழந்தையின் உடலம் விசாரணைகளின் பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(த-4)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.**www.ambafrance-lk.org**

**ஆரம்பம் - சில தினங்களில்**

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்** 1936.10.12 — **மறைவு** 2015.04.26

**வீரகத்தி முருகையா**
(முருகையா அப்பா)
**(திதி - சப்தமி)**

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் வார்த்தைகள் எங்கள் காதில் ஒலித்துக்கொண்டு இருக்கின்றது அப்பா உங்கள் ஆத்மா சாந்தி அடைய வைரவரை வேண்டுகின்றோம்.

**உங்கள் பிரிவால் வாடும் பிள்ளைகள்**
**பன்னாலை. M.ஜெயராணி (பிரதேச வைத்தியசாலை. அளவெட்டி)**

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**இருவருக்கு மகனாக** 07.05.1920
**இறைவனுக்கு மகனாக** 12.05.2008

**அமரர் தம்பு இரட்ணலிங்கம்**

காலத்தைப் பொன்னாகக் கருதி.கடமைகளைக் கண்ணாக
கருதி வாழ்ந்தீர்கள் ஐயா..........
கண்ணை இமை காப்பது போல் எம்மைக் காத்து
வந்தீர்கள் ஐயா........
கணப்பொழுதில் எம்மைப் பிரிந்து எம்மையெல்லாம் சோகத்தில்
ஆழ்த்தினீர்கள் ஐயா ....
காலன் உங்களை அணுகாமல் காக்கும் சக்தியின்றிக்
காலமெலாம்.
கலங்குகின்றோம் ஐயா......
**ஐயா உங்களின் ஆத்மா இறைவனடியில் சாந்திபெற வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**127,கோயில் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**தோற்றம்** 05.07.1942
**மறைவு** 03.04.2017

கடந்த 03.04.2017
திங்கட்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்ப விளக்கு
**திருமதி**
**பத்மலீலாவதி**
**தியாகராசா**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (03.05.2017) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இணுவில் தெற்கு, இணுவில். குடும்பத்தினர்.**

# ஆரியகுளத்தைப் பாதுகாக்க மக்கள் முன்வரவேண்டும்

*யாழ்ப்பாண மாநகர சபை கோரிக்கை*

யாழ்ப்பாணம்,மே 3
பழமைவாய்ந்த ஆரியகுளத்தை அழிவில் இருந்து பாதுகாப்பதற்கு மக்கள் முன்வரவேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகர சபை கோரியுள்ளது.
மாசடைந்து வரும் யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள ஆரியகுளம் தற்போது துப்புரவு செய்யப்பட்டுள்ளதுடன் குளத்தைச் சுற்றிக் காணப்பட்ட செடிகள், புற்கள் என்பன வெட்டி அழிக்கப்பட்டுள்ளன.
இந்தக் குளத்தை மாசடைவதில் இருந்து பாதுகாக்க மக்கள் முன்வர வேண்டும் என்று துண்டறிக்கை மூலம் மக்களிடம் கோரப்பட்டுள்ளது.
"விழிப்புணர்வு ஊட்டும் துண்டறிக்கைகள் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. குளத்தை அண்டிய வெள்ள வாய்க்காலை துப்புரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கால்வாய் ஊடாக குளத்துக்கு கழிவு நீர் உட்செல்வது தடுக்கப்பட்டு உள்ளது" என்று மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (வ-17)

# சாவ. கைத்தொழில் வணிகர் மன்றத்தின் நிர்வாகிகள் தெரிவில் புதிய விதிமுறை

சாவகச்சேரி, மே 3
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் நிர்வாகிகள் தெரிவுகள் 3 வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெற வேண்டும். வருடாந்தம் பொதுக்கூட்டத்தை நடத்தி உரிய கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வழமை போன்று நிதியங்கள் மூலம் கிடைக்கும் நிதிகளை மாணவர்களின் கல்வி மேம்பாடு, பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் சிறப்புத் தேவையுடையவர்களுக்கான உதவித் திட்டங்கள் போன்றவற்றுக்கு வழங்கப்படல் வேண்டும்.
இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.
இது தொடர்பில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் செயலாளர் வை.சிவராசா தெரிவித்ததாவது:
கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த நடப்பு வருடத்துக்கான கூட்டத்தில் நிர்வாகிகள் தெரிவு தொடர்பான விடயம் தலைவரால் முன்மொழியப்பட்டபோது, உறுப்பினர் மு.பரமேஸ்வரன் நிர்வாகிகள் தெரிவை வருடாவருடம் நடத்தாமல் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடத்தலாமென்ற கருத்தை முன்வைத்தார். புதிதாகத் தெரிவு செய்யப்படும் நிர்வாகம் தொடர்ச்சியாக 2 வருடங்கள் தமது செயற்பாட்டை மேற்கொண்டு அதன் பின்னர் முற்றுமுழுதாக புதியவர்களைக் கொண்ட நிர்வாகம் தெரிவு செய்யப்படல் வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். இதனை ஏற்றுக் கொண்ட பொதுச் சபை நிர்வாகத் தெரிவு 3 வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் என்றும் வழமை போல வருடாந்தம் பொதுக் கூட்டத்தை நடத்தி வருடத்துக்கான கணக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்து பொதுச் சபையின் ஒப்புதல் பெறவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.
அந்த நிகழ்வில் மாணவர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் சிறப்புத் தேவையுடையவர்களுக்கான உதவித் திட்டங்கள் வழங்கப்படும் என்று சபை அறிவித்தது.
இதன் பிரகாரம் கடந்த வருடம் இயங்கிய நிர்வாகக் குழு தொடர்ந்து இயங்கும் என்றும் அடுத்த நிர்வாகிகள் தெரிவு 3 வருடங்களின் பின்னர் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு இடம்பெறும் என்றும் பொதுச் சபையால் தீர்மானிக்கப்பட்டது - என்றார். (வ-9)

**சேவிஸ் வேலையாள் தேவை**
வாகன சேவிஸ் வேலை தெரிந்தவர்களும் பழக விரும்புவோரும் உடன் தேவை.
**தொடர்பு: 077 790 2427**

**தேவை**
வெறும் காணி கொக்குவில். சம்பியன்லேன். கோண்டாவில். உரும்பிராய். இராஜவீதி. இருபாலை ஆகிய இடங்களில் வாடகைக்குத் தேவை.
**தொடர்பு: 075 656 3907**

**பிரத்தியேக வகுப்புகள்**
தரம் 06 தொடக்கம் - O/L வரையானதமிழ்மொழி மூலம் கணிதவகுப்புக்கள் யாழ். நகரப்பகுதியில் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு -
(CS/003687) T . P : 077 1320 390

**வேலையாள்கள் தேவை**
கொழும்பில் உள்ள பிரபல வணிகநிறுவனத்தில் சிட்டை எழுதுனர்.காசாளர். உதவியாளர்கள் உடன் தேவை.தங்குமிடம் .உணவு வழங்கப்படும்.
**077 325 8492** (cs 3683)

**வருடாந்த பொதுக் கூட்ட அறிவித்தல்**
அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர் சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 14.05.2017 ஞாயிற்றுக் கிழமை மாலை 5.30 மணிக்கு தொண்டர் சபை அலுவலகத்தில் இடம்பெறும் அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுநிற்கின்றோம்.
**தலைவர்.** CS 3680 **செயலாளர்.**

# நல்லைக்குமரன் வெள்ளி மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,மே 3
யாழ்ப்பாண மாநகரசபை சைவ சமய விவகாரக்குழுவின் 2017 ஆம் ஆண்டுக்கான நல்லைக்குமரன் 25 ஆவது வெள்ளி மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரும் சைவ சமய விவகாரக்குழு தலைவருமான பொ.வாகீசன் அறிவித்துள்ளார்.
இதற்கான ஆக்கங்களின் கட்டுரைகள் 5 தொடக்கம் 7 பக்கங்களில் அமைதல் வேண்டும். ஏற்கனவே நல்லைக் குமரன் மலரில் வெளிவந்த கட்டுரைகள், வேறு புத்தகங்களில் வந்த ஆக்கங்கள் என்பனவற்றைத் தவிர்க்க வேண்டும். ஆக்கங்களின் இடது பக்க மேல் மூலையில் நல்லைக்குமரன் மலர் 25 எனக் குறிப்பிட்டு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதம பதிப்பாசிரியர், நல்லைக்குமரன் மலர் 25, 21/3ஏ இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர் மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அல்லது NALLAIKKUMARAN@GMAIL.COM என்னும் மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம். ஆக்கங்களை இறுவட்டுக்கள் மூலமும் அனுப்பி வைக்கலாம் எனவும் அறிவித்துள்ளார். (ஜ - 10)

# எந்திரவியல் பயிலுநர்களுக்கு விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம்.மே 3
கட்டுநாயக்கவில் உள்ள எந்திர தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் 4 வருட தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா பயிற்சி நெறிக்கு எந்திரவியல் சிறப்பு பயிலுநர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று மாவட்ட அலுவலர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.
ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் கணித பாடங்களில் சித்தியடைந்த 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பங்கள் ஜூன் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.
இது தொடர்பான விபரங்களை ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி வர்த்தமானியிலும். WWW.IET.EDU.LK என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.
பயிற்சி நெறிக்கான விண்ணப்பப்படிவத்தை தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, இல 44, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவித்துள்ளார். (ஜ - 10)

சீட்டிழுப்பு இலக்கம்: 131
சீட்டிழுப்பு திகதி: 02.05.2017
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 84,979,440/-
Q 29 34 60 75

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம்: 561 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 02.05.2017
வெற்றி இலக்கங்கள்
12 14 37 47 I
ரூ. 26,573,411/-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 02.05.2017 | வெற்றிவாரம் 2127 | வர்ணம் நீலம்
கடகம் 04 15 23 59
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2, 946, 244/=
2017.05.05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.

## சுட்டிபுரம் அம்மன் ஆலயத்துக்கு புதிய நிர்வாக சபை

வரணி, மே 3

வரணி சுட்டிபுரம் அம்மன் ஆலய நிர்வாக சபையின் ஒன்றுகூடலும் நடப்பு ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆலய முன்றிலில் இடம்பெற்றது.

தலைவர் ம.குகதாசன், செயலாளர் சி.சிவச்சந்திரன், பொருளாளர் கா.ராஜ்மோகன் ஆகியோரும் 9 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். ஆலயத்தின் 14 திருவிழா உபயகாரர்களிலிருந்து நிர்வாக சபையினர் தெரிவு செய்யப்பட்டனர். தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி பாபு தேவநந்தினி அதிதியாகக் கலந்து கொண்டார். பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கே.முகுந்தன் கிராம அலுவலர் ஆகியோரும் கூட்டத்தில் பங்கேற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-122)

# தெவிநுவர வெளிச்ச வீடு நாளை திறப்பு

கொழும்பு, மே 3

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தெவிநுவர வெளிச்ச வீடு மக்கள் பார்வைக்காக நாளை வியாழக்கிழமை துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவால் திறந்து வைக்கப்படும் என்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது,

இலங்கை துறைமுக அதிகார சபையினால் நடத்தப்படுகின்ற தெவிநுவர வெளிச்ச வீடானது 1887ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. இது சிறிமத் ஜேம்ஸ் நிக்கலஸ் டக்லஸினால் நிர்மா ணிக்கப்பட்டது.

இந்த வெளிச்ச வீட்டை நிர்மாணிக்கும் பொருட்டு பிரிட்டன் பவுண்ஸ் 30 ஆயிரம் செலவிடப்பட்டது. 7 மாடிகளைக் கொண்ட இதன் உயரம் 49 மீற்றராகும். இங்கு 196 படிகள் உள்ளன. இலங்கையிலுள்ள நான்கு பன்னாட்டு வெளிச்ச வீடுகளுள் இதுவும் ஒன்றாகும்.

2000 ஆம் ஆண்டு இலங்கை துறைமுக அதிகார சபையால் இது மறுசீரமைக்கப்பட்டது. பாதுகாப்பு பிரச்சினைகள் மற்றும் உட்பிரவேச வாயிலில் காணப்பட்ட இக்கட்டான நிலை காரணமாக மக்கள் பார்வைக்காகத் திறக்கப்படவில்லை.

அனைத்துப் பிரச்சினைகளையும் உடனடியாக தீர்த்து தெவிநுவர வெளிச்ச வீட்டைத் திறந்து வைக்குமாறு அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தன்னுடைய அதிகாரிகளுக்குப் பிறப்பித்த உத்தரவுக்கமைவாக இந்த வெளிச்சவீடு மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்படவுள்ளது. என்றுள்ளது. (ஐ-5)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 3

யாழ்ப்பாணம் முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப கூட்டுறவு உடன்படிக்கையின் சவால்கள் தொடர்பான கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வளவாளராக பேராசிரியர் றொகான் சமரஜீவா கலந்துகொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-8)

# 12 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி

வேள்ட்விசன் நிறுவனத்தால் வரணி இடைக்குறிச்சி மேற்கில் 12 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களை உப உணவுச் செய்கையை ஊக் குவிக்கும் முகமாக 8 பேருக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகள் என்பனவும் 4 பேருக்கு தையல் பயிற்சியை ஊக்குவிக்குமுகமாக தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. வேள்ட் விசன் நிறுவன அதிகாரி றொசா றியோ தலைமையில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த உதவிகள் இடைக்குறிச்சி மேற்கு மாதர் கிராம அபி விருத்திச் சங்கத்தின் ஊடாக வழங்கப்பட்டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-122)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராஜலக்ஷ்மி கனகரத்தினம்



யாழ். அளவெட்டி வேளாவையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை நகரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலக்ஷ்மி கனகரத்தினம் 01.05.2017 திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் (CTB) அன்பு மனைவியும் காலஞ்சென்ற குணசேகரம் (அளவெட்டி), தனசேகரம் (வானம் - அளவெட்டி), திருமதி வி.ஜெகதீஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை - அளவெட்டி), Dr.சந்திரசேகரம்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி துஷ்யந்தினி இராஜதுரை (ADE, உதவிக்கல்விப் பணிப்பாளர், திருகோணமலை), சேகரன்(கனடா), ஜெயந்தினி(திருகோணமலை), புவிசேகரன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராஜதுரை(திருகோணமலை), ஜனாதினி(கனடா), சிவசாந்தி(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் திருமதி துஷிற்றா பவீந்தர்(லண்டன்), திருமதி தனுஷாஜினி ரஜீவன் (Acc. Asst.Tokyo Co.plc), திருமதி.மோகனராஜி பிரதீபன்(ஜேர்மனி), திஷா, ஷான், அர்வின்(கனடா), தினேஷ்குமார், தர்மசீலன், மாதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கேஞ்சயன்(லண்டன்), பிரான்றூஹரிஷ் (திருமலை), மகிஷ்பன்(ஜேர்மனி) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை(04.05.2017) வியாழக்கிழமை இல.03, பிரதான வீதி, திருகோணமலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று மாலை 3 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக திருகோண்மலை, கடற்கரை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

தொடர்பு: 026 326 9343

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை (துரையர்) சங்கரப்பிள்ளை

(முன்னாள் இலட்சுமி ஸ்ரோர்ஸ் உரிமையாளர், சங்கானை)



ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை (துரையர்) சங்கரப்பிள்ளை (முன்னாள் இலட்சுமி ஸ்ரோர்ஸ் உரிமையாளர், சங்கானை) (02.05.2017) செவ்வாய்க் கிழமை கனடாவில் காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சங்கரப்பிள்ளை சிவலிங்கம்
(மகன் - லட்சுமி ஸ்ரோர்ஸ், சங்கானை)

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.
021 225 0978

## மரண அறிவித்தல்



### Dr.சங்கரப்பிள்ளை பத்மநாதன்

இளைப்பாறிய RMP

கருகம்பானையைப் பிறப்பிடமாகவும் இல. 1 - 55வது ஒழுங்கை வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பத்மநாதன் (இளைப்பாறிய RMP) அவர்கள் 01.05.2017 காலமானார். அன்னார் கருகம்பானையை சேர்ந்த காலஞ்சென்ற விஸ்வநாதன் சங்கரப்பிள்ளை (விதானை செல்லையா) சங்கரபிள்ளை வள்ளியம்மையின் சிரேஸ்ட மகனும் இளவாளையைச் சேர்ந்த சண்முக வடிவின் அன்புக் கணவரும், பாமினி, (London) Dr.செளமினி (London), பாலஸ்கந்தன் (London) நளாயினி (Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயனன், (London) Dr. மோகன் (இலண்டன்), திருவருட்செல்வி, (London) சங்கரன் (Canada) ஆகியோரின் மாமனாரும், ராம், சாம்பவி, அஸ்வின், கோபிகா, சிவாங், சிவிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ஞானதுரை, காலஞ்சென்ற வடிவாம்பிகை, காலஞ்சென்ற நகுலேஸ்வரி, லங்காதேவி, அம்பிகாதேவி ஆகியோரின் சகோதரரும், இளவாலையைச் சேர்ந்த சண்முகலிங்கம் காலஞ்சென்ற சண்முகராஜா, காலஞ்சென்ற சண்முகரட்ணம், காலஞ்சென்ற சண்முகராணி பத்மநாதன் மற்றும் சண்முகமலர் நாகேஸ்வரன் சண்முகேஸ்வரி தியாகராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்சசாலையில் 04.05.2017 காலை 8.30 மணியளவில் உற்றார் உறவினர் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 11 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று கல்கிசை மயானத்தில் 2.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்
மகன் (பாலஸ்கந்தன்) 00447985160388
மகள் செளமினி (இலண்டன்) 00447811208271
0718657357



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 | 01 |
| 09 | 05 |
| 1963 | 2017 |

### சிவசம்பு குமார்

பண்ணாகம் தெற்கை பிறப்பிடமாகவும், கிரிசிட்டி லேன், காங்கேசன் துறை, கொழும்பை வசிப்பிடமாகவும், தற்போது பண்ணாகம் தெற்கு, சுழிபுரத்தில் வசித்தவருமாகிய சிவசம்புகுமார் 01.05.2017 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் சிவசம்பு (குப்பிளான்) - கமலசரஸ்வதி (பண்ணாகம்) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், திரவியம், ரட்ணம் சுப்பிரமணியம் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் பெறாமகனும், உபாலி, பிறேமாவதி ஆகியோரின் மருமகனும், இனோக்காவின் அன்புக் கணவரும், சாந்தி, காலஞ்சென்றவர்களான சிவகுமார், லிங்கேஸ்வரி மற்றும் அனந்தி கிரிகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சபேஸ்வரன், சசிதரன், தீபா ஆகியோரின் மைத்துனரும், தர்ஷினி, சர்மிலா, தரிந்து ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம்

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தர்மகுலதேவி பொன்னுத்துரை



யாழ்ப்பாணம், இல. 19, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் இல.9/2, விஜயசேகர மாவத்தை, தெஹிவளை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மகுலதேவி பொன்னுத்துரை 29.04.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை கதிராசி தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் ஜீவராணி, சுரேஸ், டெய்சிராணி, ஜமுனாராணி, றமேஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்திக்குமாரன், றேக்கா, அருட்பிரகாசம், சிவநேசசிங்கம், கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்றவர்களான நேசராசா, அமிர்தலிங்கம் மற்றும் தர்மராணி, கேதீஸ்வரன் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சுரேந்திரன், ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரி, பரநிருபராணி, ஜெகநாதன், நாகேஸ்வரி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் வசந்தகுமாரி, சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜஸ்மின், சரண்யா, ராகவி, காருணியா, கிறிஸ்டீன், சங்கீதா, ஹரிஷா, ஷெரின், ரனிஷ்லவ் அருசன், தொமஸ்டீன் தில்ரோஷன், ஏஞ்சலின் தானியா, டில்சான், சமிந்தன், அபிஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 9/2, விஜயசேகர மாவத்தை, தெஹிவளை, கொழும்பில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. நல்லடக்க ஆராதனை நாளை (04.05.2017) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் வெள்ளவத்தை புனித லோறன்ஸ் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் தெஹிவளை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

9/2, விஜயசேகர மாவத்தை,
தெஹிவளை, கொழும்பு.

தகவல்:
குடும்பத்தினர்,
011 273 3217, 077 268 7843

மலேசிய முன்னாள் தூதுவர் மீதான தாக்குதல் விவகாரம்

# நீதிமன்றுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள் நிராகரிப்பு

கொழும்பு,மே 3
மலேசியாவின் முன்னாள் இலங்கைத் தூதுவராகப் பணியாற்றிய ஐ.அன்சாரின் மீது எல்.ரி.ரி.ஈ. டயஸ்போராவைச் சேர்ந்த சிலர் தாக்குதல் மேற்கொண்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் அந்நாட்டின் சேபேன்ஸ் நீதிமன்றில் தொடரப்பட்டிருந்த வழக்கை வேறொரு நீதிமன்றுக்கு மாற்றுமாறு சந்தேகநபர்கள் மூவரும் விடுத்திருந்த வேண்டு கோளை மலேசிய மேல் நீதிமன்றம் நிராகரித்தது என்று மலேசிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக சேபேன்ஸ் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட இந்த வழக்கை கோலாலம்பூர் நீதி மன்றுக்கு மாற்றுமாறு சந்தேகநபர்கள் விடுத்திருந்த வேண்டுகோளே மேல் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.

சேபேன்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்படுவதால் தங்களுக்கு ஏற்படக்கூடிய அபாயங்கள் பற்றி அந்த நீதிமன்றத்துக்கு நேரடியாகவே அறிவிக்கும் உரிமை எதிராளிகளுக்கு இருந்த போதிலும், வழக்கை வேறொரு நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு கேட்கும் உரிமை அவர்களுக்குக் கிடையாதென மேல்நீதிமன்ற நீதிபதி நூர்தீன் ஹசன் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் இலங்கையின் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மலேசியாவுக்குச் சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டிருந்த போது அவரை கோலாலம்பூர் பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் வைத்து வழியனுப்பி விட்டு வந்தபோது மலேசியாவின் முன்னாள் இலங்கைத் தூதுவர் அன்சார் தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது- என்றுள்ளது.

(ஐ)

## University of Jaffna – Sri Lanka
## Faculty of Management Studies & Commerce
## Master of Business Administration (MBA)
## Intake III – 2016/2017

### Extension of closing date for Applications

The Faculty of Management Studies & Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Master of Business Administration (MBA) - 2016/2017 and invites applications for the admission from qualified candidates. Details of the courses can be obtained from the Faculty of Management Studies & Commerce or via the internet on the Faculty website: http://www.maco.jfn.ac.lk/

**ELIGIBILITY REQUIREMENTS**

A candidate seeking admission to an MBA should possess any one or more of the following qualifications and should demonstrate a satisfactory level of English language proficiency:

i. A degree from a recognized University / Higher Education Institution

OR

ii. A Postgraduate Diploma from a recognized University or Higher Education Institution/ Professional Institution with a minimum of one year post qualifying managerial/ relevant experience.

OR

iii. At least any one of the following professional qualifications with three years managerial/ relevant experience:

* Chartered institute of marketing (CIM) UK
* Associate member of Chartered Institute of Bankers (ACIB) UK
* Associate member of Chartered Institute of Bankers (AIB) Sri Lanka
* Chartered Institute of Management Accountants (CIMA)
* Chartered Institute of Personnel and Development (CIPD)
* Association of Chartered & Certified Accountants (ACCA)
* Chartered Accountants (CA) Sri Lanka
* Certified Management Accountant (CMA) Sri Lanka
* Institute of Engineers (CIE) UK/Sri Lanka
* Institute of Chartered Secretaries and Administrators
* At least a three year Higher National Diploma in Accountancy/ Management/ Marketing obtained from Ceylon Technical College/ Advanced Technical Institute/ Advanced Technological Institute, Sri Lanka, etc.
* Attorney – at – Law

OR

iv. Any other academic/professional qualification(s) obtained from a recognized University/ Institute with a minimum of three years of post qualifying experience acceptable to the board of study and the senate of the University of Jaffna.

**PROGRAMME STRUCTURE**

Structure - Semester based Course Unit System
Semester duration - Each semester extends for 20 weeks
Duration - Two years
Medium of instruction - English

**COURSE FEE**

Total course fee would be LKR Three hundred and fifty thousand per student. This can be paid in two installments as given below:

| Detail | Year 1 | Year 2 |
|---|---|---|
| Registration / Renewal | LKR 10,000 | LKR 10,000 |
| Tuition fee | LKR 175,000 | LKR 125,000 |
| Examination fees | LKR 15,000 | LKR 15,000 |
| **Total** | **LKR 200,000** | **LKR 150,000** |

* Application Fees: LKR 2000/=

The closing date for applications has been extended up to 12.05.2017

**APPLICATION PROCEDURE**

Application form and Paying in voucher can be downloaded from the Faculty website at http://www.maco.jfn.ac.lk/ or it can be obtained from MBA Office, Faculty of Management Studies & Commerce, University of Jaffna. Duly completed applications should be forwarded to "Coordinator, MBA programme, Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Thirunelveli" by registered post or submit it in person at the MBA Office, Faculty of Management Studies & Commerce on or before the closing date. Indicate "Application for MBA Programme" in the top left hand corner of the envelope.

More relevant information could be obtained through 021 221 6394.

Registrar
University of Jaffna, Sri Lanka.

(aja in/ 1887) (11)

## புனித சூசையப்பர் ஆலய மாபெரும் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்


முதலாம் பரிசு - செபஸ்ரியாம்பிள்ளை - சீட்டு இலக்கம் - 19312
2ஆம் பரிசு - R.M. ஜோய் - சீட்டு இலக்கம் - 17008
3ஆம் பரிசு - A. நிலா - சீட்டு இலக்கம் - 7583

முதலாவது ஆறுதல் பரிசு - சாந்தரூபன் - சீட்டு இலக்கம் - 14675
2ஆவது ஆறுதல் பரிசு - C. கஜினி - சீட்டு இலக்கம் - 13388
3ஆவது ஆறுதல் பரிசு - திவாகரன் வரிஷா - சீட்டு இலக்கம் 2303
4ஆவது ஆறுதல் பரிசு - யூ.ஞானறஞ்சினி - சீட்டு இலக்கம் - 21089
5ஆவது ஆறுதல் பரிசு - V.டிலக்சிகா - சீட்டுஇலக்கம் - 85156
6ஆவது ஆறுதல் பரிசு - யூ.ஞானறஞ்சினி - சீட்டு இலக்கம் - 13499
7ஆவது ஆறுதல் பரிசு - த.தவபாக்கியம் - சீட்டு இலக்கம் - 14705
8ஆவது ஆறுதல் பரிசு - த.வாகினி - சீட்டு இலக்கம் - 13816
9ஆவது ஆறுதல் பரிசு - A.றொபினா - சீட்டு இலக்கம் - 10499
10ஆவது ஆறுதல் பரிசு - கபிலஸ் - சீட்டு இலக்கம் - 79414

மேற்குறிப்பிட்ட அதிஷ்டசாலிகள் 15.05.2017 இற்கு முன்னர் தங்களுக்கான உரிய ஆதாரங்களைக் காண்பித்து பொருள்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**077 869 7748, 077 181 3958**

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

யாழ்.மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மல்லாவி 4ஆம் யூனிற்றை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை 30.04.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகரத்தினம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புஸ்பராணியின் அன்புக் கணவரும் சாந்தி(லண்டன்), சாந்தகுமார்(லண்டன்), நந்தகுமார் (இலங்கை), வசந்தகுமார்(இலங்கை), வசந்தி(லண்டன்), ரவிக்குமார்(பெல்ஜியம்), ஜெயக்குமார் (கனடா), ராசகுமார்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, வேலாயுதப்பிள்ளை மற்றும் மகாராசா, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அற்புதநேசன், சச்சிதானந்தம், சுஜேத்தா, இராசநளினி, கோமதி, கவிதா, கனிசக்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கோணேசபிள்ளை, தனபாலசிங்கம் காலஞ்சென்ற மகாலட்சுமி, சோமேஸ்வரி, புஷ்பநாதன், நவரத்தினம், சத்தியபாமா ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிவேதா, நிரோஜன், திலக்சா, திஸான், தட்சா, மேதரன், அபிசன், அபிநயன், அனுசாந், நிலேஸ், நிதேஸ், நிகேஸ், அபினா, ஆதேஸ், கவின், காருசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(04.05.2017) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 12.30 மணியளவில் திருநகர் பாலியாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வீட்டு முகவரி**
**இல.341, 4ஆம் யூனிற்,**
**யோகபுரம், மல்லாவி, முல்லைத்தீவு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 390 2331**

# ஈழத்தின் மிகப்பெரும் ஊடகப் படுகொலை நினைவேந்தல்


வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்


வடக்கு மாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி


வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம்.


வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன்




உதயன் குழுமத்தலைவரும், யாழ்.- கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ. சரவணபவன்.


ஊடகப் பணியாளர் பாஸ்கரனின் உருவப் படத்துக்கு அவரது அத்தை ஈகச்சுடரேற்றும் போது...


உதயன் பொதுமுகாமையாளர் ரட்ணசிங்கம்....


உதயன் நிர்வாக முகாமையாளர் அன்பானந்தன்




வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன்


வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்


ஊடகவியலாளர் ரஜிவர்மனின் தாயார்...


ஊடகவியலாளர் அரசரட்ணம்


சுயாதீன ஊடகவியலாளர் சி.மயூரதன்


ஊடகப் பணியாளர் பாஸ்கரனின் துணைவியார்...


சுயாதீன ஊடகவியலாளர் ந.லோகதயாளன்....


நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள்....

# ஒருபோதும் திரும்பப் பெறமுடியாத பகிரப்பட்ட அதிகாரங்களே தேவை!

## வடக்கு மாகாண அவைத் தலைவர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 3

கொழும்பு அரசால் ஒருபோதும் திரும்பப் பெறப்பட முடியாத அளவுக்குப் பகிரப்பட்ட அதிகாரத்தைத்தான் நாம் தீர்வாகக் கேட்கிறோம் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

உதயன் பத்திரிகைப் பணியாளர்கள் படுகொலை மற்றும் ஊடக நிறுவனம் மீதான தாக்குல் நடத்தப்பட்டதன் 11ஆவது ஆண்டு நினைவாக நடத்தப்பட்ட வேட்கை எனும் ஈழத்தின் மிகப்பெரும் ஊடகப்படுகொலை தினத்தில் தலைமை அதிதியாகக் கலந்துகொண்டு 'புதிய அரசமைப்பு மக்கள் பிரதிநிதிகள்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:

உதயன் ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் நான் வந்து அதன் ஒரு திரியை ஏற்றி ஆரம்பித்து வைத்தேன். அப்போது யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளராக இருந்தேன். தற்போதும் ஒரு திரியை ஏற்றி வைத்துள்ளேன். உதயனுக்கும் எனக்கும் நிறையவே இணக்கப்பாடும் உள்ளது அதுபோல் பிணக்கும் உள்ளது. அப்படி இருந்தும் நான் உதயனுடைய வாசகன் என்ற நிலையில் இருந்து என்றும் மாறியதில்லை.

### மண்ணின் உரிமைக் குரல்

உதயன் இந்த மண்ணின் உரிமைக் குரலாக அன்றும் இன்றும் இருக்கின்றது என்ற காரணத்தால் என்னை மிகவும் பாதித்த கருத்துக்கள் வந்த போதும் சிரித்துக்கொண்டு இதனை ஏற்றுள்ளேன். உதயன் இந்த மண்ணுக்காக மக்களுக்காக எங்களுடைய சுதந்திரத்துக்காக, விடுதலைக்காக ஆற்றிய, ஆற்றுகின்ற பணி மிக மகத்தானது.

அரசியல் வரலாற்றில் மன்னர் ஆட்சி முடிந்து மக்களாட்சி வந்தபோது அதனுடைய சட்டவாக்கம், நீதித்துறை, நிறைவேற்றுத்துறை என்ற மூன்றோடு நான்காவதாக மக்களாட்சியின் ஒரு தூண் என்றே ஊடகங்கள் வர்ணிக்கப்படுகின்றன. அந்தப் பணிகளைச் செவ்வனே செய்கின்றபோது ஊடகங்கள் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகின்றன. அத்தகைய விமர்சனங்களைத் தாங்கிக்கொள்ளமுடியாதவர்கள், பொறுத்துக்கொள்ளமுடியாதவர்கள், செரிமானித்துக்கொள்ள முடியாதவர்கள் கடைசியில் ஊடகங்கள் மீது ஆயுதங்களைப் பாவிப்பது உண்டு.

இது தொடர்பில் உதயனுக்கு பல்வேறு அனுபவங்கள் உண்டு. ஊடகங்கள் என்றால் என்னுடைய பார்வையில் ஊடு, அகம் என்றே நான் பார்க்கிறேன். உள்ளே ஊடுருவிச் சென்று பார்ப்பது என்று அதன் பொருள். உள்ளே ஊடுருவி பல சர்ச்சைகளையும் அந்தப் படியே சொல்வதனால் ஆபத்து வருகின்றது. ஆனாலும் அவற்றையெல்லாம் தாங்கி நிற்கும் உதயன் ஊடகத்துக்குப் பாராட்டுக்கள்.

### புதிய அரசமைப்பு முயற்சி

தற்போதைய அரசமைப்பு முயற்சியில் வடக்கு மாகாண சபை ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுத்தது. எங்களுடைய முன்மொழிவுகளை மாகாணசபை ஏற்றுக்கொண்டு அதனை முன்வைத்தபோதும் அதில் முக்கியமாகப் பங்காற்றியவர்கள் மூன்று பேர். முதலமைச்சர், சிவாஜிலிங்கம் மற்றும் நான் ஆகிய மூவருமாகத்தான் அதனைத் தயாரித்தோம். பல நாள்களாக இருந்து ஆராய்ந்து, அதை ஒருங்கிணைத்து ஆவணப்படுத்தியது நான். நீங்கள் ஒருமுறை எங்களுடைய முன்மொழிவுகளை மீட்டுப்பாருங்கள், அதில் தெளிவான கருத்துக்களை முன்வைத்துள்ளோம்.

ஆட்சிமுறை ஒற்றையாட்சியா கூட்டாட்சிமுறையா, வடக்கு, கிழக்கு இணைப்பு இதெல்லாம் பற்றிப் பேசியுள்ளோம். நாங்கள் அதிகாரங்களைப் பரவலாக்குவது (டி சென்ற லைசேசன்) பற்றியோ அதிகாரங்களைப் பிரித்துக்கொடுப்பது (டிவலூசன்) பற்றியோ பேசவில்லை. பகிரப்பட்ட அதிகாரம் (பவர் செயாரிங்) என்பதைப் பற்றித்தான் பேசியிருக்கிறோம். அதாவது கொழும்பால் மீண்டும் எடுக்க முடியாத வகையில் அதிகாரங்களைப் பகிர்வது குறித்துத் தான் பேசியிருக்கிறோம். மாற்றமுடியாத ஏற்பாடுகள் இருக்கவேண்டும்.

### பிராந்தியங்கள்

வடக்கு கிழக்கு இணைப்பு என்பது ஒரு பிரச்சினையாகத்தான் இருக்கின்றது. எங்களுக்கும் பிரச்சினை அவர்களுக்கும் பிரச்சினை. அவர்களுக்கு இணைப்புக் குறித்து அச்சம் பயம் உள்ளது. புதிய அரசமைப்புக்கான கருத்தறியும் குழுவின் அறிக்கையில் 5 அலகுகளாக பிரிக்கக்கூடிய ஒரு ஏற்பாடும் விவாதிக்கப்பட்டுள்ளது.

சில சமயம் ஒரு அலகாக வடக்கு கிழக்கும் ஏனைய 7 மாகாணங்களும் 4 மாகாணங்களாக அலகுகளாகவும் வரலாம். இணைப்பு அந்த வகையில் சாத்தியப்படக்கூடியதே. இந்த அமைப்பில் வடக்கு கிழக்கு இணையும்போது முஸ்லிம்களுக்கு ஓர் அலகும் மலையக மக்களுக்கு ஓர் அலகும் இருக்கவேண்டும் என்பதையும் சொல்லியிருக்கிறோம். இது சந்திரிகா அம்மையாரால் முன்வைக்கப்பட்ட பிராந்திய முறைமைக்கு கிட்ட வரக்கூடியதாக இருக்கக்கூடும்.

புதிய அரசமைப்புத் தொடர்பாக நியமிக்கப்பட்ட அரசமைப்பு நிர்ணய சபையின் உப குழுக்களின் அறிக்கைகளைப் பார்க்கும்போது சில முன்னேற்றகரமான கருத்துக்கள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக கொழும்புக்கும் புற அலகுகளுக்கும் இடையிலான அதிகாரப்பகிர்வு சம்பந்தமான குழுவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் தலைமை தாங்கினார். அந்தக் குழுவின் அறிக்கையில் பல முன்னேற்றமான விடயங்கள் இருக்கின்றன.

இன்றைக்கு இருக்கின்ற மாகாணசபைகளுக்கு சட்டமியற்றும் அதிகாரம், ஒதுக்குதல் என்பன உள்ளன. ஆனால் அது அல்ல நாங்கள் கேட்பது.

எங்களைப் பொறுத்தவரையில் கொழும்பில் இருக்கக்கூடியவற்றை அதிகாரங்களைத் திட்டவட்டமாக வரையறுத்துக்கொள்ளலாம். பாதுகாப்பு, தேசிய நிதி போன்ற சில விடயங்களை அவர்கள் வைத்துக் கொள்ளலாம். அது தவிர வேறு எந்த விதமான பட்டியலும் இருக்காது. நாங்கள் மாகாணம் என்றுகூடப் பேசவில்லை. மாநிலம் என்றுதான் பேசியுள்ளோம். கொழும்பு அரசு என்பதையும் அரசுகளின் ஒன்றியம் (யூனியன் ஒவ் ஸ்ரேட்ஸ்) என்றுதான் சொல்கின்றோம்.

### முழு அதிகாரம் வேண்டும்

இப்போது இருக்கும் மாகாண சபை ஒரு வெள்ளை யானைதான். நாங்கள் வரவு செலவுத் திட்டத்தை 7 ,8 நாளாக விவாதிப்போம். ஆனால் ஒரு ரூபாவை அங்கிருந்து இங்கு மாற்ற எமக்கு அதிகாரம் இல்லை. தேசிய நிதி ஆணைக்குழு கொடுக்கின்ற நிதி மொத்த ஒதுக்கீடாக வழங்கப்படவேண்டும். மாகாண அரசு அந்த நிதியை எதற்கு ஒதுக்குகின்றது என்று தீர்மானிக்கும். அத்தகைய அதிகாரம்தான் எமக்கு வேண்டும். இப்போது அப்படி இல்லை. எல்லாவற்றையும் தீர்மானித்துத்தான் இங்கே அனுப்புகிறார்கள்.

நேற்றுக்கூட ஒற்றையாட்சிதான் என்று ரணில் மீண்டும் கூறியிருக்கிறார். அவர் அப்படிச் சொல்கிறார் என்பதற்காக நாம் கூட்டாட்சியைக் கேட்காமல் இருக்கவேண்டும் என்பதில்லை. 1949 டிசெம்பர் 18 ஆம் திகதியில் இருந்து நாங்கள் கூட்டாட்சியைத்தான் கேட்டுக்கொண்டு இருக்கிறோம்.

சாத்தியப்பாடுடைய கலைதான் அரசியல். சாத்தியம் இல்லாததை பேசுவது அரசியல் அல்ல. இங்கு அரைவாசிப்பேர் சாத்தியம் இல்லாமல் தான் பேசுகின்றார்கள். அதனை எமது மக்கள் நம்புகிறார்கள். சம்பந்தன் இன்று சொல்வது சாத்தியமாகுமா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். சம்பந்தன் சாத்தியமில்லாத சில விடயங்களைச் சொல்லாமல் விடுகிறார். இதுதான் உண்மை. கூட்டாட்சி என்பது சாத்தியம். உலக நாடுகளில் இருக்கக்கூடிய ஆட்சி முறை. வடக்கு கிழக்கு இணைப்பு சாத்தியம். 1987ஆம் ஆண்டு சாத்தியமானது. வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்டது. 18 வருடங்கள் இணைக்கப்பட்டு இருந்தது. அந்தச் சாத்தியப்பாடுகளைத்தான் நாம் கேட்கிறோம். அரசியல் பகிர்வு, அதிகாரப்பகிர்வு, நிதிப்பகிர்வு கொண்ட கட்டமைப்பை நோக்கி நாங்கள் நகர வேண்டும். நியாயம் கிடைக்க வில்லை என்பது உண்மை. நல்லாட்சியிலும் நீதி கிடைக்கவில்லை என்பது உண்மை. அதற்காக நாம் வெளியேறிவிட முடியாது. சாத்தியமானவற்றைச் சாதிக்க வேண்டும். அதுதான் அரசியல் - என்றார்.

(உ-10)

# இந்தியத் தூதரக அதிகாரிகள் ஊடக சுதந்திரத்தில் தலையீடு

## நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்றுக் காட்டம்



யாழ்ப்பாணம், மே 3

ஊடக சுதந்திரத்தில் இன்று இந்தியத் தூதரக அதிகாரிகள் தலையிடும் ஓர் அவல நிலை யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.

"இந்தியத்துணைதூதரகம் மிக மோசமாக இயங்கிக்கொண்டிருக்கின்றது. இந்தியாவிற்கு எதிரானதாக எந்தக் கருத்தும் எமது பத்திரிகையில் வரக்கூடாது என்பதாக அவர்கள் செயற்படுகிறார்கள். தமது தூதரகத்திற்குச் செல்பவர்களிடம் உதயன் பத்திரிகையில் ஏன் எழுதுகிறீர்கள் என்று மிரட்டுகிறார்கள். எமது பத்திரிகையில் எழுதினார் என்பதற்காகவே ஒருவரின் கலாநிதிப் படிப்பைப் பாழ்படுத்தியிருக்கிறார்கள். அவர் தனது கலாநிதிப் படிப்பைப் பூர்த்தி செய்யச் செல்வதற்கு விசா வழங்க மறுத்திருக்கிறார்கள். இதன் மூலம் ஊடகத்தின் சுதந்திரத்தை முறைமுகமாகக் கட்டுப்படுத்தப்பார்க்கிறார்கள். அவர்களின் செயல்களைப் பொறுத்துக்கொள்ள முடியாமலுள்ளது" என்றார் அவர்.

இங்கிருக்கும் அதிகாரிகள் இவ்வாறு செயற்படுவதற்காக இந்தியாவை நாம் எதிர்க்கிறோம், வெறுக்கிறோம் என்று அர்த்தமல்ல என்றும் அவர் தெரிவித்தார். தீர்வு விடயத்தில் இந்தியா காத்திரமான பங்கை ஆற்றவேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்ட அவர், யாழ்ப்பாணத்தில் உள்ள தூதரக அதிகாரிகளின் இத்தகைய நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் இந்தியா மீதான வெறுப்பையும் விரோதத்தையும்தான் வளர்க்கும் என்றும் குறிப்பிட்டார்.

### உதயன் படுகொலை

உலக ஊடக சுதந்திர தினம் இன்று உலக நாடுகள் எங்கும் கடைப்பிடிக்கப்படுகிறது. 2006ஆம் ஆண்டு உலக ஊடக சுதந்திரதினத்திற்கு ஒரு இரவு முன்னதாக, மே மாதம் 2ஆம் நாள் இரவு உதயன் பத்திரிகை அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அந்தத் தாக்குதலை நினைவுகூரும் வகையில் 'வேட்கை' என்ற பெயரில் ஈழத்தின் மிகப்பெரும் ஊடகப் படுகொலை தினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டிருந்தார். மாகாண சபை உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள், உதயன் பணியாளர்கள் கலந்துகொண்டிருந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது:

எமது ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக அரசினால் இப்போது தான் சில காய் நகர்த்தல்கள் செய்யப்படுவதாகத் தெரிகின்றது. பல வழிகளினும் இருந்துதொடர்ந்து கொடுக்கப்பட்ட நெருக்குதல்களால் இந்த நகர்வு இடம்பெற்றுள்ளது. எனினும் எவ்வளவு தூரம் நேர்மையாக இந்தப் பிரச்சினையை அவர்கள் கையாள்கிறார்களோ தெரியாது. தெற்கில் லசந்த விக்கரமதுங்கவின் படுகொலை போன்ற சில சம்பவங்கள் மீது மட்டுமே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் அதுவும் இன்னும் ஒரு காத்திரமான கட்டத்தை அடையவில்லை. எனவே எமது சம்பவங்கள் மீதான விசாரணைகளுக்கும் என்ன நடக்கும் என்பதைக் காத்திருந்துதான் பார்க்கவேண்டும். எமது முன்னாள் செய்தியாசிரியர் க.குகநாதனைப் படுகொலை செய்ய முயற்சித்தார்கள். 2006ஆம் ஆண்டு தாக்குதல் நடத்தியவர்கள் அவரைக் கொலை செய்வதற்காகத் தேடித் திரிந்தார்கள். தெய்வாதீனமாக அவர் தப்பித்தார். இரண்டாம் தடவை 2011ஆம் ஆண்டு அவரை மீண்டும் கொல்ல முயற்சித்தார்கள். அந்தச் சம்பவம் நடந்து ஒரு கிழமையில் அன்றைய அரச தலைவர் மகிந்த ராஜபக்ச சொன்னர், இந்தச் சம்பவத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சம்பந்தப்பட்டுள்ளது என்று. பின்னர் சம்பந்தப்பட்டவர் யார் என்பதைச் சூசமாகத் தெரிவித்தார்கள். அவர் ஒரு சட்டத்தரணி. இன்றும் தொழில் செய்துவரும் சட்டத்தரணி. ஆனால் அவர் கைது செய்யப்படவும் இல்லை. அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவும் இல்லை. அடுத்த தேர்தலில் அவர் மகிந்தவின் கட்சியில் வேட்பாளராகப் போட்டியிட்டார்.

(25 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களை விற்க முயற்சி:

## சிவசக்தி ஆனந்தன் குற்றச்சாட்டு



முல்லைத்தீவு, மே. 2

ஐ.நாவில் எடுக்கப்பட்ட இரண்டு வருட தீர்மானத்துக்கும், அரசு ஜீஎஸ்பி பிளஸ் வரிச் சலுகையைப் பெற்றுக் கொள்வதற்காகவும் எங்களுடைய ஆள்கள் சிலர் அரசுக்குப் பின்னால் சென்று தமிழ் மக்களை விற்கும் நிலைக்கு வந்து விட்டார்கள்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற வடமாகாண கூட்டுறவாளர்கள் மேதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணி விடுவிப்பு போராட்டங்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராடங்கள், வேலைவாய்ப்புக்காக பட்டதாரிகளின் போராட்டங்கள், அரசியல் தீர்வுக்கான போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. ஆட்சி மாற்றத்துக்கு பின்னரும் கூட அவை விரிவடைந்து கொண்டு தான் இருக்கின்றன. போராடும் மக்களுக்கு வடக்கு முதலமைச்சர் தன் பங்களிப்பை வழங்கியுள்ளார்.

போராட்டம் செய்பவர்கள் எல்லாம் தீண்டத்தகாதவர்களாக என்பது போன்று எமது அரசியல் தலைவர்கள் நடந்து கொள்கின்றனர். எங்கள் தலைவரால் போராடும் மக்களுக்கு நம்பிக்கையைக் கூட ஏற்படுத்த முடியாதுள்ளது.

மக்களிடம் நாம் இரட்டை வேடம் போட முடியாது. எங்கள் பேச்சுக்கும் நடைமுறைக்கும் ஒற்றுமை இருக்க வேண்டும் - என்றார்.

(ற-5)

# எதிர்வரும் மே தினத்துக்குள் பிரச்சினைகள் தீர்க்கப்படும்

## அமைச்சர் ராஜித உத்தரவாதம்

யாழ்ப்பாணம், மே 3

கூட்டரசில் உங்கள் காணிகளை விடுவிப்போம், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பதிலளிப்போம் என்று கூறியிருந்தோம். எனினும் அவை சரியான முறையில் இடம்பெறவில்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். அடுத்த ஆண்டு மே தின நிகழ்வில் உரையாற்ற வரும்போது இந்தப் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்த்த பின்னரே சமூகமளிப்பேன் என உத்தரவாதம் அளிக்கின்றேன்.

இவ்வாறு தெரிவித்தார் கொழும்பு அமைச்சர் ராஜித சேனாரட்ன. நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் நடைபெற்ற மே தின நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அன்று தொட்டு இன்றுவரை இந்த நாட்டின் பிரச்சினைக்களுக்கான தீர்வாக அதிகாரத்தைப் பகிரவேண்டும் என கூறி தமிழ் மக்களோடு இணைத்து பணியாற்றும் தலைவர்களில் நானும் ஒருவன். தமிழ் மக்களும் எனது குடும்பத்துடன் இணைத்து பணியாற்றுகின்றனர். எனது தந்தை இந்த நாட்டின் மருத்துவ சங்கத்தின் தலைவராக 6 ஆண்டுகள் இருந்தார் என்றால் அதற்கு தமிழ் மருத்துவர்களும் உதவி புரிந்தனர். அதே போன்று 1975ஆம் ஆண்டில் இந்த நாட்டில் பல் வைத்தியர்களாக அதிகம் பேர் தமிழர்களே இருந்தனர். அந்தச் சங்கத்தின் செயலாளர் பதவிக்கு ஒரு தமிழரும் போட்டியிட்டார் நானும் போட்டியிட்டேன்.

இந்த மண்ணில் உங்கள் விடுதலைக்காக போராடிய அத்தனை இயக்கங்களின் தலைவர்களையும் நான் சந்தித்து உரையாடியிருக்கின்றேன். மனித நேயப் பணியில் பிரபாகரன், சிறிசபாரட்ணம், பாலகுமார், பத்மநாபா போன்றோருடன் உமா மகேஸ்வரன் உள்ளிட்ட அனைவரிடத்திலும் எனக்கு பழக்கம் இருந்தது. இவ்வாறான காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வாக அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்றே கூறினோம்.

காணாமல் போனோர் தொடர்பான விபரத்தினை கோரியிருந்தேன். வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஒரு தொகுதி விவரங்களைச் சமர்ப்பித்துள்ளார். அது தொடர்பில் உடன் கவனம் செலுத்துவேன். அபிவிருத்தியிலும் நான் வடக்குக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றேன். மேல் மாகாண வைத்தியசாலைகளுக்கு அடுத்தபடியாக இந்த மாகாண அபிவிருத்திக்கே அதிக நிதி ஒதுக்கினேன். வட மாகாண சபை உருவாக்கத்தின் பின்பு மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் விடுத்த கோரக்கைகளின் அடிப்படைநில் வடக்குக்கு இதுவரையில் 15 ஆயிரம் மில்லியன் ரூபா அதாவது ஆயிரத்து 500 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளேன் - என்றார்.

(ற-101)

# நாம் ஓடுவது ஒரே சைக்கிள்தான் தற்போது காற்று சற்றுக் குறைவு

## மக்கள் நிரப்புவார்கள் என்று சம்பந்தனுக்கு சட்டத்தரணி சுகாஸ் பதிலடி

யாழ்ப்பாணம், மே 3

தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம், குமார் பொன்னம்பலம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் ஒரே சைக்கிளைத் தான் ஓடுகிறார்கள். நாங்களும் ஓடிக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் இன்னும் மாறவில்லை. தற்போது சைக்கிள் சில்லுகளுக்கு காற்றுக் கொஞ்சம் குறைந்துள்ளது. மக்கள் காற்று அடித்துக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் அது ஓடுமா அல்லது பறக்குமா என்பது தெரிந்துவிடும்.

இவ்வாறு சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தொழிலாளர் தினம் சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அண்மையில் கூறிய கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்தத் தொழிலாளர் தினமானது தமிழ் மக்களுக்கு கனகச்சிதமாக பொருந்துகிறது. தமிழ் மக்களாகிய நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற முதலாளித்துவக் கட்சியின் பிடியிலிருந்து விடுபட வேண்டிய கால கட்டத்திலே இருக்கின்றோம். அரசியல் விடுதலையை வென்றெடுக்க உருவமைக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்று பாதை மாறி ரணில் விக்கிரசிங்கவின் சிறிகோத்தாவுக்குள் பயணித்துக் கொண்டிருக்கிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பினுடைய துரோக முதலாளித்துவ தலைமைகளிடமிருந்து தமிழ் மக்கள் விடுதலை வேண்டும் என்ற சிந்தனையிலேயே இன்றைய தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுகின்றோம்.

நான் மதிக்கின்ற தலைவர் பிரபாகரன் மதித்த தந்தை செல்வாவினுடைய நினைவு தினத்தில் சம்பந்தன் ஐயா உரையாற்றுகையில் பொன்னம்பலத்தின் சைக்கிளையா இப்போதும் ஓடித் திரிகிறார்கள் என்ற கேள்வியைக் கேட்டிருந்தார். நாங்கள் சைக்கிளை கொள்கைகளோடு ஓடுகின்றோம். நீங்கள் கட்டிக் கொண்டிருக்கிற வீடு தந்தை செல்வா கட்டிய வீடா? இல்லை. நேற்று மகிந்த ராஜபக்சவின் வீட்டைக் கட்டிக் கொடுத்தீர்கள். இன்று மைத்திரியின் வீட்டைக் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். கொள்கையின்றிக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறீகள். நாங்கள் கொள்கையோடு சைக்கிளில் ஓடிக் கொண்டிருக்கின்றோம்;.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசிடம் விலை போய்க்கொண்டிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடைசித் தேசியவாதியான நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் விலைபோய்விட்டார். இலங்கை அரசுக்குச் சார்பாக ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்கவேண்டும் என்று அரசகுழுவோடு சிறிதரன் பிரஸ்லஸ் சென்றுள்ளார். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை ஏன் நிறுத்தப்பட்டது. தமிழ் மக்களின் உரிமையை உறுதிப்படுத்த வேண்டும் என்பதற்காக நிறுத்தப்பட்ட வரிச்சலுகையை அரசோடு சென்று தா என்ற கேட்கச் சென்றுள்ளார்.

இவ்வளவு நாளும் தமிழ் தேசியக் கூட்மைப்பின் தலைமையை மாற்றுவதா அல்லது அமைப்பையே மாற்றுவதா என்ற கேள்வி இருந்தது. இவ்வளவு நாளும் நாம் சிந்தித்தோம். சம்பந்தனையும், சுமந்திரனையும் மாற்றினால் கூட்டமைப்பு திருந்திவிடுமென்று. இப்போது விளங்குகின்றது இவர்களை மாற்றிப் பிரயோசனமில்லை. அமைப்பையே மாற்றிவிட வேண்டுமென்று. வீட்டை மூட வேண்டும். அவ்வாறு மாற்றினால் மட்டும் தான் எங்களுடைய இனத்துக்கு விடுதலை கிடைக்கும்.

வவுனியாவில் அண்மையில் கருத்தமர்வு நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் மறவன்புலவு சச்சிதானந்தம் ஒரு அதிர்ச்சித் தகவலை வெளியிட்டிருந்தார். கடந்த மாதம் இந்தியாவில் ஆளும் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியுடனான சந்திப்பில் ஈழத் தமிழ்மக்கள் சார்பில் கலந்து கொண்ட கட்சியின் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி முன்னிலையில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தினாலே போதும். தமிழ் மக்களின் பிரச்சினை தீர்ந்து விடுமென்ற கருத்தை வெளியிட்டிருந்தார் எனக் கூறினார். கூட்டமைப்பு கபட நாடகம் ஆடுகிறது என்று விளங்குகின்றது. கூட்டாட்சி என்று எங்களுக்கு ஒரு பேச்சு. ஒற்றையாட்சி என்று தென்னிலங்கையில் பேச்சு. 13ஆவது திருத்தம் என்று இந்தியாவில் ஒரு பேச்சு.

நீங்கள் மாற்றத்தை விரும்புகின்ற மக்களாக தமிழ் தேசியத்தை விரும்புகின்ற மக்களாக சிந்திக்கின்ற மக்களாக தமிழ் தேசியத்தின் வாரிசுகளாக இருந்தால் பிரபாகரனின் மக்களாக இருந்தால் வீட்டை மாற்றுவோம். அடுத்த பொதுத் தேர்தலில் புதிய தமிழ் தேசியத்தை உருவாக்குவோம் - என்றார்.

(ற-5,9)

# தமிழ், முஸ்லிம் மக்கள் உறவு இன்னும் அழிந்துவிடவில்லை

## வட மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் தெரிவிப்பு

அம்பாறை, மே 3

தமிழ், முஸ்லிம் உறவு முற்றாக அழிந்துவிட்டவில்லை. அது உயிரோட்டமாக சீர்செய்யப்படுவதற்கு இன்னும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார். அம்பாறை மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மே தினக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த அரங்கில் தமிழ் மக்களோடு இணைந்து முஸ்லிம் மக்களும் பங்குகொண்டிருப்பது எனக்கு நம்பிக்கையளிக்கின்றது. வடக்குக், கிழக்குப் பிரதேசங்களிலே தமிழ், முஸ்லிம் உறவு இயற்கையானது. இடையே அந்த உறவில் விரிசல்கள் ஏற்பட்டன. அவை செயற்கையாக புகுத்தப்பட்ட விரிசல்கள், வெளிச்சக்திகளானால் அவை புகுத்தப்பட்டும் இருக்கலாம். அந்த விரிசலானது தவறானது. எவருக்கும் நன்மையளிக்காதது. இதனை நாம் உணர்ந்துகொள்தல் அவசியமாகும். தமிழ்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வடக்கும், கிழக்கும் தமிழ்பேசும் மக்களின் பிரதேசமாக இணைந்திருக்க வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். அதற்கான நியாயங்களையும் அவர் எடுத்துரைப்பார். அந்த நியாயங்களை முஸ்லிம் தலைவர்களும், மக்களும் இதுவரை சரியாக உணர்ந்துகொள்ளவில்லை என்றுதான் நான் நினைக்கின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் அமைச்சர் ஹக்கீம் ஆகியோர் கூட்டாக அரச தலைவரிடம் மாயக் கல்லி பிரச்சினை குறித்துப் பேசிய போது அதற்கான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. முதற்கட்டமாக மேலதிக கட்டுமானப் பணிகள் எதுவும் இடம்பெறாதவண்ணம் அரச தலைவர் தடையுத்தரவை வழங்கியிருக்கின்றார். அதற்கான தீர்வைப் பெற்றுத் தருவதில் சம்பந்தன் ஐயா அவர்களின் பங்களிப்பும் இருக்கின்றது.

நான் தனிப்பட்ட ரீதியில் வடக்கு, கிழக்கு இணைப்புக்கு ஆதரவானவன். பல்வேறு நியாயங்களின் அடிப்படையில் அது தேவையானது என்று வலியுறுத்துகின்றவன். அதைக் கிழக்கு மாகாண மக்களே தீர்மானிக்க வேண்டும் என்று நான் உறுதியாகக் கூறி வருகின்ற ஒருவன்; அதனை எதிர்க்கின்றவர்கள் இனவாத ரீதியான நியாயங்களையே முன்வைக்கின்றார்கள். அம்பாறை மக்களாகிய நீங்கள் வடக்கு, கிழக்கு இணைப்பை வலியுறுத்த வேண்டும் - என்றார். (ற-8)

# தீயணைப்பு சேவையை ஏற்படுத்தக் கோரிக்கை

மன்னார், மே 3

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் தேவை கருதி அங்குள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு தீ அணைப்புச் சேவை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் யாழ்ப்பாண மாவட் டத்தில் மட்டுமே தீ அணைப்பு வசிதி உள்ளது. ஏனைய மாவட்டங்களில் இல்லை. கடந்த ஆண்டு கிளிநொச்சி யில் ஏற்பட்ட தீ இடரால் அதன் தேவை எடுத்துக் காட்டப்பட்டது. அதன் பின்னர் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு மட்டும் அந்தச் சேவைகள் கிட்டும் நிலை தென்படுகின்றது.

வடக்கின் ஏனைய 3 மாவட்டங்களிலும் தீ அணைப்பு வசதி இல்லாத நிலையில் ஓர் திடீர் அனர்த்தம் நிகழு மாயின் அதைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது. இரு மாவட்டங்களின் தேவை கருதி மன்னார் நகர சபை மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை ஆகியவற்றுக்கு தீ அணைப்புச் சேவை வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அவர் கடிதம் மூலம் அமைச்சர் பைசல் முஸ்தபாவிடம் கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-101)

# இரவு வீட்டுக்குள் புகுந்து 18 பவுண் நகை திருட்டு

யாழ்ப்பாணம், மே 3

புத்தூர் கிழக்கு, குமாரசாமி வீதியில் உள்ள வீடொன்றில் 18 பவுண் நகை திருட்டுப் போயுள்ளன என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 12.30 மணி அளவில் நடந்துள்ளது.

வீட்டிலிருந்தோர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது திருடர்கள் கதவை உடைத்து உள் நுழைந்து வீட்டுக்குள் இருந்த 18 பவுண் நகையை திருடிச் சென்றுள்ளனர். திருடர்கள் நகையை எடுத்துக்கொண்டு வெளியேறும்போது வீட்டுக்காரர் கண் விழித்துக் கூச்சலிட்டனர்.

அயலவர்களின் உதவியுடன் தப்பிச் சென்றவர்களில் சுன்னாகத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனைப் பிடித்து அச்சவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-10,26)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நீண்ட பயணம் காத்திருக்கிறது

இன்று உலக ஊடக சுதந்திர தினம். ஊடக சுதந்திர விடயத்தில் இலங்கை நீண்டகாலமாகவே பக்க வாதத்தால் பாதிக்கப்பட்டிருந்த நாடு. கடந்த சில ஆண்டுகளாக அதிலிருந்து மீண்டு வருவதற்கு அது முயற்சிக்கிறது. அது வெற்றியளிப்பதற்கு கொழும்பு அரசு இன்னும்நீண்டதூரம்பயணிக்கவேண்டியிருக்கிறது.

ஒருநாட்டில்சிறப்பானமக்களாட்சிநடைபெறவேண்டுமாயின், அங்கு சுதந்திரமான ஊடகங்கள் அதாவது அச்சமின்றிஅரசையும், அதன்கொள்கைகளையும், அரசின்மக்கள்நலத்திட்டங்களையும், கேள்விகேட்கவும் விமர்சிக்கவும்கூடியஊடகங்கள்இருப்பதுஅவசியம்.

ஊடகம் மக்களாட்சியின் (ஜனநாயகம்) நான்காவது தூண்எனப்படுகிறது. மற்றையமூன்றுதூண்களானநீதி, நிர்வாகம், நாடாளுமன்றம்என்பவற்றின்ஒழுங்கான ஒழுக்கமான இயக்கத்துக்குசுதந்திரமானஊடகங்கள் அவசியம் என்பதனாலேயே மக்க ளாட்சி யின் நான்காவது தூணாக ஊடகங்கள் வர்ணிக்கப்படுகின்றன.

கண்காணித்தல், கட்டுப்படுத்துதல், பொதுக்கருத்தை உருவாக்குதல், அதன் அடிப்படையில் மக்களுக்கு நல்லதைச் செய்தல் என்கிற ஊடகங்களின் பணியை அவை வெற்றிகரமாகச் செய்யவேண்டுமானால், அவை சுதந்திரமாகச் செயற் படவேண்டியது அவசியம். கட்டுப்பாடற்ற சுதந்திரத்துடன் ஊடகங்கள் செயற்படமுடியுமா என்கிற விவாதம் உலகில் எப்போதுமே உண்டு. ஆனால், அந்தக் கட்டுப்பாடுகளை ஊடகங்கள் தமக்குத் தாமே விதித்துத் தம்மை நெறிப்படுத்திக்கொள்ளவேண்டுமேதவிர, மக்களாட்சியின் ஏனைய தூண்களால் அவை கட்டுப்படுத்தப்படக்கூடாது என்பதே உலகப் பொதுமறை.

இலங்கை போன்ற நாடுகளில் அவ்வாறு நடைபெறுவதில்லை. நீதி, நிர்வாகத்துறைகளின்ஊடாக ஊடகங்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இங்கே அதிகம் உண்டு. அண்மையில் நிறைவேற்றப்பட்ட தகவல்அறியும்உரிமைச்சட்டம் இந்த நெருக்கீட்டில் சிறிய வெளிச்சத்தை ஏற்படுத்தினாலும் அது முழுமையான தீர்வாகாது.

ஊடக சுதந்திரத்தை மிக மோசமாகக் கட்டுப்படுத்தக் கூடிய வர்களாகக் கடந்த காலங்களில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இருந்திருக்கின்றனர். ஊடக நிறுவனங்கள்மீதானதாக்குதல்கள், ஊடகவியலாளர் படுகொலைகள், வன்முறை கள், செய்தித் தணிக்கை என்று பல விதங்களிலும் ஊடகங்களைக் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம்தகர்த்து, வன்முறையாளர்களுடன்முட்டிமோதி ஒரு மக்களாட்சி வெளியை ஏற்படுத்துவதற்கு ஊடகங்கள் தொடர்ந்தும் முயற்சித்து வந்தமையே இலங்கையில்ஊடகங்கள்நிகழ்த்தியமாபெரும்சாதனை.

முன்னாள்அரசதலைவர்மகிந்தராஜபக்சவின்ஆட்சிக் காலத்தில் ஊடகங்களுக்கு எதிரானதாக்குதல்களும், ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகம்இடம்பெற்றுள்ளன. இலங்கைவரலாற்றிலேயே சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அரச தலைவர்களான சந்திரிகாஅம்மையாரதும்மகிந்தராஜபக்சவினதும்காலங்களிலேயேஊடகஒடுக்குமுறைஅதிகளவில்நடந்துள்ளது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஒப்பீட்டளவில் அடக்குமுறைகளும் ஒடுக்குமுறைகளும் குறைந்துள்ளன. மக்கள் தாம் நினைப்பதைப் பேசுவதற்கும், கருத்துக்களைமுன்வைப்பதற்குமான பொது வெளி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஊடகங்களாலும் அந்த வெளியின் சுகத்தை அனுபவிக்க முடிகிறது. ஆனாலும், இன்னமும்ஊடகவியலாளர்கள்மீதானகண்காணிப்பும், மறைமுகநெருக்குவாரங்களும், அச்சுறுத்தல்களும்தொடரவே செய்கின்றன. வடிவங்கள்மாறியிருக்கலாம், ஆனால் பின்னணிகள் அப்படியேதான் இருக்கின்றன.

இந்த நிலமை மாற்றப்படவேண்டும். அதற்கும் மேலாகதமிழ்ஊடகங்கள்மீதும், ஊடகவியலாளர்கள் மீதும்நடத்தப்பட்ட தாக்குதல்களின்பின்னால்இருந்தவர்களில் எவரும் இதுவரையில் கைது செய்யப்படவோ விசாரிக்கப் படவோ இல்லை. இதுவும்தமிழ் ஊடகவியலாளர்கள் அச்சமின்றிச்செயற்படக்கூடிய நிலையைஏற்படுத்துவதற்குத்தடையாக இருக்கிறது. இத்தகைய எல்லா முட்டுக்கட்டை களையும் அகற்ற வேண்டியிருக்கிறது. ஊடக சுதந்திரத்தை முழுமையாக நிலைநாட்ட இன்றைய ஆட்சி இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது.



# இருதரப்பு கூட்டு முயற்சிகளுக்கான ஒப்பந்தம் புதுடில்லியில் கைச்சாத்து


## திருமலை எண்ணெய்க் குதங்களின் அபிவிருத்திக்கு முதல் முக்கியத்துவம்

## இந்திய மீனவர் பிரச்சினை குறித்து இந்திய தரப்பில் புதிய யோசனை

சண்டேரைம்ஸ் கட்டுரையில் இருந்து ரெங்கன்

இலங்கை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட திருமண நிகழ்வொன்றில்கலந்துகொள்வதற்காகப் புதுடில்லி சென்ற வேளையில், அவரைத் திசை திருப்பி ஏமாற்றி, அவரது பயணத்தை ஒருநாள் உத்தியோகபூர்வ பயணமாக மாற்றச் செய்து, தமது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் விதத்தில் சிக்க வைத்துவிட்டார் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி என்று இங்கு சிலர் கூறிக் கொள்கிறார்கள். ஆனால் மற்றும் சிலரோ, இந்தக் கருத்துத் தப்பானது என்று கூறும் அதே நேரம், இலங்கை தலைமை அமைச்சர், திருகோணமலையில் உள்ள சில எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்போகிறார் என்றவகையில்இங்குஎவரோ தவறானதகவல்பரப்பிஇலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கம் வேலைநிறுத்தத்தில் குதிக்கும்படியாகத் தூண்டிவிட்டார்கள் என்றும் கூறினார்கள்.

இந்தச் செயற்பாட்டை பெட்ரோலிய அமைச்சர் சண்டிம வீரக்கொடி கடுமையாக எதிர்ப்பவர் என்பது பகிரங்கம். அவர் தொழிற்சங்கங்களையும் இணைத்துக்கொண்டு அரசதலைவரிடம் எதிர்ப்பை வெளியிடச் சந்தர்ப்பம் ஒன்றைக் கேட்டிருந்தார். ஆனால் அதற்கு அரசதலைவர் இணங்க மறுத்துவிட்டதாகவும், இந்தத் திட்டத்தைக் கொண்டு நடத்துவதில் தலைமை அமைச்சர் விடாப்பிடியாக இருப்பதால், இதில் முடிவெடுப்பது அவர்கையில்தான் இருக்கிறது என்று கூறிவிட்டதாகவும் தரியவந்திருந்தது. எனவேதான் நாடுமுழுவதிலும் வேலைநிறுத்தம் ஒன்று ஏற்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் எரிபொருள் நிலையங்க ளின் முன்பாக வாகனநெருக்கடியும் பரபரப்பும் ஏற்படலாயிற்று.



இந்த நிலையில் பெற்றோலிய ஊழியர்களுடன் ஆலோசிக்காமல் புதுடில்லியில் இந்தியாவுடன் தாம் ஒப்பந்தம் எதிலும் கையெழுத்திட மாட்டார் என்று தொழிற்சங்கங்களுக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார். ஆனால் அந்தப்பணியை முலோபாய அபிவிருத்தி மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவைப் பயன்படுத்தி புதுடில்லியில் நிறைவேற்றும்படி செய்து கொண்டார் தலைமை அமைச்சர். இந்தப்புரிந்துணர்வுஒப்பந்தம் பகிராங்கப்படுத்தப்படவு மில்லை.

இந்தியாவுடனான இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால், கிழக்குமாகாணத்திலும் அதனைச் சூழ்ந்த பகுதிகளிலும் பெருமளவிலான பொருளாதார செயற்பாடுகளில் இந்தியா செயற்படுவதற்கு அனுமதிப்பதாகும். இரண்டாம் உலகப்போரின்போது பிரிட்டிஷ்காரர்களால் நிர்மாணிக்கப்பட்ட எண்ணைக் குதங்கள் இதில் முக்கிய இடம் பெறுவதாய் இருக்கும். திருகோணமலைத் துறைமுகத்துக்கு அருகில் இந்த 99 எண்ணெய்க் குதங்கள் இருபகுதிகளில் அமைந்துள்ளன. ஒன்று கீழ் குதங்கள் பண்ணை என்றும் அழைக்கப்படும். இது கடலை அண்டிய பகுதியில் காணப்படுகின்றது. மற்றையது, உயர் குதங்கள் பண்ணை. இது உயர்வான இடத்தில் அமைந்துள்ளது. இப்போது கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்



> இலங்கைக் கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிக்கும் விடயம் நெருடல் தருவதாகவே இருந்துள்ளது. இந்தப் பிரச்சினையால் வருடம் தோறும் இலங்கைக்கு சுமார் 5 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது 2015 ஆம் ஆண்டு இலங்கை நாடாளுமன்றில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி உரைநிகழ்த்தியபோது, இந்தியாவைப் புதியதொரு பொருளாதார சாத்தியக்கூறுக்கான முகாமாக உலகம் பார்க்கிறது. ஆனால் எமது அயல் நாடுகளுக்கே இந்தியா மீதான முதல் கோரிக்கை உரித்தாகிறது. மீண்டும் கூறுகிறேன் அயல் நாடுகளுக்கே –இலங்கைக்கே இந்தியாவிடம் முதல் உரித்து உள்ளது.

தப்படி உயர் நிலை எண்ணெய்க்குதங்கள்ஒருகூட்டுத் திட்டமாகச் செயற்படுத்தப்படும். இந்திய எண்ணெய் நிறுவனம் மற்றும் இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் என்பவற்றுக்கிடையில் 16 குதங்களைக் கொண்ட கீழ்க்குதப்பண்ணையானது இந்தியாவுக்குப் பிரத்தியேகமாக 50 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடப்படும் . பின்னர் அது 99 ஆண்டுகளுக்கு விஸ்தரிக்கப்படும். இந்த ஏற்பாடானது, உண்மையில் இலங்கைக்கு அனுகூலமானது என்கிறார்கள் இந்தியத் தரப்பினர். ஏனென்றால் 2003ஆம் ஆண்டு அவ்வேளைய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மற்றும் அரசதலைவர் சந்திரிகா குமாரதுங்க ஆகியவர்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி இந்த இரண்டுபகுதிகளிலுள்ள எண்ணெய்க் குதங்களும் முழுமையாக இந்திய எண்ணெய் நிறுவனத்துக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது என்கிறார்கள் அவர்கள்.

கடந்தவாரம் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன, சில படங்களைக் காட்டி இந்த எண்ணெய்க் குதங்கள் காடுசூழ்ந்த பகுதியாக அல்லது அனுராதபுரத்திலுள்ள தூபராம ஆலயத்தைப் போல் வழிபாட்டுக்காக விடப்படவேண்டுமா அல்லது வருமானம் பெற்றுத்தருபவையாக இருக்க வேண்டுமா என்று கேட்டிருந்தார்.

**இலங்கைக்கான நன்மைகள்**

இந்திய நிறுவனங்கள் இலங்கைச் சந்தைக்குள் நுழைவதன் வாயிலாக இலங்கைக்கு ஏற்படும் நன்மைகள் குறித்து இந்தியத் தரப்பில் பேரம் பேசுபவர்கள் சுட்டிக்காட்டாமல் இல்லை.

இலங்கையில் ஒருபோதும் எண்ணெய்த்தட்டுப்பாடு ஏற்படுவதில்லை. பலபேருக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கின்றன. நாட்டிலுள்ள எரிபொருள் வழங்கு நிலையங்களின் காட்சி மற்றும் அவைகளின் தரத்தன்மை என்பவற்றைச் சுட்டிக் காட்டினார்கள். இலங்கைச் சந்தையில் கால் பதித்ததின் பின்னர் ஏறத்தாழ 7 பில்லியன் ரூபாவை முதலீடு செய்திருக்கிறார்கள். நிறுவனத்தின் 25 வீதப்பங்கு இலங்கையருக்கு வழங்கப்படுகின்றது. எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கையில் களஞ்சியப்படுத்தும் வசதிகளைக் கொண்டு தென்னிந்திய எண்ணெய்த் தேவையை நிவர்த்தி செய்ய குழாய்த் தொடர்புகளையும் ஏற்படுத்த முடியும்.

புரிந்துணர்வு ஒப்பந்தமானது திருகோணமலையில் ஒருதுறைமுகம், எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம், மற்றும் பல தொழில் நிலையங்கள் அமைப்பதையும் உள்ளடக்குகின்றது. இதற்காக இலங்கை மற்றும் இந்தியத் தரப்புகளின் சார்பில் பணிக்குழுக்களும் உருவாக்கப்படும். இந்தத் திட்டத்தில் ஜப்பானின் பங்களிப்பும் பெறப்படும் என்று தலைமை அமைச்சர் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

இதுபற்றி இந்திய வெளியுறவுத்துறைப் பேச்சாளர் கோபால் பாக்நே பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தபோது இந்தியா ஏனைய நாடுகளுடன் இணக்கப்பாடுகளையும், அயல் உறவு மேம்பாடுகளையும் வளர்த்துக் கொள்வதில் ஆர்வமாகவுள்ளது. ஒரே மனப்பான்மையுள்ள ஏனைய நாடுகளுடன் ஒத்துழைப்புகள் சாத்தியமாக இருப்பின் அது இருநாடுகளுக்கும் ஏற்புடையதாகவும் இருப்பின் அவைகளைச் சாதகமாக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள நாங்கள் திறந்த மனதோடு இருக்கிறோம் என்றார்.

**இந்திய மீனவர் பிரச்சினை**


இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் சுமுகமாக இருந்த போதிலும், இலங்கை கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிக்கும் விடயம் நெருடல் தருவதாகவே இருந்துள்ளது. இந்த பிரச்சினையால் வருடம் தோறும் இலங்கைக்கு சுமார் 5 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு இலங்கை நாடாளுமன்றில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உரைநிகழ்த்திய போது, இந்தியாவைப் புதியதொரு பொருளாதாரச் சாத்தியக்கூறுக்கான முகாமாக உலகம் பார்க்கிறது. ஆனால் எமது அயல் நாடுகளுக்கே இந்தியா மீதான முதல் கோரிக்கை உரித்தாகிறது. மீண்டும் கூறுகிறேன், அயல் நாடுகளுக்கே- இலங்கைக்கே இந்தியாவிடம் முதல் உரித்து உள்ளது. இலங்கையின் வெற்றியானது, இந்தியாவுக்கு மிக முக்கிய விடயமாக இருக்கும்" என்று குறிப்பிட்டிருந்தார். அவருடைய அயலுறவுக் கொள்கையானது "சப்கா சாத்; சப்கா விகாஸ்"- ஒன்றாக இருந்தால் முன்னேறலாம் - என்ற தத்துவத்தின் அடிப்படையிலானது.

இந்திய மீனவர் ஊடுருவலால் வடக்கு மீனவர்கள் மாத்திரம் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களாய் இல்லை. பாக்குநீரிணை, மன்னார்க்குடா பகுதியில் கடல்வளங்கள் முற்றாகப் பாதிக்கப்படுவதாக இலங்கை மீன்பிடி அமைச்சின் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் மத்திய அரசுடன் இணைந்து தமிழ் நாடு அரசு செயற்படல்வேண்டும் என்று இந்திய அரசு விரும்புவதாகத் தெரிகின்றது.

மூக்காயூர் மற்றும் பூம்புகார் பகுதிகளில் புதிய மீன்பிடித் துறைமுகங்கள் நிறு வப்பட்டு வருவதாகவும் இதன் மூலம் இந்திய மீனவர்களை பாக்கு நீரிணைப் பகுதியிலிருந்து அரேபிய கடல், அல்லது வங்காள விரிகுடாப் பகுதிக்கு திருப்பி விடக்கூடியதாய் இருக்கும் என்று இந்திய தரப்பில் கூறப்பட் டுள்ளது.

கடல் அடிவரை துடைத்து வழித்துச்செல்லும் 'பொட்டம் ட்ராலர்கள்' என்றழைக்கப்படும் இழுவைப் படகுகளுக்குப் பதிலாக இலகு படகுகளை வாங்கும்படி மீனவர்களுக்கு மானியம் வழங்கு வது பற்றியும் ஆலோசிக்கப்பட்டுள்ளது என்று இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





## ஆசிரியருக்கான கடிதம்

### கிளை வீதிகளது புனரமைப்புக்கு பிரதேச சபைச் செயலாளராவது உதவுவாரா?

வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் பிரதான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளுக்கு சபையின் நடப்பு ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தினூடாக மின் விளக்குகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளதாக பத்திரிகைச் செய்தி தெரிவித்திருந்தது.

நல்ல விடயம்தான். இந்த நாள்களில் இரவு வேளைகளிலும் பிரதான வீதிகளில் பொதுமக்களதும் வாகனங்களதும் போக்குவரத்துக்கள் கணிசமான அளவில் இடம்பெறுவதால், இரவு நேரங்களில் வெளிச்ச வசதி மிக அவசியமானதொன்றுதான். தவிரவும், குறித்த பகுதிகளில் விவசாயிகளது பெரும்பாலான வாழைத் தோட்டங்கள் ஒழுங்கைகள் அமைந்த பகுதிகளில் இருப்பதுடன், குறிப்பாக இந்த நாள்களில் வாழைக்குலைத் திருட்டுக்கள் கணிசமான அளவுக்கு இடம்பெற்று வருவதால் ஒழுங்கைகளுக்கும்கூட மின் விளக்கு வசதி மேற்கொள்ளப்படுதல் பாதுகாப்புத் தருமொன்று என்பதை ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

ஆனால், வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள கிளை வீதிகள் கடந்த பல ஆண்டுகளாக புனரமைப்புக்கு உள்ளாக்கப்படாத நிலையில் குறித்த பகுதிகளில் வாழும் மக்களது அன்றாடப் போக்குவரத்துக்குக் கடும் சிரமம் தருபவையாக அமைந்துள்ளன.


வலி.கிழக்குப் பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகத்துக்குக் கீழ் வரும் பகுதியில், பலாலி வீதியிலிருந்து பிரிந்து உட்புறமாகச் சென்று கரந்தன் வீதியை இணைக்கும் சிவன் வீதி, மற்றும் அதன் தொடரான செல்லப்பா வீதி என்பவற்றை இதற்கு உதாரணமாகச் சுட்டிக்காட்ட லாம்.

பிரதேச சபை, மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களால் நிர்வகிக்கப்பட்ட காலகட்டத்தில் குறித்த பகுதிக்கான உறுப்பினர்கள் மாற்றாந்தாய் மனப்பாங்கில் குறித்த கிளை வீதிகளது புனரமைப்புக் குறித்து அக்கறை காட்டியதில்லை.

எனவே தற்போது செயலாளரது நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நிலையில், குறித்த வீதிகளது புனரமைப்புக்கு இந்த நிதி ஆண்டின் ஒதுக்கீட்டிலாவது நிதி ஒதுக்கீடு செய்து புனரமைப்பு மேற்கொள்ள செயலாளர் ஆவன செய்வாரா?

ரீ.ராஜா.
உரும்பிராய்.

# "மிகச்சிறந்த விற்பனைப் பங்காளி"




"தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கு தகவல் தொழில்நுட்ப சேவைகளை வழங்கி வரும் அபான்ஸ் நிறுவனம் இலங்கையர்களுக்கு தேவையான கணினிகள் மற்றும் கணினி சார்ந்த உற்பத்திகளை வழங்கும் பிரதான நிறுவனமாக திகழ்கின்றது."

## இலங்கையின் தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னணியாக திகழும் அபான்ஸ் பி.எல்.சி தெரிவுசெய்யப்பட்டது

நடப்பாண்டின் மிகச்சிறந்த விற்பனை பங்காளியாக அபான்ஸ் பி.எல்.சி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன் மிகச்சிறந்த வணிகப் பங்காளியாக அண்மையில் தனது தகவல்த் தொழில்நுட்ப பிரசேவத்தை ஆரம்பித்துக் கொண்ட அபான்ஸ் குழுமத்தின் ஏ.பி டெக்னோலொஜிஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கியூலெட் பைக்காட் (எச்.பி) வருடாந்தம் நடத்திவருகின்ற தனது மிகச்சிறந்த விற்பனை பங்காளிகளுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்விலேயே மேற்படி கௌரவ விருதினை அபான்ஸ் பி.எல்.சி பெற்றுக்கொண்டுள்ளது. இந்த நிகழ்வில் 250 இற்கும் அதிகமான விற்பனை பங்காளிகள் கலந்து சிறப்பித்தனர்.

அந்தவகையிலே எச்.பி சர்வதேச தகவல் தொழில்நுட்ப உற்பத்தி துறை சார்ந்து உலகளவில் பேசப்படும் முன்னணி நிறுவனமாக திகழ்கின்றது. உலகளாவிய ரீதியில் 170 இற்கும் அதிகமான நாடுகளில் தனது கிளைகளைக் கொண்டு பரந்து விரிந்துள்ளது.

துறைசார் நிறுவனங்கள் மற்றும் சாதாரண கணனி பாவனையாளர்கள் கணினி உற்பத்திகளின் மூலம் எதிர்கொள்கின்ற சவால்கள், எதிர்பார்ப்புகள் போன்ற பிரச்சினைகளுக்கான தொழில்நுட்ப ரீதியான தீர்வுகளை முன்மொழிவதே இவர்களின் முக்கிய பணியாகக் காணப்படுகிறது.

இவைதவிர இலங்கையில் எச்.பி கணினிகளுக்கான நிறுவனம் சார் விற்பனை பங்காளியாகவும், கணினி மற்றும் துணைகருவிகளுக்கான வன்பொருள் பாகங்களின் விற்பனை நிறுவனமாகவும் அபான்ஸ் திகழ்கிறது. பல தசாப்தங்களாக இலங்கை வாடிக்கையாளர்களுக்கு கணினி உற்பத்திகளை வழங்கி மக்கள் மனதில் நம்பிக்கையை கட்டியெழுப்பியுள்ளது. மேலும் கடந்த பல வருடங்களாக அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்ப உற்பத்தி வழங்குநராக பணியாற்றி வருகிறது.

நாடளாவிய முன்னணி நகரங்களில் 20இற்கும் அதிகமான சேவை நிலையங்களை அபான்ஸ் கொண்டுள்ளது. அத்தோடு நாடளாவிய ரீதியில் அனைத்து பிரதேசங்களையும் உள்ளடக்கியவாறு தனது சேவை வலையமைப்பு மூலம் எச்.பி கணினிகளுக்கு மிகவும் துரிதமான சேவைகளை திறமைவாய்ந்த பொறியாளர்கள்,தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடன் வழங்கிவருகின்றமை நோக்கத்தக்கது.



# 'அப்பிள் ஶ்ரீ (Apple siri)'

## வட்ஸ் அப்பிலுள்ள குறுஞ்செய்திகளின் வாசிப்பான்

தொழில்நுட்பத்தின் வளர்ச்சி என்பது பலவிதமான செயல்நிலைப் பயனுறுதிகளை பேண்தகுநிலையோடு தந்தவண்ணமுள்ளது.

அந்தவகையிலே அப்பிள்நிறுவனத்தின் உற்பத்திகளான ஐ போன் மற்றும் ஐபாட்களில் (IPAD) வழங்கப்பட்டுள்ள 'அப்பிள் ஶ்ரீ (Apple siri)' செயலியுள் தற்போது வட்ஸ் அப்பிலுள்ள குறுஞ்செய்திகளை வாசிக்கும் ஆற்றல் உள்ளடக்கப்பட்டுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டில் அறிமுகம் பெற்றதான இந்த சேவை கடந்த செப்ரெம்பர் மாதம் தொடக்கம் குரல்பதிவு ஊடாக வட்ஸ்அப்பில் செய்திகளை அனுப்பும் வசதியை ஏற்படுத்தியது.

அதன் தொடர்நிலையாக தற்போது வெளியாகிய புதிய பதிப்பில் வட்ஸ்அப்பிலுள்ள குறுஞ்செய்திகளை சத்தமாக வாசிக்கக்கூடியதான ஆற்றல் வடிவமைப்பைப் பெற்றுக்கொண்டுள்ளது.

இதன்படி குறித்த சேவையை கைபேசியில் இயங்குநிலை பெறச் செய்த பின்னர் 'ஹே சிறி எனது இறுதி வட்ஸ்அப் செய்தியை வாசித்துக் காட்டு' என்ற கோரிக்கையை எமது குரலூடாக முன்வைக்கும்போது அனுப்பியவரின் பெயருடன் செய்தியை வாசித்துக் காட்டுகின்றது.

அத்துடன் இவற்றுள் புலனாகும் காட்சிகள், கொன்ரக்ட் இன்போ, குறூப் இன்போ (Contact Info, Group Info) என்பனவும் மேம்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஒரு தடவையில் ஒன்றுக்கு மேற்பட்ட பதிவுகளைத் தெரிவு செய்து பிறிதொருவருக்கு அனுப்பவோ அல்லது அழிக்கவோ முடிகிறது.

மேலும் இப் புதிய பதிப்பானது ஐ.ஓ.எஸ் 7.0 அல்லது அதற்கு பின்னரான இயங்குதளங்களில் மட்டுமே செயற்படக்கூடியதாக இருக்கும் என்பது நோக்கத்தக்கது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தினைக் கொண்டதான இந்த வசதியின் ஊடாக குரல் வழிக் கட்டளைகள் மூலம் குறித்த சாதனங்களில் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தலைசிறந்த நிறுவனப் பிரஜைகளில் ஒன்றாக சிங்கர் சிறீ லங்கா தெரிவு

இலங்கையிலுள்ள 10 தலைசிறந்த நிறுவனப் பிரஜைகளில் ஒன்றாக சிங்கர் சிறீ லங்காவை இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற மிகச் சிறந்த நிறுவனப் பிரஜைகளுக்கான விருது வழங்கும் நிகழ்விலேயே சிங்கர் சிறீ லங்கா மேற்படி கௌரவித்தினை பெற்றுக்கொண்டுள்ளது. அத்துடன் மிகச் சிறந்த. செயற்பாட்டுக்கான துறைசார் விருதாக "சமையற்கலைப் போதனை" திட்டத்துக்கான மிகச் சிறந்த நிலைபேறாண்மை வேலைத்திட்டத்துக்குரிய திறமைச் சான்றிதழும் சிங்கருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள சிங்கரின் விற்பனை மற்றும் வர்த்தகப் பணிப்பாளர் மகேஷ் விஜேரத்ன,

"2016ஆம் ஆண்டிலும் மிகச் சிறந்த நிறுவனப் பிரஜைகளில் ஒன்றாக இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தினால் எமது நிறுவனம் கௌரவப்படுத்தப்பட்டுள்ளமை குறித்து நாம் பெருமையடைகிறோம். எமது முன்முயற்சிகளின் தரச்சிறப்பை

SINGER®

உள்ளக ரீதியாக மீளாய்வு செய்வதுடன் இந்தக் கௌரவம் அமைந்துவிடாது புகழ்பெற்ற நடுவர்களின் மதிப்பீட்டுக்கு சமர்ப்பிக்கும் வாய்ப்பு இதன் மூலம் கிடைத்துள்ளது. இது எமது தொடர்ச்சியான முன்னேற்றத்துக்கு உதவும். எமது வெற்றிக்கு ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் பங்களிப்புச் செய்த சகல சிங்கர் ஊழியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்" - என்றார்.

இலங்கையில் நிறுவன ரீதியான நிலைபெறு தன்மையின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதும் மக்கள், புவி மற்றும் லாபத்தை மையமாகக் கொண்ட வியாபாரக் கொள்கையை ஊக்குவிப்பதுமே மிகச் சிறந்த நிறுவனப் பிரஜை நிலைபெறுதகு விருதுகள் வழங்கப்படுவதன் நோக்கமாக காணப்படுகிறது.

அதாவது, கிடைக்கக்கூடிய வளங்களை மதிநுட்பமாகப் பயன்படுத்துதல், மாசடைதலை இயன்றளவு குறைத்தல், தொழிலாளர்கள் மற்றும் பாவனையாளர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்துதல், பொதுவாகச் சகல மக்களினதும் நலன்களைப் பேணுதல் ஆகிய கொள்கைகளின் அடிப்படையிலான செயன்முறைகளையும் அமைப்புக்களையும் பயன்படுத்தி பொருள்கள் சேவைகளை உருவாக்கும் சிறந்த நடைமுறைகளையே இது குறித்துக்காட்டுகிறது என்பது நோக்கத்தக்கது.

## வரி அறவீட்டு முறைமைக்கு தாய்லாந்து ஆதரவு



இலங்கையில் தற்போது நடைமுறையில் இருந்துவருகின்ற வரி அறவீட்டு முறைமைக்கு தாய்லாந்து தனது ஆதரவினை வெளிப்படுத்தியுள்ளது.

இதன்பிரகாரம் அந்த முறைமையை ஊக்குவிப்பதற்கு தாய்லாந்து முன்வந்துள்ளதான தகவல் தரலை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் நொப்போர்ன் அட்சாரியாவனிச் வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இலங்கையில் செலுத்தப்பட வேண்டிய வரியை உரிய காலத்தில் செலுத்தாது காலங்கடத்துவோர் அதிகம் இருப்பதான தகவலும் வரி வருமானம் குறைவடைந்து காணப்படுகின்ற தன்மையும் அவதானத்திற்குரியதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் மேற்படி வரி ஏய்ப்பாளர்களை அடையாளம் கண்டு கொண்டு அவர்களை சரியான முறையில் வழிப்படுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# கொரியத் தீபகற்பத்தில் ஜப்பானின் போர்க் கப்பல்




டோக்கியோ, மே 3
வடகொரியாவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தயாராக அமெரிக்கா தனது மூன்று போர்க் கப்பல்களை கொரியத் தீபகற்பத்தில் நிறுத்தியுள்ள நிலையில் அமெரிக்காவுக்கு உதவியாக ஜப்பானும் தனது விமானம்தாங்கிப்போர்க் கப்பலை அங்கு அனுப்பியுள்ளது. வடகொரியாவின் தொடர் அணுவாயுதச் சோதனைகள் காரணமாக அமெரிக்கா அந்த நாட்டின் மீது இராணுவ நடவடிக்கையை எடுக்க எத்தனித்துள்ளது. அமெரிக்காவின் மிகப்பலம் வாய்ந்த விமானம் தாங்கிப் போர்க் கப்பலான வின்சன் உள்ளிட்ட மூன்று போர்க் கப்பல்கள் கொரியத் தீபகற்பத்தில் முகாமிட்டிருந்தன. இந்த நிலையில் ஜப்பானின் போர்க் கப்பலொன்று நேற்றுமுன்தினம் அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் நிற்கும் பகுதிக்கு சென்றடைந்தது. தென் கொரியாவில் வடகொரியாவின் ஏவுகணைகளைத் தடுக்கக்கூடிய ஆற்றல் படைத்த சாதனம் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இதனால் கொரியத் தீபகற்பத்தில் போர்ப் பதற்றம் மேலும் அதிகரித்தது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



## வடகொரியா விடயத்தில் சீனா உச்சக்கட்ட உசார்

எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் அணுகுண்டுச் சோதனை நடத்துவோம் என்று வடகொரியா எச்சரித்துள்ள நிலையில் சீனா தனது எல்லைக் கிராமங்களை பாதுகாக்கும் நடவடிக்கையில் தீவிரம் காட்டுகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
வடகொரியாவின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து சீனாவின் சென்ஜாங் நகரில் மக்களை எச்சரிக்கையாக இருக்கும்படி அபாய சங்கு ஊதப்பட்டுள்ளது. சீனாவின் பல்லாயிரக்கணக்கான சிப்பாய்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.
வடகொரியாவுக்கும் சென்ஜெங்குக்கும் இடையில்வெறும்100கிலோமீற்றர்தூரஇடைவெளியே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# கூட்டுப்படையில் குழப்பம் துருக்கி- அமெ. மோதல்



டமஸ்கஸ், மே 3
சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகப் போராடும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையில் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்று பன்னாட்டு உடகங்கள் செய்தி வெளியிட்டன.
சிரியாவில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்டேட்) அமைப்பை விரட்டும் நோக்கில் அமெரிக்கா தலைமையில் சில நாடுகள் கூட்டாக இணைந்து போரிட்டு வருகின்றன.
இந்தப் படையில் துருக்கியும் அங்கம் வகிக்கிறது. அமெரிக்காவின் ஆதரவு பெற்ற குர்து இனப் படையினரும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகப் போராடுகின்றனர்.
ஆனால் குர்து இனத்தை துருக்கி தனது எதிரிகளாகப் பார்க்கிறது.
சிரியாவின் கராசக் மலைப் பகுதி, வடக்கு ஈராக்கின் சின்ஜார் மலைப் பகுதியில் துருக்கி போர் விமானங்கள் அண்மையில் நடத்திய தாக்குதலில் 25 குர்து இனப் படையினர் உயிரிழந்தனர். இதற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது.
குர்து இன மக்களின் பாதுகாப்புக்காக அமெரிக்காவின் அதிநவீன டாங்கிகள் கராசக், சின்ஜார் மலைப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அங்கு அமெரிக்க படைகள் துருக்கி இராணுவத்தை கண்காணிக்கும் வகையில் ஈடுபட்டு வருகின்றன.
இதனால் அமெரிக்காவுக்கும் துருக்கிக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.
இந்த முரண்பாடு எல்லைமீறிச் சென்றால் அது கூட்டுப்படைகளில் பிரிவை ஏற்படுத்தும், இந்தப் பிரிவு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரை மந்தமாக்கும் என்று கருதப்படுகிறது. (ம)



## 'ஓ' வகை குருதிப் பிரிவினருக்கு மாரடைப்பு ஏற்படுவது குறைவு

'ஓ' குருதிவகையைக்கொண்டவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் அபாயம் மிகவும் குறைவு என்று ஆய்வொன்றில் தெரிய வந்தது. நெதர்லாந்து தேசா கோலே பல்கலைக் கழகம் நடத்திய ஆய்வின் அடிப்படையிலேயே 'ஓ' குருதி வகையைக் கொண்டவர்களுக்கு மாரடைப்பு ஏற்படுவது அரிது என்று தெரியவந்துள்ளது. அதேநேரம் 'ஏ', 'பி' குருதி வகைகளைக் கொண்டவர்களுக்கு மாரடைப்பு ஏற்பட வாய்ப்பு அதிகம் என்றும் ஆய்வின் முடிவில் தெரிவிக்கப்பட்டது. (ம)



## அமெரிக்காவில் சூறாவளி இயல்பு நிலை முடக்கம்

வொஷிங்டன், மே 3
அமெரிக்காவில் நேற்றுமுன்தினம் வீசிய பலத்த சூறாவளி காரணமாக 14 பேர் உயிரிழந்தனர் என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
டெக்சாஸ், ஆர்கன்சாஸ், மிசிசிபி, மிசவுரி ஆகிய மாநிலங்களில் சூறாவளியின் தாக்கம் மிகையாக உணரப்பட்டது. மணிக்கு 150 கிலோமீற்றர் வேகத்தில் காற்றுவீசியது. கனத்த மழைப் பொழிவும் இருந்தது. மின்கம்பங்கள், மரங்கள் குடைசாய்ந்தன. கிட்டத்தட்ட 2 லட்சம் வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. உயிரிழந்தவர்களைத் தவிர 100 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

## இரட்டை இலை தானாக வரும்

### ஓ.பி.எஸ். தரப்பு நம்பிக்கை

சென்னை, மே 3
அ.தி.மு. கழகத்தின் இரட்டை இலைச் சின்னம் தானாக எமது கைகளுக்கு வரும் என்று தெரிவித்தார் தமிழக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்.
தினகரன், சசிகலா ஆகியோர் விலக்கி வைக்கப்பட்டதை அடுத்து, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர் மீண்டும் இணைவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. பேச்சு நடத்த இரு தரப்பிலும் தனிக் குழுவும் அமைக்கப்பட்டது. ஆனால் பேச்சு என்பது சாத்தியமற்றுப் போகக்கூடிய நிலை தற்போது உருவாகி வருகிறது. இந்த நிலையிலேயே ஓ.பன்னீர்ச் செல்வம் சென்னையில் நேற்றுமுன்தினம் இவ்வாறு தெரிவித்தார். "உள்ளூராட்சித் தேர்தல் விரைவில் வரவுள்ளது. பெரும்பான்மைத் தொண்டர்களின் ஆதரவுடன் வெற்றி பெறுவேன். அதன் பின்னர் இரட்டை இலைச் சின் னம் தானாக எமது கைகளுக்கு வரும்" என்று ஓ.பன்னீர் செல்வம் மேலும் தெரிவித்தார். (ம)



# ட்ரம்ப் - டுடேர்தே விரைவில் சந்திப்பு



வொஷிங்டன், மே 3

பிலிப்பைன்ஸ் அதிபர் றொட்றிக்கோ டுடேர்தேயை வெள்ளை மாளிகைக்கு வருவதற்கு அழைப்பு விடுத்துள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

பிலிப்பைன்ஸின் அதிபராக கடந்த வருடம் மத்திய பகுதியில் டுடேர்தே பொறுப்பேற்றார். பொறுப்பேற்ற நாள் முதல் போதைப் பொருளுக்கு எதிராக பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தினார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள், பாவனையாளர்கள், முகவர்கள் என அத்தனைபேரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். டுடேர்தேயின் இந்த நடவடிக்கைக்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

அமெரிக்காவின் அப்போதைய அதிபர் ஒபாமாவும் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். இதனால் ஒபாமாவை 'விபச்சாரியின் மகன்' என்று டுடேர்தே விமர்சித்தார். இது பல அதிர்வலைகளைத் தோற்றுவித்தது.

இதையடுத்து கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் நடைபெறவிருந்த ஒபாமா - டுடேர்தே இடையிலான சந்திப்பு கைவிடப்பட்டது.

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பொறுப்பேற்றதும் விரிசல் ஏற்பட்டிருந்த பிலிப்பைன்ஸுடனான உறவை சீர்செய்ய கடும் முனைப்புக் காட்டிவந்தார்.



# டெல்லியுடன் இணக்கம் எடப்பாடி புது வியூகம்

சென்னை, மே 3

தமிழக அமைச்சர்கள் எவரும் டெல்லி அரசை பொது வெளியில்விமர்சிக்ககூடாது இவ்வாறு தெரிவித்தார் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி. தமிழக அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடைபெற்றது இதில் வைத்தே எடப்பாடி பழனிச்சாமி இவ்வாறு தெரிவித்தார்.

தமிழகவிவசாயிகள்டெல்லியில்நடத்தியபோராட்டத்தை மத்திய அரசு கண்டுகொள்ளவில்லை. நெடுவாசல் பகுதியில் இயற்கை எரிவாயு பெறும்திட்டத்துக்கும்மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதனால் மோடிக்கும் அவர் தலைமையிலான இந்திய மத்திய அரசுக்கும் தமிழகத்தில் தற்போது எதிர்பலை எழுந்துள்ளது. தமிழக அமைச்சர்களும் மத்திய அரசின் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்துவரும் நிலையில் எடப்பாடி இவ்வாறு ஓர் உத்தரவை நேற்றுப்பிறப்பித்தார்.

அ.தி.மு. கழகம் மோடி அரசின் (பா.ஜ.க.) கைப்பொம்மையாகச் செயற்படுகிறது என்று விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவந்தது.

குறிப்பாக தமிழக சட்டசபையின் எதிர்கட்சித் தலைவரும்.தி.மு. கழகத்தின்செயல் தலைவருமான ஸ்ரா லின் அ.தி.மு. கழகம்டெல்லியின் உத்தரவின்படியே நடந்து கொள்கிறது என்றும் கடுமையாக விமர்சித்து வந்தார். இந்தநிலையில்எடப்பாடியின் இந்த உத்தரவு விமர்சனங்களுக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் அமைந்தது என்றுகருதப்படுகிறது. (ம)

# தீவிரவாதத்துக்கு எதிரான போருக்கு துருக்கி அதிபர் எர்டகன் அழைப்பு



“ தீவிரவாதத்தால் பயம் மற்றும் துன்பம் பரவ நாங்கள் அனுமதிக்க மாட்டோம். பயங்கரவாதிகள் தங்கள் சொந்த குருதியாலேயே மூழ்கடிக்கப்படுவார்கள்

புதுடெல்லி, மே 3

தீவிரவாதத்துக்கு எதிராக போர் தொடுக்க உலகத் தலைவர்களுக்கு துருக்கி அதிபர் எர்டகன் அழைப்பு விடுத்தார்.

இரண்டு நாள் அரச முறை பயணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று இந்தியா சென்ற துருக்கி அதிபர் எர்டகன் புதுடெல்லியில் பிரதமர் மோடியை நேற்றுமுன்தினம் திங்களன்று சந்தித்து பேசினார். இந்தத் சந்திப்பில் பயங்கரவாத அச்சுறுத்தலைகளை அழிக்க இரு தலைவர்களுர்களும் உறுதி எடுத்தனர். இதன்பின்னர் உரையாற்றுகையிலேயே எர்டகன் இவ்வாறு தெரிவித்தார்.

“தீவிரவாதத்துக்கு எதிராக இந்தியாவுடன் துருக்கி துணை இருக்கும். தீவிரவாதத்தால் பயம் மற்றும் துன்பம் பரவ நாங்கள் அனுமதிக்க மாட்டோம். பயங்கரவாதிகள் தங்கள் சொந்த குருதியாலேயே மூழ்கடிக்கப்படுவார்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# நடுவானில் தடுமாறிய விமானம்

மொஸ்கோ, ஏப். 3


மொஸ்கோவில் இருந்து பாங்கொக் சென்றுகொண்டிருந்த பயணிகள் விமானம் மோசமான வானிலை காரணமாக நடுவானில் தடுமாறியது. இதில் 29 பயணிகள் படுகாயம் அடைந்தனர்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இருந்து தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கிற்கு நேற்றுமுன்தினம் பயணிகள் விமானம் ஒன்று புறப்பட்டது.

இந்த விமானம் மேலெழும்பிய 40 ஆவது நிமிடத்தில் மோசமான வானிலையில் சிக்கிக்கொண்டது. இதனால் நடுவானில்விமானம்தடுமாறியது. இதில் 29 பயணிகள் காயமடைந்தனர். சிலருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. எனினும் விமானி விமானத்தை சாதுரியமாக செலுத்தி பாங்கொக் சென்றடைந்தார். காயமடைந்த பயணிகள் மருத்துவமனையில்சேர்க்கப்பட்டனர்.

விமான பயணத்தின்போது இருக்கைக் கவசம் அணியாதபயணிகள்கடுமையாக காயமடைந்தனர்.

விமானத்தின் மேற்பகுதியில் வைக்கப்பட்ட பொருள்கள்கீழேவிழுந்ததில்சிலருக்குக் காயம் ஏற்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்திவெளியிட்டன. (ம)



மத்திய இத்தாலியில் உள்ள மிகப்பெரிய தேவாலயமான செண். டொமினிக் தேவாலயத்தின் வருடாந்த ஊர்வலம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த ஊர்வலத்தின் போது டொமினிக்கின் சிலைமீது பாம்புகள் வைக்கப்பட்டு ஊர்வலம் நடத்தப்படுவது வழமை. இந்த வருடமும் அவ்வாறே ஊர்வலம் இடம்பெற்றது. (ம)

# உலகின் மிகவும் வயதானவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்

இந்தோனேசியாவின் அடையாள அட்டைத் தகவலின்படி உலகின் மிகவும் வயதானவர் என்று அறியப்பட்ட சொடி மியோ தனது 146 ஆவது வயதில் நேற்று முன்தினம் மறைந்தார்.

இந்தோனேசியாவின் அடையாள அட்டையின்படி சொடிமியோ 1870 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி பிறந்தார் என்று குறிப்பிடப்படுகிறது. இதன்படியே அவர் உலகின் வயதானவர் என்று அறியப்படுகிறார். எனினும் அவரின் வயதை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்கள் கிடைக்கவில்லை. இதனால் அவரின் வயது தொடர்பில் இரு வேறு கருத்துக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



குணசேகரன் சக்தீனா

> ஈழப்போராட்டத்தின் ஒவ்வொரு பெறுமதியான தருணங்களையும் நானும் ஒரு போராளியாக,அந்தவாழ்க்கைக்குள்இருந்தவாளாகத் தந்திருக்கிறேன். இனிவரும் சந்ததிகளுக்கும்எமதுபோராட்டவரலாறுகள்தெரிய வேண்டும் என்ற நோக்கோடு எனது ஐந்து நூல்களையும் வெளியிடுவதில் மகிழ்வடைகிறேன்.



# வெற்றிச்செல்வியின்

## ஒரு போராளியின் காதலி

இந்த நூல்கள் அனைவருக்குமானது. ஈழப்போராட்டத்தின் ஒவ்வொருபெறுமதியானதருணங்களையும் நானும் ஒரு போராளியாக , அந்த வாழ்க்கைக்குள் இருந்தவாளாகத் தந்திருக்கிறேன். இனிவரும் சந்ததிகளுக்கும் எமது போராட்ட வரலாறுகள் தெரியவேண்டும்என்றநோக்கோடுஎனதுஐந்து நூல்களைவெளியிடுவதில்மகிழ்வடைகிறேன். இவை வெற்றிச்செல்வியின் நன்றியுடன் வெளியானவார்த்தைகள்.

வெற்றிச் செல்வியின் ஐந்து நூல்களின் வெளியீட்டு நிகழ்வுகள் கடந்த புதன் கிழமை மாலை 3.30மணிக்கு எழுத்தாளர்அ.யேசுராசா தலைமையில் யாழ்ப்பாணப் பொது நூலக மேல்தள மண்டபத்தில் நடைபெற்றன.

நிகழ்வில் 'இப்படிக்குஅக்கா'மற்றும் 'இப்படிக்கு தங்கை' நூல் குறித்து துஷ்யந்தனும்,'வெண்ணிலா'நாவல் குறித்து தர்மினி பத்மநாதனும் 'ஈழப் போரின் இறுதி நாட்கள்' வரலாற்று நூல் குறித்து கை. சரவணனும் 'போராளியின் காதலி' நாவல் குறித்துதா.அஜந்தகுமாரும்கருத்துரைகளை வழங்கியிருந்தார்கள்.

முன் அட்டைப்படத்தின் அந்த ஈர்ப்புடன்கண்களுக்குகாட்சி வெளிதந்த ஐந்து நூல்களில் ஒன்று தான் 'ஒரு போராளியின்காதலி'நாவல், ஈழப்போராட்டக்களத்தின் இன்பங்கள், இன்னல்களை தான் அனுபவித்த வடிவில் அனைவரும் எளிதில் தெரிந்து கொள்ளும் முகமாக வார்க்கப்பட்டிருக்கின்றது இந்த நாவல்.




'ஒருபோராளியின்காதலி'என்ற நாவலுக்குசொந்தக்காரிமன்னாரில் பிறந்து விடுதலைப்புலிகள் இயக்கத்துடன்தன்னைஇணைத்து ஈழப்போராட்டத்தில் ஈடுபட்டு வெடிவிபத்தொன்றில்தனதுவலது கண்ணையும்வலதுகையையும் இழந்தவெற்றிச்செல்விதான். இது இவரது முதலாவது நாவல்.

### நாவலில் பல விடயங்கள்

'ஒரு போராளியின் காதலி' பல விடயங்களைக் கூறுகின்றது. முக்கியமாகப் போராளிகள் என்றால் இப்படித்தான் இருப்பார்கள் என்ற ஒரு பொதுவான கருத்தை உடைத்தெறிகின்றது. போராளிகள்என்றால்இவர்கள் தான் என்கிற தனித்துவத்தைக் கூறுகின்றது. ஒருவிதத்தில்ஒருகாதல் கதையென்று கூட சொல்லலாம். ஒரு போராளியை அவன் போராளி என்று அறியாமல்காதலிப்பவளின்கதைஇது சுமதியின் குடும்பம் சாதியம் போன்றவற்றில் ஊறிப்போன குடும்பம். வீட்டுக்கு நண்பர்கள் வந்துபோனால் கண்டது கடியதுகளும் வீட்டுக்குள் வந்துவிடும் என்று சொல்லி பிள்ளைகளை வளர்க்கும் குடும்பம்.

சுமதிக்கும் கூட இவற்றில் பெரிதாகப்பிரச்சினைகள்ஏதுமில்லை. தாதியாகவேலைசெய்யும் இடத்திலேயும் கூட மற்றவர்களை ஏவித் தனது வேலைகளைசெய்தல், பிடிவாதம், திமிர், தலைக்கனம் என்று இருந்த சுமதி அங்கே வாமன் என்கிற வன்னியில் இருந்து வந்த இளைஞனுடன் காதல் கொள்கிறாள்.

முதல் மூன்று தமக்கைகளுக்கும் திருமணம் நடக்காவிட்டாலும் பரவாயில்லை பரம்பரைச் சொத்துகள்வெளியில்போய்விடக்கூடாதுஎன்று சொல்லிச் சுமதியை அவளது உறவில் இருந்து பெண்கேட்டுவருகின்றார்கள். சுமதிவீட்டினரும் அந்தத் திருமணத்துக்கு ஒத்துக்கொண்டு அவளைத் திருமணத்துக்கு வற்புறுத்துகின்றனர். சுமதி திருமணத்துக்கு மறுத்து, வீட்டைவிட்டு வெளியேறி வாமனைத்தேடி வன்னிக்குச் செல்கின்றாள். அங்கேதான் அவன் ஒரு போராளி என்ற விடயமும் அவளுக்குத் தெரியவருகின்றது. போராட்டத்தையும், போராளிகளையும் அடியுடன் வெறுக்கும் சுமதிக்கு இவை கசப்பான உணர்வைதந்தன. ஆரம்பத்தில் வாமன் மீது கோபம் கொண்டு அவனை இயக்கத்தைவிட்டு வெளியேறும்படிகேட்கிறாள். அந்தக்காலப்பகுதியில் கிளிநொச்சியிலேயே மருத்துவமனையில் தாதியாகக் கடமையாற்றும் சுமதி பின்னர் போராட்டத்தையும், போராளிகளையும் பற்றிய தனது மன எண்ணத்தைமாற்றிக்கொள்வதுபற்றியும், அதன் நிகழ்சிகள் வெறும் காட்சி வெளியாகவே ஒரு போராளியின் காதலி நாவல் நிலைபெறுகின்றது.

இந்த நாவல். விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்குமான உறவு, பாதுகாப்புப் பிரதேசங்கள் மீதான இராணுவத்தின் குண்டுவீச்சு , செல் வீச்சு தீ தாக்குதல், புலிகளின் கட்டாய ஆட்சேர்ப்பு, மக்களும் போராளிகளும் இராணுவத்திடம் சரணடைகின்ற இறுதிநாள்கள், அப்படிசரணடைபவர்கள்மீது விடுதலைப்புலிகளால்நிகழ்த்தப்படும்துப்பாக்கித்தாக்குதல்கள், ஐ.நா. அல்லதுபிறநாடுகள்போரின்இறுதிப் பகுதியில்நேரடியாகதலையிடுவர்என்றநம்பிக்கை மக்களிடமும் போராளிகளிடமும் இருந்த நன்மை வெளிப்பாடுகள்என்பனஇந்தஎல்லாப்புனைவுகளிலும் வந்தாலும் அவை பற்றிய படைப்பாளியின்பார்வைக்கோணம்வேறுபட்டதாகவும் உள்ளது.

### மருத்துவப் போராளிகள்

இதுவரைபெரியளவில்பேசப்படாத'ஈழத்து மருத்துவபோராளிகள்'பற்றியும்போர்க்காலங்களில்மருத்துவத்தேவைகள்அதிகரித்திருந்த சூழலில் பயிற்சிகளின் மூலமாக போராளிகளே மருத்துவர்களாகவும், தாதியர்களாகவும், இதர உதவிகள் புரிவோராக வும் பணியாற்றியதன் பதிவாக இந்த நாவல் முதன்மை பெறுகின்றது. போர்க்காலத்தில்பேரழிவுகளுக்கு மத்தியிலும் மனிதம் தொடர்ந்தும் உயிர்ப்போடும் இருந்தது என்பதன் சான்றாக இந்த மருத்துவத் துறை யின் பணிகள் இருந்திருக்கின்றன.

போர் உச்சத்தில் இருக்கின்றபோது போதிய மருந்துகளும் மருத்துவ வசதிகளும், முறையான வைத்தியர்களும் தாதியரும் இல்லாமல் எவ்விதம் மருத்துவமனைகள் இயங்கின என்பதன் பதிவாகவும்ஒருபோராளியின்காதலி அமைந்து விடுகின்.

குப்பைத் தொட்டியில் வீசப்பட்டிருக்கும் வெட்டி அகற்றப்பட்ட குழந்தையின் கை கூறும் கதை சரியான வசதிகள் இல்லாத நிலையில் காயமுற்ற இரண்டு குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றுமாறு படுகாயமுற்றிருக்கின்ற தந்தை கேட்கின்றபோது ஒரு பிள்ளையை மாத்திரம் காப்பாற்ற அவகாசம் உள்ளதை அறிந்து அதிக பாதிப்பில்லாத காயங்கள் அடைந்த பிள்ளைக்கு சிகிச்சை அளித்து மற்றப் பிள்ளையை அப்படியே சாகவிடும் அவலாம்என அத்தனையும் இதில்பதிவாகியுள்ளது இறுதிப்போரின்துன்பியலைக்காட்டுகின்றது. காயமுற்றபோராளிகளின்குப்பியைஅகற்றுவதுஎன்கிற மரபானது - அவர்கள் வலிகளுடனும் மருத்துவ வசதியில்லாமலும் கொடுமைப்படக் கூடாது என்ற எண்ணத்துடன்-கைவிடப்பட்டுஅவர்கள்விரும்பினால் குப்பி கடித்து சாகட்டும் என்று விடப்பட்ட நிலைமைகளின் வெளியாக , மானுட அவலங்களின் பதிவாக இது அமைகின்றது.

வெற்றிச்செல்வியின் நூல்களின் இந்த நாவலின் பதிவு இவ்வாறு இடம்பெற்றிருந்தாலும் ஏனைய நூல்களும் பலவற்றைச் சொல்லிச் செல்வதை நூல்களை வாசிக்கும் போது அவதானிக்க முடிகின்றது.

> "போராளிகள் என்றால் இப்படித்தான் இருப்பார்கள் என்ற ஒரு பொதுவான கருத்தை உடைத்தெறிகின்றது. போராளிகள் என்றால் இவர்கள் தான் என்கிற தனித்துவத்தைக் கூறுகின்றது. ஒரு விதத்தில் ஒரு காதல் கதையென்று கூட சொல்லலாம்; ஒரு போராளியை அவன் போராளி என்று அறியாமல் காதலிப்பவளின் கதை இது.



# கிளிநொச்சியும் மலையகத் தமிழரும்

குறிஞ்சிக் குமரன்



கிளிநொச்சி கலாசார அவையினால் அண்மையில் வெளியிடப்பட்ட கரை எழில் 2016 என்ற வெளியீட்டில் வரலாறு என்ற பகுதியில் 'கிளிநொச்சியும் மலையகத் தமிழரும்' என்றொரு கட்டுரை வெளிவந்திருந்தது. இந்தக் கட்டுரையில் மலையக மக்களுடன் கூடிவாழும் கரைச்சிப் பிரதேசத்தின் பாரம்பரிய குடிமக்கள், யாழ்ப்பாணக்குடாநாட்டிலிருந்தும், தீவகப் பகுதிகளிலிருந்தும் குடியேற்றப்பட்ட குடியேற்றவாசிகள், பெருங்கமங்களுக்குச் சொந்தக்காராரானமத்தியதரவர்க்கத்தினர். 1958இல் அனுராதபுரம்தொட்டுகாலிவரையுள்ள சிங்களப்பகுதிகளிலிருந்துவிரட்டப்பட்டு இங்கு குடியேறிய மக்கள் 1977, 1983 காலப் பகுதியில் இடம்பெற்ற இனக்கலவரங்களின்போது இங்கு வந்த மலையக மக்கள் என உள்ள மக்களில் எந்த ஒரு வகையைச் சேர்ந்தவரோ அல்ல. இவர் சமூகங்களையும் சமூகங்களின் வரலாறுகளையும் சமூகங்களிடையே நிலவும் உறவுகளையும் அணுகி ஆராயும்ஒருஆய்வாளருமல்ல. இவருக்கும் கிளிநொச்சிக்கும் உள்ள உறவு 1995 யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின்பு 2009இல்போர்முடிவுக்குவரும்வரை ஒருபோராளியாகத்தன்னை அடையாளப்படுத்தி இங்கு உலவித் திரிந்தது மட்டும்தான்.

அப்படியான ஒருவரைக் கரை எழில் 2010 மலர்க்குழு கிளிநொச்சியின் வரலாறு பற்றிய கட்டுரையை எழுத எப்படி அனுமதி வழங்கியுள்ளது என்பதை எம்மால்புரிந்துகொள்ளமுடியவில்லை. அது மட்டுமன்றி இந்தக் கட்டுரையில் காணப்படும் தவறான தகவல்களையும், எழுந்தமானமான கருத்துகளையும் பொறுப்பான ஒரு மலரை வெளியிடும் குழுவினர் எப்படி அனுமதித்தனர் என்பதும் விடை காணப்பட முடியாத கேள்வியாகவே உள்ளது.

**வரலாற்றில் தவறு**

இதில் வெளியிடப்பட்ட சில கருத்துகள் வரலாற்றைத் திரிபு படுத்தும் வகையிலும், மலையக மக்களைஅவமதிக்கும்வகையிலும் அமைந்துள்ள நிலையில் சில உண்மைகளை முன்வைக்க வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது.

ரிச்சேட்என்றஆங்கிலேயஆள்பதியாக இருந்தபோதும் இரணைமடுக்குளத்தை அமைக்கக் கூடிய வாய்ப்பைக் கண்டறிந்து குளம்காட்டுவதைதானே முன்னின்று நடத்தியவர் அப்போது வடக்கின் அரச அதிபராகப் பதவி வகித்த துவைனர் என்றஆங்கிலேயரே. அவர்கொழும்பிலிருந்துயாழ்ப்பாணம்நோக்கித்தனது குதிரைக் கோச்சியில் வந்து கொண்டிருந்த போது ஆனையிறவில் ஏராளமான நீர் பெருக்கெடுத்து வந்து கடலில் சேர்வதை அவதானித்தார். ஆனால் அந்தப்பகுதியில்மழைபெய்யவில்லை. தெற்குப்பக்கமாகப்பார்த்தபோது அது இருள் மண்டிக்கிடந்து அங்கு பெரும் மழை பெய்வதைக் காட்டியது. காட்டில் பெய்யும் மழை நிர் கடலில் சேர்ந்து வீணாகிப் போவதைத் தடுத்து விவசாயத்துக்குப்பயன்படுத்த வேண்டுமென அவர் எடுத்த முடிவின் அடிப்படையிலேயேகுளவிரிவாக்கம்ஆரம்பிக்கப்பட்டது.சேர்பொன்.இராமநாதன்வடபகுதியின் உற்பத்திவலுவைஅதிகரிக்கும்நோக்குடன் அதில் ஆர்வமுடன் செயற்பட்டார்.

இரு ஆறுகளை ஒன்றிணைத்து அமைக்கப்பட்டதாலேயேஇரணைமடு என்றபெயர்வந்ததுஎன்றகூற்று முற்றிலும் தவறானது. செபமடுவிலிருந்து கனகராயன் குளம் வரை காடுகளிலுள்ள அறுத்தோடிகளின் நீரையும், இடையிலுள்ள சிறு குளங்களின் மேலதிக நீரையும் சேர்த்துக் கொண்டு கனகராயன் ஆறாக கனகராயன் குளத்தை வந்தடைந்து இரணைமடு நோக்கி ஒலுமடு ஊடாக அந்த ஆறு வருகிறது. இடையிடையே அறுத்தோடிகள் எனப்படும் மழைகாலத்தில் மட்டும் உருவாகும்சிறுகாட்டாறுகள் அதில் இணைந்தபோதும் கனகராயன் அதே இரணைமடுவுக்கு நீர்வழங்குகிறது. அதைமக்கள் பேராறு என அழைப்பதுண்டு.



ஆனால் இரணைமடுக்குளம் கட்டப்படும்முன்பு அங்கு இரு குளங்கள் இருந்தன. இரணைமடு அமைக்கப்பட்டு நீர் தேக்கப்பட்டதன்மூலம் அந்த இருமடுக்களும்ஒன்றாகிவிட்டன. அதனாலேயே இரணைமடுஎன்றபெயர் வந்தது.

இந்தக்குளம்கட்டப்பட்டபின்புமுதலாம் வாய்க்காலிலிருந்துஆறாம்வாய்க்கால் வரைக் காணிகள் வழங்கப்பட்டன. சேர்.பொன் இராமநாதன் முயற்சியின் பேரில்நீதிபதிகள், மருத்துவர்கள், உயர் அரச அதிகாரிகள் யாழ்ப்பாணத்தின் வசதி படைத்தவர்கள், வர்த்தகர்கள் எனப் பல தரப்பினரும் காடுகளை அழித்து வீதிக்கரைகளில் தென்னந்தோட்டங்களையும் அவற்றின் பின்னால் வயல் நிலங்களையும் உருவாக்கினர். இவற்றின் உருவாக்கத்தில் யாழ்ப்பாணநிலவுடைமையாளர்களின் குடிமக்களே கூலிகளாகப் பெரும் பங்கு வகித்தனர். இவற்றில் இந்தியாவிலிருந்து வல்வெட்டித்துறையூடாக வந்தவர்களும் சிறிய தொகையினர் இணைந்து கொண்டனர்.

யாழ்ப்பாணக் குடிமக்கள் தங்கள் வேலைகளை முடித்துச் சொந்த ஊர் திரும்பிய பின்பு, இவர்களே பெரும் தனக்காரர்களின் கமங்களின் காவலர்களாகவும் விளங்கி கமத்தின் சகல நிர்வா கங்களையும் மேற்கொண்டனர். அது மட்டுமன்றி வைக்கோல் கத்தை கட்டும், தொழிலில் இவர்கள் அதிக வருமானத்தை மேலதிகமாகப் பெற முடிந்தது. அவர்களின் வாரிசுகள் பலர் இப்போதுபெருங்கமக்காரர்களாகச் செல்வாக்குடன் வாழ்வதைக் காணலாம்.

சேர்.பொன் இராமநாதனும், அரச அதிகாரிகளும் சட்டதிட்டங்களை அறிந்து காணிகளை உடமையாக்கினார்கள் என்ற கருத்துப் படுமோசமானது. சாதாரண மக்களால் அப்படியானபணிகளில்பெரும்முதலீடு செய்ய முடியாத நிலையில் மத்திய தர வர்க்கத்தினர் வலிந்து அழைக்கப்பட்டனர். சேர்.பொன்.இராமநாதன் 1000 ஏக்கரைச்சொந்தமாக்கிக்கொண்டார். என்ற அபத்தமான கருத்து மன்னிக்கக் கூடிய ஒன்றல்ல அந்த ஆயிரம் ஏக்கர் விஜயரத்தினம் என்ற திருமணமாகாத ஒருவரால் பராமரிக்கப்பட்டு, பரமேஸ்வரா கல்லூரி, இராமநாதன் பெண்கள் கல்லூரி என்பவற்றுக்கு அதன் வருமானம் சேர்ப்பிக்கப்பட்டது. அது மட்டுமன்றி அதில் குடியிருந்த மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு அவர்கள் வீடுகள்கட்டிவசதியாகவாழ்கின்றனர். இது மட்டுமன்றி அந்த மக்களின் பிள்ளைகளில் பலர் அந்த நிதியத்தின் செலவில் படிப்பிக்கப்பட்டு இன்று உயர் பதவிகளில் உள்ளனர்.

சேர்.பொன் இராமநாதனை நில ஆசை பிடித்தவரெனக் குறிப்பிட்ட கட்டுரையாளருக்குஇவைபற்றிஏன்சொல்லமுடியவில்லை அல்லது அவர் ஏன் சொல்ல விரும்பவில்லை. அதே வேளை அந்த மக்களை ஆதரித்தோர் அவர்களை எப்போதும்கூலிகளாகவைத்திருந்தனரேயொழிய சுயமாக முன்னேற இடமளிக்கவில்லையென்றகூற்றுஎவ்வளவு நஞ்சத்தனமானது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

இன்றுஅந்தமக்களின்வாரிசுகள் மருத்துவத்துறை, கல்வித்துறை, அரசநிர்வாகத்துறை போன்ற பிரிவுகளில் உயர் பதவியை வகிப்பதுடன் பலர் பெரும் கமக்காரர்களாகவும் வர்த்தகர்களாகவும்விளங்கிவருகின்றனர்ஒரு இந்திய வல தொழிலாளியின் இரு பிள்ளைகளும்மருத்துவர்களாகப்பணிபுரிகின்றனர். அவர்களை சுயமாக முன்னேற அவர்களை ஆதரித்தோர் தடையாக விளங்கியிருந்தால் அவர்கள் இப்படி உயர்நிலையை எட்டியிருக்க முடியுமா எனக்கட்டுரையாளரைக்கேட்கவிரும்புகிறோம்.

**இனக் கலவரம்**


மேற்படிகட்டுரையில்1958இனக்கலவரத்தில்இடம்பெயர்ந்தோரில்வவுனியாவில்தங்கியவர்களைவிடஏனையோர் மலையகத்துக்குத் திரும்பிவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. 1958 இன அழிப்பு நடவடிக்கைகள் மலையகத் தோட்டங்களுக்கு உள்ளே பரவவில்லை. ஆனால் மலையகத்தில் பல தோட்டங்களுக்கு மத்தியில் ஒரு குட்டி நகரம் இருக்கும்.

அதில் வர்த்தகம், சிறுதொழில்கள் என்பவற்றில் ஈடுபட்டிருந்த தமிழர் தாக்கப்பட்டுவிரட்டப்பட்டனர். சிலர்கொல்லவும் பட்டனர். கண்டி தவிர்த்த ஏனைய மலையக் பெருநகரங்களிலும் இன அழிப்புநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அனுராதபுரம் முதல் காலிவரை உள்ள நகரங்களில் பெரும் இன அழிப்பு அரங்கேற்றப்பட்டது.

(தொடரும்)

# அதிர்ஷ்டக் கற்கள்

## வைரம்



சுக்கிரன் வைரத்தின் ஆங்கிலப் பெயர் டைமண்ட் ஆகும். வைரத்தைப் பற்றி அறியாதவர்களே இருக்க முடியாது. வைரம் அதிக கடினத் தன்மை வாய்ந்தது என்பதால், வைரத்தை வைரத்தால் மட்டுமே அறுக்க முடியும்.

நிறமற்ற, நீலம் அல்லது சிவப்பு நீல ஒளியைக் கொண்ட, கரும்புள்ளிகள் இல்லாத வைரமே மிகவும் சுபமான வைரமாகும். மஞ்சள், சிவப்பு ஒளி தரும் வைரம், அரசியலில் உயர் பதவிகளை வகிக்கும் ஆற்றலைத் தருகிறது. வெண்மையான வைரம் மதம் மற்றும் ஆன்மிக, தெய்வீக காரியங்களுக்கு ஏற்றது. மஞ்சள் நிறம் மட்டும் கொண்ட வைரம் வெற்றியையும் செல்வ செழிப்பினையும் தரும். சிற்றின்ப நோய்கள், சிறுநீர் சம்பந்தப்பட்ட நோய்கள், கண் நோய் போன்ற நோய்களும் வைரத்தை அணிவதால் குணமாகும். ஆண் குழந்தையை விரும்புபவர்கள் சிறு கருமை கலந்த வைரங்களை அணிவது நன்மையளிக்கும். வைரம் அணிபவர்களை விஷ ஜந்துக்கள் மற்றும் தீய ஆவிகள் தீண்டாது.

இந்தியாவில் கோகினூர் என்ற இடத்தில் எடுக்கப்படும் வைரம் மிகவும் தரம் வாய்ந்ததாகவும், விலை உயர்ந்ததாகவும் உள்ளது. தற்போது ஆப்பிரிக்காவில் உள்ள கிம்பர்லி என்ற இடத்திலிருந்தும் வைரம் வெட்டி எடுக்கப்படுகிறது. வைரத்தின் தெளிவு நிறம், எடை இவற்றை வைத்தே இதன் விலையும் நிர்ணயம் செய்யப்படுகிறது. வைரத்தை எவ்வளவு நாட்கள் உபயோகித்தாலும் அதன் ஓரங்கள் தேயாமலும் நுணுங்காமலும் காணப்படும்.



# வரலாற்றில் இன்றைய தினம்

1481-றொடீஸ் தீவைத் தாக்கிய மூன்று பெரிய நில நடுக்கத்தில் 30000 பேர் வரை சாவடைந்ததாக மதிப்பிடப்பட்டது.

1802-வோஷிங்டன் டிசி, நகராக கூட்டிணைக்கப் பட்டது.

1837- ஏதென்சில், ஏதென்ஸ் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

1860- பதினைந்தாம் சாள்ஸ் சுவீடனின் அரசாக முடிசூடினார்.

1913 -ராஜா ஹரிச்சந்திரா டுழு நீளப்படமாக இந்திய திரைப்பட தொழிற்துறைத் தொடக்கமாக வெளிவந்தது.

1921 -அயர்லாந்து வட அயர்லாந்து தென் அயர்லாந்து எனப்பிரிக்கப்பட்டது.

1937 -புனைகதையில், ஜோன் வித் வைன்ட எனும் மார்கரட் மிச்செலின் நாவல் புளிட்சர் விருது பெற்றது.

1939 -அகில இந்திய போவர்ட் புளக் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸால் தொடங்கப்பட்டது.

1947 -போருக்குப் பிந்தியதான புதிய ஜப்பானிய அரசமைப்பு நடைமுறைக்கு வந்தது.

1973-108 மாடின் னட்டடமாள சீர்ஸ் கோபுரம் 1451 அடி உயரம் கொண்டதா சிக்காகோவில் உலகின் மிக உயர்ந்த கட்டடமாக உயர்ந்து நின்றது.

1986 -கொழும்பு விமான நிலையத்தில் UL512 விமான சேவை விமானத்தில் குண்டு வெடித்தில் 21பேர் சாவடைந்ததுடன் 41பேர் காயமடைந்தனர்

2003 -கரடிவெட்டி பிரதேச சபை முன்னாள் தலைவர் சுட்டுக் கொலை

2003- பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாக வேண்டும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விருப்பம் அதுவே என அதன் நாடாளுமன்ற உறுப்பினர் புலிகளிடம் தெரிவிப்பு

2003 -மீண்டும் பேச்சு ஆரம்பிக்க வேண்டும் உலாமாக்கள் புலிகளிடம் வலியுறுத்து கிளிநொச்சியில் தங்களைச்சந்த்தது புச்சு

2003 -சினிமாப் படத் தயாரிப்பாளர் ஜீவி தற்கொலை செய்துகொண்டார்.

2003 -கைதிகளுக்கு அனுப்பிய பணம் கையாடியதை நிருபித்தால் நாடாளுமன்ற பதவியைத் துறப்பேன் என செய்தியாளரிடம் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

2003 -ஈழத்து நாதஸ்வரமேதை பி.எஸ்.பிச்சையப்பர் இந்தியாவில் காலமானார்

2006 -உதயன் தாக்குதல் சம்பந்தமாகக் கைதானோர் பிணையில் விடுதலை.

2006- அரசின் அசமந்தப் போக்கினாலேயே ஊடகக் கொலைகள் தொடர்கின்றன என பன்னாட்டு ஊடக அமைப்பின் தலைவர் கிறிஸ்லோபர் வொரன் தெரிவிப்பு

2006 -உதயன் மீதான தாக்குதல் அரசே பொறுப்புக் கூறவேண்டும் என மாவைசேனாதிராஜா கண்டனம்.

2006 -யாழ். அரச அதிபர் கணேஷ் உதயன் தாக்கப்பட்டது தொடர்பாக கவலை வெளியீடு

2006 -கொழும்பு குண்டு வெடிப்புத் தொடர்பாக சந்தேகத்தில் இதுவரை 300 பேர் கைது 35பேர் தொடர்ந்தும் தடுத்து வைப்பு


2006 -உதயன் மீதான தாக்குதல் அரசு வன்மையாகக் கண்டிப்பதாக பன்னாட்டு ஊடகவியலாளர் தின நிகழ்வில் அரசதலைவர் தெரிவிப்பு

2007 -சந்திரிக்காவுக்கான சிறப்புச்சலுகைகள் இரத்துச் செய்து உயர் நீதிமன்றம் தீர்ப்பு அரசமைப்பை மீறினால் சிறப்புரிமைகளை இழப்பர் எனவும் அறிவிப்பு.

**நாளை**

**சித்திரை-21**
வியாழக்கிழமை -04.05.2017
திதி: நவமி பி.இ.12.03
நட்சத்திரம்: ஆயிலியம் மு.ப.09.09
சுபநேரம்:07.26-08.56 வரை
ராகுகாலம்:01.26-02.56 வரை

# சமகால சமூகப் பிரச்சினைகளைப் படம்பிடித்துக் காட்டும் "இரங்கி" சிறுகதைத் தொகுதி




தேசிய கலை இலக்கியப் பேரவையின் உறுப்பினரும் ஆசிரிய ஆலோசகருமான க.சிகவரனது "இரங்கி" சிறுகதைத் தொகுதி தகைமைசார் சான்றோர் பெருமக்களால் கலை இலக்கியப் பேரவையின் வெளியீடாக வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

13 சிறுகதைகளை உள்ளடக்கி கையடக்கமான அமைப்பில் யாழ்.மண்ணில் குறியீடுகளில் ஒன்றான பனை மரங்களை அட்டைப் படமாகத் தாங்கி இந்தச் சிறுதைத் தொகுதி வெளிவந்துள்ளது. ஆசிரியரின் முதற் சிறுகதைத் தொகுதி இதுவாகும். இந்தச் சிறுகதைகளில் பெரும்பாலானவை ஜீவநதி, தாயகம், ஞானம், புது வசந்தம், தமிழருவி, தினக்குரல் முதலான சஞ்சிகைகளிலும் பத்திரிகையிலும் வெளிவந்தவையாகும். ஆசிரியர் க.சிவகரனது சிறுகதைகள் இந்த மண்ணிலுள்ள சமகாலச் சமூகப்பிரச்சினைகளைப் படம்பிடித்துக் காட்டுவனவாகவே உள்ளன. இன்று எம்மிடையே காணப்படும் உள்ள ஏற்றத் தாழ்வுகள் சூழல்பாதிப்புக்கள் கல்விப் புல ஏற்றத்தாழ்வுகள் நவகாலணித்துவம் போன்ற பிரச்சினைகள் சிறுதைகளில் அழுத்தம் பெறுகின்றன.

இவரது "நஞ்சுண்ட கண்டன்" எனும் சிறுகதை நீர்ப்பிரச்சனை பற்றிப் பேசுகிறது. குறிப்பாகச் சுன்னாகம் நீர் மாசு பற்றிப் பேசுகிறது. நீர் மாசு பற்றிப் உருவகப்படுத்திக் கூறியிருப்பதுடன் ஆசிரியரது துறைசார் அறிவும் ஆளுமையும் வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம். கல்விப் புலம் சார் பிரச்சினைகளை சூரியவம்சம் தரிசனம் முதலான கதைகள் மூலம் விளக்கிக் கூறியுள்ளார். காடேறி எனும் சிறுகதை நவ காலனித்துவத்தை உருவகப்படுத்திக் கூறியிருப்பதுடன் இந்த மண்ணுக்குரிய பண்பாட்டம்சமான நாட்டார் வழிபாட்டு நம்பிக்கைகளையும் கூறுவதாகவுள்ளன.

ஆசிரியரின் சிறுகதையில் கையாளப்பட்டுள்ள மொழிநடைகள் வியந்து போற்றத்தக்கனவாகவுள்ளன. கதைக்கருக்களுக்குப் பொருத்தமான உவமை உருவகங்கள் தெள்ளத் தெளிந்த மொழிநடை வாசிக்கத் தூண்டும் வைரவரிகள்சிறிய வசன அமைப்பு என்பன இவரது மொழி ஆளுமைக்குச்சான்றாகவுள்ளன. எடுத்துக்காட்டாக இரங்கி எனும் சிறுகதையில் கையாளப்பட்டுள்ள சிவம் சிவப்பானவன், அவன் உதடுகள் கொவ்வைப் பழம் போன்றவை மார்பு அகன்றது. போன்ற வசனங்களைக் கூறலாம். ஒரு சிறுகதை ஆசிரியருக்கு இருக்க வேண்டிய உயர் பண்புகளில் ஒன்று சிறுகதையாசியர்கள் தன் ஆளுமைகளூடாகத் தானும் வளர்ந்து தான் சார்ந்த சமூகத்தையும் நெறிப்படுத்த வேண்டும். இந்த உயரிய பண்பினை ஆசிரியர் க.சிவகரனது முதலாவது சிறுகதைத் தொகுதியிலான இரங்கி வெளிப்படுத்தி நிற்கிறது.

இந்த வகையில் ஆசிரியர் தன்னையொரு சிறந்த சிறுகதையாசிரியராக அடையாளப்படுத்தி நிற்பது வரவேற்கத்தக்கது. அவரது இலக்கியப்பணி பயணம் தொடர வாழ்த்தி நிற்போம்.

கவிஞர் சரசாலையூரான்

# சமூக சேவகர் கந்தையா குமாரசாமி

காலத்தால் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தில் மாணப்பெரிது எனும் வள்ளுவனின் வரிகளுக்கு ஏற்க அமரர் சமூகசேவையாளர் கந்தையா குமாரசுவாமி நன்றிப்பெருக்கோடு சைவத்தமிழ் உலகம் நினைவு கூரக் கடமைக்கப்பட்டுள்ளது.

இணுவில் கிழக்கில் கந்தையா அன்னம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த இவர். இணுவில் மத்திய கல்லூரியிலும் உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் கல்விகற்றிருந்தார். விவசாயத்தில் நாட்டங்கொண்டு பெரும் விவசாயியாகத் திகழ்ந்தவர். ஏழை விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு இணுவில் ஜோதி இளைஞர் விவசாயக் கழகத்தினை 1960களில் ஆரம்பித்து செயலாளராகச் செயற்பட்டவர். கொழும்பு கல்வி நிறுவன முகாமையாளராகவும் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும் இருந்து பணியாற்றியவர். கொழும்பு பெட்டா ரேட் கம்பணிப்பங்களராகவும் இருந்து விவசாயப் பொருள்களைச் சந்தைப் படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.




1978 ஆம் ஆண்டிலிருந்து மட்டக்களப்பு குபேரன் ஏஜென்சீஸ் நிறுவக அதிபராகவும் செயற்பட்டவர். இதேகாலப்பகுதியில் றோட்டறிக்கழக அங்கத்தவராக இருந்து பல சமூக சேவைகளைப் புரிந்தவர் இவர். இவ்வாறு பொருள் தேடலிலும் பொதுச்சேவையிலும் அயராது ஈடுபட்டு வந்தவர். 1999 களில் வான்கூருக்குச் சென்று வாழ்க்கையை ஆரம்பித்திருந்தார். அங்கும் ஆலயப்பணியிலும் ஆத்மீகப் பணியிலும் ஈடுபட்டிருந்தார். வான்கூர்களாகத் துர்க்கையம்மன் ஆலய நிர்வாகசபைத் தலைவராக இருந்து பணியாற்றிய பெருந்தகை.

சென்ற இடமெல்லாம் இவர் தம் சமூக சேவைப் பணிகளினால் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்தவர். அனைவராலும் குமாரசுவாமி அண்ணை என அன்பாக அழைக்கப்பட்டவர். அவரது நாமம் அன்பின் அடையாளமாகவும் சேவையின் அடையாளமாகவும் அனைவராலும் உச்சரிக்கப்பட்டு வருகிறது.

அத்தகைய பெருமகனார் வன்கூவரில் கடந்த மாதம் 08 ஆம் திகதி இறைபதம் அடைந்திருந்தார். தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலர் தோன்றலிற் தோன்றாமை நன்று எனும் வள்ளுவரின் வாய்மொழிக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் அமரர் குமாரசுவாமி இவர் வலிகாமம் கல்வி வலயத்திட்டமிடல் பணிப்பாளர் தேவமனோகரனின் மாமனார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

என்.பி.ஸ்ரீந்திரன்



எமது பெண்களின் 'சீரியல்' மோகம் ஒரு 'சீரியேஸ்' வியாதியே ஆகும். இதனால் கிடைக்கும் பயன்களை விட இழப்புக்களையும் துன்பங்களையுமே அதிகமாக அறுவடை செய்ய வேண்டியுள்ளது.

# தொல்லைகள் தரும் தொலைக் காட்சித் தொடர்கள்

மிருசுவில் தமிழ்தாசன்

வளர்ந்துவரும்நவ நாகரிக உலகில் தொலைக் காட்சிச் சேவையின் வகிபாகம் மிக அதிகமாகவே காணப்பட்டு வருகின்றது. எமது இலங்கைத் திருநாட்டை எடுத்துக் கொண்டால் இந்தச் சேவையானது 1970 களின் பின்பகுதியிலே ஆரம்பமாகி அரச நிறுவனமாகத் தோற்றம் பெற்றது. காலப் போக்கில் சில தனியார் நிறுவனங்களும் தொலைக் காட்சி சேவை மீது தங்கள் பார்வையைப் பதித்துக் கொள்ள இந்தச் சேவை இலங்கையிலே நல்ல வரவேற்பைப் பெற்றது. இதன் வருகையின் விளைவால் பல்லாண்டுகளாக மக்களுக்குச் சேவையாற்றி வந்த வானொலியின் மதிப்பென்பதும் படிப்படியாகக் குறையத்தொடங்கிய தென்பதும் உண்மையே. ஒரு காலத்தில் இலங்கை வானொலியில் நாடகங்களுக்கென்று ஒரு தனியிடமிருந்தது.

குறு நாடகங்கள், அரை மணி நேர மற்றும் தொடர் நாடகங்கள், வானொலி நேயர்களின். மனங்களைத் தம்வசமிழுத்து நின்றன். இதை நன்குணர்ந்த தொலைக்காட்சி நிறுவனங்கள் தங்களின் தயாரிப்புக்களுடன் நாடகங்களுக்குக்கென்று ஒரு விசேடமான இடத்தை வழங்கத் தொடங்கின.

இந்த நிலையில் விஞ்ஞான மற்றும் பொருளாதார வளர்ச்சியின் விளைவாகத் தமிழகத்து தொலைக்காட்சி அலைவரிசைகளும் இங்கே ஊடுருவத் தொடங்கின. இந்தப் புதிய வருகையைக் கண்ட எம்மவர்கள் இலங்கைத் தொலைக் காட்சிகளை மெல்ல மெல்ல உதாசீனம் செய்தது மட்டுமல்லாது தமிழகத்துத் தொலைக்காட்சிகளின் பக்கம் தாவத் தொடங்கினர்.

புதிய திரைப் படங்கள், நாடகத் தொடர்கள் போன்றவைகளுடன் பல்வேறு பொழுது போக்கு அம்சங்களையும் பார்க்கக் கூடியதாயிருந்த படியால் ஏராளமான மக்கள் தமிழகத்துத் தொலைக் காட்சிகளை விரும்பிப் பார்த்தனர். தங்களின் உறுதித்தன்மையை வெளிப்படுத்தும் நோக்கோடு ஏராளமான சமூக நாடகங்களை ஒளிபரப்புச் செய்த தமிழகத்து தொலைக்காட்சி நிறுவனங்கள் அதில் முழுமையான வெற்றியும் கண்டன.

**தொடர் நாடகங்களின் பேரெழுச்சி**

இதனைத் தொடர்ந்து தொடர் நாடகங்கள் பேரெழுச்சியுடன் இலங்கை முழுவதிலும் வலம் வரத் தொடங்கின. இந்த நாடகங்கள் எமது மக்களுக்கு ஓர் ஊட்டம் மிக்க பொழுது போக்காக அமைந்து கொண்டன என்பது ஒரு புறமிருக்க, இன்னொரு புறம் கவனிப்போமேயானால் இந்தத் தொடர்கள் எமது சமூகத்தில் ஒரு குணப்படுத்த முடியாத தொற்று

ஒரு குடிகாரனால் எப்படி மதுவை மறக்க முடியாமலிருக்கின்ற நிலையிருக்கின்றதோ!, சூதாடும் ஒருவன் எவ்வாறு அதைக் கைவிட முடியாத நிலையிலிருக்கின்றானோ அதுபோலவே இவர்களும் நாடகத் தொடர் பார்க்காது இருக்க முடியாதவர்களாகவே இருக்கின்றார்கள்.


நோயாக மாற்றங்கொண்டுள்ளமையையும் புரிந்து கொள்ளலாம். இதன் வசப்பட்டவர்கள் இதற்கடிமையாகி தன் வசமிழுந்து, தம் கடமைகளை மறந்து, பந்த பாசங்களை துறந்து நாடகமே வாழ்க்கையெனப் பித்து பிடித்தலைப வர்களாக மாறியுள்ளதை நாம் பார்த்து வருகின்றோம். குறிப்பாகச் சொல்லப் போனால் எமது யாழ்ப்பாணப் பகுதியில் வாழும் பெண்களே தொடர் நாடகங்களில் அதிகமாக நாட்டம் கொண்டிருக்கின்றனர் என்பது ஒன்றும் இரகசியமல்ல. வயது வேறுபாடின்றி இளசுகளும் பழசுகளும் ஒன்று சேர்ந்து தம் கடமைகளை மறந்து கிட்டத் தட்ட பித்துப் பிடித்தவர்களாகவே மாறி வருகின்றனர். ஒரு தடவை பார்த்து விட்டால் மறுநாளும் பார்க்கத் தோன்றும் ஒரு வெறித் தனமான ஆர்வம்! நேற்றைய காட்சியில் நடந்த சம்பவங்களைப் பற்றி விவாதிப்பதும், இனி வரப் போகும் தொடரின் சம்பவங்களை ஊகித்து எதிர்வு கூறலும், இனம் புரியாத பரபரப்பும், என்ன நடக்குமோ ஏது நிகழுமோ என்ற திகிலுமாகத் தமது பொன்னான நேரங்களை வீணடித்துக் கொண்டிருக்கும் பெண்கள் எம் மண்ணில் ஏராளம் பேர் உள்ளனர். தொடரில் வரும் தமக்குப் பிடித்த பாத்திரங்களைச் சிலாகித்துப் பேசுவதும், பிடிக்காத வர்களைத் திட்டித் தீர்ப்பதும், சோகமான காட்சிகளைப் பார்த்துக் கண்கலங்கி அழுவதுவும், மகிழ்ச்சியான இடங்களில் தம்மை மறந்து கைதட்டிக் கரகோஷம் செய்து உற்சாகமடைவதுவும் இவர்களைப் பொறுத்த வரையில் இச்சையின் செயல்களாகவே காணப்படுகின்றன. தம்மை மறந்த நிலையில் நாடகத் தொடர்கள் மீதே சதா லயித்துப் போனவர்கள் ஒரு நாள்க் கூட அதைப் பார்க்காது இருக்க முடியர்தவர்களாயிருக்கின்றனர். ஒரு குடிகாரனால் எப்படி மதுவை மறக்க முடியாமலிருக்கின்ற நிலையிருக்கின்றதோ!, சூதாடும் ஒருவன் அதைக் கைவிட முடியாத நிலையிலிருக்கின்றானோ! அதுபோலவே இவர்களும் நாடகத் தொடர்களைப் பார்க்காது இருக்க முடியாதவர்களாகவே இருக்கின்றார்கள்.

**காலையிலேயே ஆரம்பம்**

தொடர்கள் பொதுவாக காலை ஒன்பது மணிக்கெல்லாம் ஆரம்பமாகும் என்றால் அது முடியமறு அலைவரிசையில் பின்பு இன்னொன்றில் என்று இரவு பத்து மணிக்குப் பின்பும் கூட தொடர்களின் ஆக்கிரமிப்புக்கள் தொடர்ந்து கொண்டிருக்கும். கூடவே எம்மவர்களின் நேர விரயமும் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

காலையில் எழுந்து வேலைக்குச் சென்ற கணவன் மாலையில் உழைத்துக் களைத்து வீடு திரும்பினால் அவருடன் பேசுவதற்கோ ஒரு கோப்பைத் தேநீர் தயாரித்துக் கொடுத்து உபசரிக்கவோ, பெற்ற பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவோ, அவர்களுடன் அளவளாவி அவர்களை நல்வழிப்படுத்தவோ, இரவுச் சமையலை நிம்மதியாகச் சமைக்கவோ, சமைத்ததைக் குடும்ப உறவுகளுக்குப் பரிமாறவோ, கணவனுடன் பரஸ்பர அன்பைப் பேணிக் கொள்ளவோ! எதற்குமே நேரம் கிடைக்காத ஏராளமான பெண்கள் எம் சமூகத்திலிருப்பதை எவரும் மறுதலிக்க முடியாது.

பிள்ளைகள் அரை குறையாகச் சாப்பிட்டு அப்படியே உறங்கி விட எத்தனை கனவுகளுடன் வீடு வந்திருக்கும் கணவன் தனிமையில் வாடி எம்பலித்து விரக்தியுடன் உறங்கிப் போகும் பரிதாபங்கள் என அத்தனையும் தொல்லையே இவ்வாறு குடும்பத்தில் இருக்க வேண்டிய மகிழ்ச்சிகளைத் தொலைத்து, விரிசல்களை உருவாக்கி வெறுப்பையும் விரக்தியையும் தந்து கொண்டிருப்பதுதான் இந்தத் தொடர் நாடகங்கள் என்றால் அது ஒன்றும் மிகையல்ல. எமது பெண்களின் 'சீரியல்' மோகம் ஒரு 'சீரியேஸ்' வியாதியே ஆகும். இதனால் கிடைக்கும் பயன்களை விட இழப்புக்களையும் துன்பங்களையுமே அதிகமாக அறுவடை செய்ய வேண்டியுள்ளது. இந்தத் துர்ப்பாக்கிய நிலையின் தீவிரத்தை அனைவரும் உணர்ந்து கொண்டால் குடும்பத்தில் நிம்மதியாக வாழலாம். எவர் எவரோ பணம் சம்பாதிக்கும் நோக்கில் வெறும் நிழல்களைக் காட்சிகளாக்கி எமது நிஜ வாழ்க்கையின் சந்தோஷங்களைக் கெடுக்கின்றார்கள். அதையுணர்ந்து இனியாவது இந்தத் தொடர்கள் மீது வெறியுணர்வு கொள்ளாது சமூகப் பிரச்ஞையுடன் வாழ்வோம்!



# வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வள்ளுவம்

எஸ்.மல்லிகா

உலகப் பொதுமறையாக வைத்து எண்ணப்படுகின்ற திருக்குறள் அறம், பொருள், இன்பம் எனப் பாங்காகப் பிரித்து வாழ்க்கைக்கு அடிப்படையான தத்துவங்களை எந்நாட்டவர்களுக்கும் இனிதே எடுத்துரைக்கின்றது. அதிலும் சிறப்பாக, இல்லற வாழ்க்கைக்கு அவசியமான விடயங்களைச் செப்புகின்றது. ஆதலால் தான் உலகில் அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட நூல்களில் திருக்குறள் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இல்லறம் எனும் நல்லறத்தில் வளமாக நலமாக வாழும் வழிகளைக் காமத்துப் பாலில் கச்சிதமாகச் சித்திரித்திருக்கிறார் வள்ளுவர். காமத்துப் பால் ஒரு உயர்வான சிறப்பான பகுதியாகும். ஆனால், காமம் என்ற சொல்லைத் தவறாகப் புரிந்துகொண்டு அதைப் படிக்காமலேயே பலர் இருக்கின்றனர். *"கமம் நிறைந்து இயலும்"* (தொல். சொல். உரி.355) என்று தொல்காப்பியரும் மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார். மனதில் நிறைந்த இன்பமாகிய கமம் என்பது காமம் என்று மாறியிருக்கலாம். அது பின்னர் குறிப்பிட்ட ஒரு பொருளில் உடல்வழி உள்ளம் பெறும் இன்பம் என்ற பொருளில் காலப்போக்கில் வழக்காற்றில் வந்திருக்கக் கூடும். உண்மையான அன்பைத் தெய்வத்தின் மேல் காட்டும் போது, *"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி"* என்று தான் சம்பந்தர் கூறுகிறார். மணிவாசகரும் அதேபொருளில் தான் பாடுகிறார்.

*"எனைத்தொன்று இனிதே காண் காமம்தான் வீழ்வார் நினைப்ப வருவது ஒன்றுஇல்"* என்று வள்ளுவரும் அழகாகக் கூறியுள்ளார். ஓரறிவிலிருந்து ஆறறிவு வரையுள்ள அனைத்து உயிரினங்களுக்கும் உண்டாகும் இயற்கையான உணர்ச்சி தான் காமம். இது உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவானதாகும்.

*" எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது*
*தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாகும்"* (தொல். பொருள். பொருளியல் - 29) என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

பண்டைய இலக்கியங்கள் இந்தக் காம உணர்வினை மிக அழகாக எடுத்துரைத்தன. இன்பம் என்ற காமம் இல்லையெனில், உலகத் தோற்றமில்லை. காமம் என்பது ஆழ்ந்த அன்பினில் வருவது. பிற்காலத்தில் இது தவறான பொருளில் பயன்படுத்தப்பட்டது. காமசூத்திரம் என்ற நூலை எழுதிய வடமொழி நூலாசிரியரான வாத்சாயனார் பெண்ணின் விருப்பத்திற்கு எதிராக ஆண் ஒருவன் அவளைப் புணர்தல் (கூடுதல்) முதலான செய்திகளை அந்நூலில் அடுக்கியுள்ளார்.

காமத்தின் அடிப்படையில் இணையும் போது அன்பு வலுப்படுகிறது, வாழ்க்கை வளமாகிறது, வனப்பாகிறது. அந்தவகையில், கணவனும் மனைவியும் உயிரும் உடலுமாகப் பிரிக்க இயலாத பந்தத்தால் கட்டுண்டு பின்னிப் பிணைகின்றனர். இதனை 1122 ஆம் குறளில்

*"உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன*
*மடந்தையொடு எம்மிடை நட்பு"* என்று மிக அழகாக வள்ளுவர் விளக்குகிறார். இப்படிப்பட்ட பிணைப்பால் பிறக்கும் குழந்தைகளும் ஒருவருக்கொருவர் ஆழ்ந்த அன்பினைப் பெற்றவர்களாக இருப்பர். காம இன்பம் மேலுலக இன்பத்தை விட உயர்ந்தது என்று கருதியதால் தான் "காமப்பகுதி கடவுளும் வரையார்" (புறத்திணை - 28) என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

### காதலில் தெய்வீகத் தன்மை

இத்தகைய தெய்வீகத் தன்மை வாய்ந்த காதலையே (காமம்) காமத்துப்பால் என்று வள்ளுவர் கூறுகிறார். வள்ளுவர் நவின்ற மூன்றாம் பாலான காமத்துப்பால் இல்லங்களில் சிறப்புறச் சுரந்தால், அங்கு வாட்டத்திற்கே இடமில்லை. இதனை வள்ளுவர் பொது இன்பம் என்று கூறாது நிலை பேரின்பம் என்று அழைப்பதனூடாக அதன் புனிதத்துவம் புலனாகின்றது. தற்காலத்தில் இதன் பொருள்பயன்பாடு திரிபடைந்துவிட்டது என்றே கூற வேண்டும். அதாவது, காமம் என்பதனை இன்பம் என்று அழைக்கின்றனர். இன்பம் எல்லா உயிர்க்கும் பொதுவானது. ஆனால், காமம் என்பது கணவனுக்கும் மனைவிக்கும் மட்டுமே உரித்தானது. இன்பம் என்ற சொல்லாட்சி காமத்துப்பாலில் 2 தடவைகள் மட்டும் தான் கையாளப்படுகிறது. அதேநேரம், காமம் என்ற சொல் 46 இடங்களில் கையாளப்பட்டுள்ளது. அத்துடன், இன்பம் இடம்பெற்ற இடத்தில் காமமும் இணைந்தே இடம்பெற்றுள்ளமையால் (குறள் 1130, 1166) காமத்தின் பெருமையை முழுமையாக உணர முடிகிறது.




காமத்தால் ஒன்றிணைவதே இல்லறம். இல்லறத்தின் அடித்தளமே காமம் தான். ஆண்பெண் இணைப்புப் பாலமாகக் காமத்தின்பால் இருந்து, உலகச் சுழற்சிக்கு உந்துசக்தியளிக்கிறது. இது இயற்கையின் விந்தை. காமம் என்பது ஜீவசக்தி. உயிரினங்கள் அனைத்துக்கும் தேவையான இச்சாசக்தி. ஆண்டவன் அளித்த அருட்கொடை. அந்த உயிர்ச்சக்தியால் இல்லறத்தை இனிது கொண்டு நடத்துபவர்கள், வாழ்வில் சிறப்படைய எண்ணுபவர்கள் பேறுபெற்றவர்கள், எல்லோரிலும் தலைசிறந்தவர்கள். இதனைப்பின்வரும் குறட்பா அழகாக விளக்குகிறது.

*"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்*
*முயல்வாருள் எல்லாம் தலை"* (குறள்47)

இல் வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவை அன்பான, பண்பான, சிறப்பான, உயர்வான வாழ்க்கைத் துணைநலம். வள்ளுவரின் சொற்தேர்வு கூட இங்கு சிந்திக்கத் தக்கது. வெறுமனே வாழ்க்கைத் துணைவி அல்லது துணைவன் என்று கூறாது வாழ்க்கைத் துணை நலம் என்று கூறியுள்ளார். இதன் மூலம் இல்லறம் சிறக்க ஆண் பெண் இருபாலாரின் ஒத்துழைப்பும் அவசியம் என்று கூறியுள்ளார். அதனால் தான் இல்வாழ்க்கைக்கு அடுத்து வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தை அவர் முன் வைத்துள்ளார்.

இவ்வாறு காமத்தால் ஒன்றிணையும் கணவன் மனைவியின் முக்கிய கடமைகளுள் ஒன்று நன்மக்களைப் பெற்றெடுப்பதாகும் என்றும் வள்ளுவர் கூறுகிறார். இதனை 63ஆவது குறட்பாவில் அழகாக விளக்கியுள்ளார்.

*"தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்*
*தம்தம் வினையான் வரும்".*

இதனால்தான் வாழ்க்கைத் துணைநலத்தை அடுத்து மக்கட்பேறு என்ற அதிகாரத்தை வள்ளுவர் முன்வைத்துள்ளார். இல் வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு என்ற மூன்றுக்கும் ஆதாரமாக அமைவது அன்பு. அதனால், அன்புடைமை என்ற அதிகாரத்தை அடுத்து அமைத்துள்ளார்.

கணவன் மனைவி கூடும் வாழ்வில் ஐந்து வகை நெறிப்பாடுகள் திணைகளாக உள்ளன. அவற்றை புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்று தொல்காப்பியர் (அகத்திணை - 14) கூறியுள்ளார். இந்த ஐந்து திணைகளுக்கும் ஐந்து அதிகாரங்களாக 25 அதிகாரங்களை அமைத்துள்ளார் வள்ளுவர்.

விழியில் விழுந்து, இதயம் நுழைந்து, உயிரில் கலக்கும் காதல் (காமம்) உணர்வே புணர்தல் ஆகும். புணர்தல் என்னும் காம உணர்வில் கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் புகழ்ந்து, மகிழ்ந்து, அன்பைப் பரிமாறி வாழ்வது இல்லறமாகும். கலவியில் (காமத்தில்) கணவன்மனைவியின் உதடுகள் இணைகையில் இருவரின் ஆத்மாவும் சங்கமிப்பதாக ஆங்கிலக் கவிஞனான ஷெல்லி கூறுகிறான். உடல்கள் இணைகையில் புத்துயிர் பிறப்பதாக இன்னொரு கவி பாடுகிறான். உடல் ஆரோக்கியத்திற்குக் கலவி (காமம்) உகந்தது என்று தற்காலத்தில் கண்டறியப்பட்டுள்ளது.

### வாழ்க்கையில் இன்பம்

இப்படிக் கணவனும் மனைவியும் இன்புற்று வாழ்கின்ற சமயத்தில் இல்லறத்திற்குப் பொருள் தேடவோ அல்லது இதர தேவைகளுக்காகவோ கணவன் மனைவியைப் பிரிந்து செல்லும் நிலை ஏற்படும். சங்க இலக்கியம் இப்பிரிவை ஏழு வகைப்படுத்தியுள்ளது. பிரிவுத் துயர் குறித்த 100 பாடல்கள் வள்ளுவத்தில் உள்ளன. கணவன் வீட்டின் வறுமையைப் போக்கப் பொருளீட்டும் வகையில் மனைவியைப் பிரிந்து செல்கிறான். மனைவியால் அதனைத் தாங்க முடியவில்லை.

*"சிறுமை நமக்கொழியச் சேண்சென்றார் உள்ளி நறுமலர் நாணின கண்"* (குறள் - 1231) என்று சிறப்பாகச் செப்புகிறார் செந்நாப்புலவர். தலைவியைப் பிரிந்த தலைவனுக்கும் இதேநிலை தான். உண்மையான அன்பும் ஆசையுமே இப்பிரிவு நோய்க்குக் காரணம். இப்படி மனதாலும் உடலாலும் ஒத்த குடும்பமே வள்ளுவரின் இலட்சியக் குடும்பம். தொல்காப்பியர் கூறும் கணவன் வேறு, வள்ளுவர் கூறும் இலட்சியக் கணவன் வேறு. கணவனைப் பிரிந்து பின் கூடும் இன்பம் பகுத்துண்டலுக்கு நிகரான மகிழ்ச்சி என்கிறார் வள்ளுவர். படிக்கப் படிக்கத் தீராத நூலறிவு போலத் தீரத் தீரத் தீராதது காமம் என்கிறார் வள்ளுவர். இத்தகைய கணவனும் மனைவியும் விரும்புபவராகவும் விரும்பப்படுபவராகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு அமைந்த கணவன்மனைவியரே காதல் இன்பம் எனப்படும் விதையில்லாப் பழத்தினைப் பெற்றவர் ஆவர். இந்த உயரிய கருத்தினை

*"தாம் வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே*
*காமத்துக் காழ்இல் கனி"* (குறள் - 1191) என்ற குறட்பா மூலம் அழகாக விளக்கியுள்ளார். 1192,1193 குறள்களிலும் இதனை மேலும் உறுதிப்படுத்துகிறார். இப்படி வாழ்க்கைக்கு வழிகாட்டும் எத்தனையோ அற்புதமான கருத்துக்கள் வள்ளுவத்தில் கொட்டிக்கிடக்கின்றன.

ஒருவரிடம் ஒருவர் ஊடல் கொள்ளும்போது அங்கு சினம் இல்லை, வெறுப்பு இல்லை. குறும்புத்தனமான இன்பமே நிழலாடுகின்றது. அவ்வூடலைக் கணவனும் சுவைக்கிறான், விரும்புகிறான், இன்புறுகிறான் என்பதை

*"ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப*
*நீடுக மன்னோ இரா"* (குறள் - 1329) என்ற குறட்பாவில் தெளிவுறுத்துகிறார். அதேபோன்று பின்வரும் குறட்பாவில்

*"ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்*
*கூடியார் பெற்ற பயன்"* (குறள் - 1109). பிணங்குவது, பின் உணர்வது, பின் கூடி இன்புறுவது சிறந்த இணையர் பெறும் தெய்வீகப் பயன் என்று கூறுகிறார்.

மேலும், குடும்பத் தலைவனும் நாட்டின் தலைவனும் பரத்தர்களாக வாழ்வதை வள்ளுவர் விரும்பவில்லை. பெண்மைக்குரிய பரத்தை என்ற சொல்லுக்கு ஆண்பால் சொல்லைச் சங்க இலக்கியம் எடுத்தியம்பவில்லை. வள்ளுவரே "பரத்தன்" என்ற ஆண்பால் சொல்லைக் கையாண்டுள்ளார்.

*"பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுவுண்*
*பர்*
*நண்ணேன் பரத்தநின் மார்பு"* (குறள் - 1311) என்ற குறட்பா மூலம் காமத்தில் ஆணாக இருப்பினும் பெண்ணாக இருப்பினும் ஒரே அளவுகோல் கொண்டு அறிந்து ஆண் கற்பினையும் வள்ளுவர் வலியுறுத்தியமை வரவேற்கத்தக்கது.

# பொற்பதம் அருளும் சற்குரு

கே.எஸ்.சிவஞானராஜா

சூரியசந்திரர் வாழும்காலந்தோறும் பெரிய பேறளிக்கும் சற்குரு தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனை கள் ஒவ்வொன்றும்திராட்சைரசம்ததும்புவனவாய் மிளிர்கின்றன. இதன் நிமித்தம் இலங்கை இந்தியா உட்பட உலகெங்கணுமே சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் இசை ஆராதனையை ஆண்டின் முற்பகுதியில் வரும் பகுள பஞ்சம் திதியினை அண்டியதாய் உளமாரப்போற்றி வழிபடுகிறார்கள். அற்புத வரமருளும் சற்குருவின் திராட்சை ரசம் சொட்டும் கீர்த்தனைகளுள்பஞ்சாமிர்தமாய்த்திகழ்வன பஞ்சரத்தினக் கீத்தனைகளாகும். இவைஒவ்வொன்றும்அமிர்தம்தான். வெஞ்சமரையும் தடுக்கவல்ல வல்லமை கொண்டவை. பஞ்சம் பிணி பதட்டங்களை அறவே நீக்கவல்லன. பஞ்சரத்தினக்கீர்த்தனைகளைப்பாடுவோருக்கும் கேட்போருக்கும்எழுதுவோருக்கும் பிரசுரிப்போ ருக்கும் ஸ்ரீராமப் பேறுகளைக் குறைவின்றிஅள்ளித்தரும்என்பதுஅனுபவ உண்மையே. இவரது உருப்படிகளைப் பாடித்தோற்றுப்போனவர்கள் என்று எவரையுமே உதாரணமாகச் சொல்லவே முடியாது. மாறாக ச் சிரஞ்சீவியாகவும்சேத்திரமாகவும்வாழ்ந்தவர்களே அநேகம் அநேகம். காரணம் எதுவென ஆராயும்போது இருபத்தொரு வருடங்களில் தொண்ணூற்றாறு கோடி தரம் ஸ்ரீராம நாமத்தை உளமார உச்சரித்ததன் பேறாக இவரது கீர்த்தனைகள் அனைத்திலும் இராம வரமும் இராம ஒளியும் இராம வாழ்வும்இராமபக்தியும் இராம மோட்சமும் நிரம்பி வழிந்தன. மேலும் ஒவ்வொரு பஞ்சரத்தினக் கீர்த்தனைகளும்ஒவ்வொருவாழ்வைப்பக்தியோடு தரவல்லன. முதலாவது நாட்டை இராகப் பஞ்சரத்தினம். ஜகதானந்தம் விளைவிப்பவன்.

இலங்கை இந்தியா உட்பட உலகெங்கணுமே சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் இசை ஆராதனையை ஆண்டின் முற்பகுதியில் வரும் பகுள பஞ்சம் திதியினை அண்டியதாய் உளமாரப் போற்றி வழிபடுகிறார்கள்.



**நாட்டை**

இந்திரநீலமணியைப்போல்ஒளிபொருந்திய சர்ரீர சரீர நீளமுடைய சீதாபிராட்டி நாயகனான இராமபிரான் அகில உலகத்துக்கும்சதாஆனந்தம்அளிப்பவன். கற்பக தருவைப் போன்றவன் . எதிரிகளைத் தோற்கடிப்பவன். அரக்கர்களின் வெறியை அடக்குபவன். இராமாயண காதையின் சாரமானவன். இராவணனை வதம் செய்பவன். எம் நாட்டுக்கு வேண்டப்படுபவன். ஜகதானந்த காரக எனஎங்களைஅனுதினமும்மகிழ்விப்பாயாக, சீதாபிராட்டி நாயகனாக எம்மை உன்பாதங்களில்பரவும்படிஅனுக்கிரகம் செய்வாயாக. அடுத்துள்ள இரண்டாவது பஞ்சரத்தினம் கௌளை ராகம்.

**கௌளை**

துடுகு என ஆரம்பிக்கும் இந்தப்பஞ்சரத்தினம் இவ்வாறு உரைக்கின்றது. இராமா! கனத்த சிற்றின்பத்தால் இழுக்கப்பட்டு நாழிகை தோறும் மிகுந்த துடுக்குகள் புரிந்துவரும் என்னை நீதான் காப்பாற்ற வேண்டும். குதர்க்கத்தில் ஈடுபட்டேன். பிறபொருளுக்குஆசைப்பட்டேன். உனது நாமத்தை அறியாமல் நான் இறுமாப்படைந்தேன். மதம், பொறாமை, காமம், கருமித்தனம் மோகம் ஆகியவற்றுள் அகப்பட்டு மோசம் போய்விட்டேனே! ஸ்ரீஇராமா என்னை மீட்டெடுத்துப் புனிதனாக்கிப் புண்ணியனாக்கி விடுவாயாக.

**ஆரபி**

மூன்றாவது பஞ்சரத்தினம் ஆரபிராகத்தில்அமைந்தஸாதிங்சனேஎனத்தொடங்கும்உருப்படியாகும். இன்பத்துக்குஇருப்பிடமானவனே யோகியரின் சித்தமிசை விளையாடுபவனே அச்சத்தை அகற்றுபவனே. அனவரதமும் அன்பு நிறைந்த உள்ளத்தவனாகிய தியாகராஜனால் வணங்கப்பெறுபவனே சீதை ஒய்யாரத்துடன் கடைக்கண்ணால் பாக்கும் பேரழகனே உன்னைப் பாடப் பாடப், பாந்க்கப் பாக்கக் கலியுகத்தின் துன்பங்கள் கொடூரங்கள் யாவுமே பறந்தோடிவிடுகின்றன. கோபம்தணிக்கும்தாகம் உள்ளவனாய் நீயிருக்க நானோ வெட்கமுடையவனாய் திருந்திவிட ராமா நீ அருள்சொரிகிறாய். என்னைத் திருத்திவிட நீ படும் பாட்டை எண்ணி நான் தன்னந்தனியனாக வாழ வழி தந்து விட்டாயே. அதை எண்ணி நான் பூரிப்படைகின்றேன். ராமா! என்னருகில் நீ வந்து என்னோடுநீவாழவேண்டும். இனிமேல் உனக்குநான்அடிமை. தப்பானவழியில் நான் ஒருபோதும் தவறியும் செல்லமாட்டேன் ஆதலால் நீ என்னுடன் விலகாமல் சிக்கெனப்பிடிக்கும் வண்ணம் கூடவே இருந்து என்னை அரவணைப்பாயாக. நான்காவதுபஞ்சரத்தினம்வராளிஇராகத்தில் அமைந்துள்ளது.

**வராளி**

அனுதினமும் என்மனதில் அன்புபெருகி ராமாஉன்னைக்காணக்காணருசிஅதிகரிக்கிறது. சூரிய ஒளியைஉடையஆடை அணிந்தவனே, மணிக் கழுத்தை உடையவனே ஆப்தர்களின் கற்பக தருவே, கருடவாகனனே! உன்னைக்காணக்காணகனகனருசி அதிகரிக்கின்றது ராமா!

**ஸ்ரீஇராகம்**

ஐந்தாவது பஞ்சரத்தினம் எந்தரோ மகானு என்ற உருப்படியாகும். மேன்மை தங்கிய மகான்கள் ராம பக்தர்கள் அனைவருக்கும் எனது இதயத் தாமரையைச் சமர்ப்பணமாக்குகின்றேன். எளியோரைத் தாங்கும் உன்னை யாவரும் அனுபவிக்கும்படியாக உன்னை நமஸ்கரித்துத்தோத்திரம்செய்கின்றேன். இந்த உலகம் உய்ய வழிதரவேண்டும் ராமா என இரக்கின்றார். மேற்படி நாட்டை கௌளை, ஆரபி , ஸ்ரீராகம் , வராளி ஆகிய ஐந்தும் உண்மையிலே இரத்தினங்கள் தான்.

வடஇலங்கைச் சங்கீத சபை
காரைநகர் கிழவன்காடு
கலாமன்றம்
இளங்கலைஞர்மன்றம்
கம்பன் கழகம்
கொழும்பு கலா மன்றம்
யாழ். நுண்கலைப்பீடம்

என தியாகராஜ உற்சவம் நடைபெறும் அதே சமயம் ஆஞ்சநேயர்கோயில், வேங்கடாசலபதிகோயிலும் ஆராதனை நடைபெறுகிறது. இந்தியாவில்வெகுசிறப்பாக நடைபெறுகிறது. ஆயிரமாயிரம் உருப்படிகளைச் சிரு ட்டித்த தியாகராஜ சுவாமிகள் 05.04.1767 இல் பிறந்து 06.04.1847 இல் சமாதியானார். அவரைப் பணித்து ஈடில்லாப் பேரின்பம் அடையுங்கள் பஞ்சரத்தினங்களைப் பேறாக்குங்கள்.

புலவர் வள்ளுவதாசன்



# ஒழுக்கம்

வான்புகழ்வள்ளுவன்தந்த குறளமுதக்கடலில் குறைகாணும்நோக்கமல்லஇது. குறள்தந்தசிந்தனைதான் இந்த ஐயம்.

திருக்குறளிலே ஒழுக்கமுடைமை என்னும் 14 ஆம் அதிகாரத்திலே “ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின் ஏதம் பாடுபாக் கறிந்து“ இதன் பொருளை எடுத்துக்கொண்டால், மனவலிமை பெற்றோர் ஒழுக்கக் கேட்டினாலேதுன்பம்ஏற்படுதலைத்தெரிந்தவராகஒருபோதும்ஒழுக்கத்தினின்றும்தவறமாட்டார்கள்என்பதாகும். அப்படியாயின், குடிப்பெருமையினாலும்கல்வியறிவாலும்ஒருவருக்கு ஒழுக்கம்ஏற்படுகிறது என்பதுபொதுவான கருத்தாக இருக்கின்றது. அந்தக் கருத்துக்கொப்ப ஒருவன் கல்வியறிவின் பயனாக ஓம்புவானாயின், அது நிறைவேறுமா? இந்தக் கேள்வி ஏன் எழுகிறது? ஏனெனில், “ஊழ்” என்னும் அதிகாரத்திலே 373 ஆவது குறளிலே “நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந் தம் உண்மை அறிவே மிகும்” என்றும் கூறியுள்ளார். இந்த இரண்டு குறட்பாக்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, ஒருவன் ஒழுக்கமுடைமையைக் கடைப்பிடித்து வாழ்வது பயனற்றதாகிவிடுமே என்று எண்ணத் தோன்றும். ஏனெனில், ஊழ் வலிமை பெற்றதாகி விடுமே. அப்படியிருக்க, ஒருவர், “கற்கக்கசடறக்கற்பவைகற்றபின்நிற்கஅதற்குத்தக”என்றும்வள்ளுவன்கட்டளையைஏற்றுப்பயன்பெற முடியுமா? என்ற மற்றுமொரு கேள்வி எழுகிறது. இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை காண எம்மால் முடியாதிருக்கிறது. அதனால், குறள்நெறியில்நுன்னறிவுபெற்றவர்கள்பலர் இருக்கிறார்கள். அவர்களேனும்எமக்குள்ள ஐயப்பாட்டைத் தீர்த்து வைக்க முன்வருவார்களேயானால், எமக்கு மட்டுமல்ல இனிவரும் இளம் சந்ததியினருக்கும் குறள் நெறியின் பயன் அறிந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுக்கும் என்பதே எமது பேரவா.

பளையூர் பா.பாலாஜினி



# இருபதாம் நூற்றாண்டு தந்த இலக்கிய வளர்ச்சி

இருபதாம் நூற்றாண்டு இலக்கியம் என்றதுமே நம் அனைவரினதும் நினைவுக்கு வருவது நவீன அம்சங்களே. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்தே தனது பாதச்சுவடுகளை பதிக்கத் தொடங்கிய நவீனத்துவமானது இருபதாம் நூற்றாண்டில் தான் முழுமை பெற்று நிறைவடையத் தொடங்கியது. அந்த வகையில் நோக்கும் போது இருபதாம் நூற்றாண்டினுடைய இலக்கிய வளர்ச்சியானது தன்னுடன் நவீனத்துவங்களையும் இணைத்துக் கொண்டு புதுவழியில் சென்று வளர்ச்சி கண்டிருக்கின்றது.

**நவீனத்துவத்தின் தாக்கம்**

இந்த நூற்றாண்டின் இலக்கியவகைகள் அனைத்திலும்நவீனத்துவத்தின் தாக்கத்தையே இனங்காணமுடிகிறது.

குறிப்பாக சொல்லப் போனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை தமிழ் இலக்கியத்தில் சமயச்சார்பே முக்கியத்துவம் பெற்று விளங்கியது. ஆனால் ஆங்கிலேயர்களினுடைய ஆதிக்கிம் ஏற்படுத்திய புதிய பொருளாதார முறைமையினாலும், பழைய நிலப்புரத்துவச் சமுதாய அமைப்பு நிலைகுலையத் தொடங்கியமையினாலும், ஆங்கிலக் கல்வியின் விருத்தியினாலும், கல்வியானது ஜனநாயக மயப்படத் தொடங்கியமை





யாலும், நவீனத்துவத்தின் அம்சங்கள் சகல துறைகளிலும் அகலக் கால் பரப்பி வந்தமையினாலும் சமூகம் பற்றிய சிந்தனை வளரத் தொடங்கியது. அதனால் இருபதாம் நூற்றாண்டு இலக்கியத்தில் பெரும்பாலும் சமூகச் சார்பு வாய்ந்த பொது விடயங்களே படிப்படியாக முக்கி யத்துவம் பெறத் தொடங்கின. இலங்கைத் தமிழ் இலக்கியத்திலும் இதே நிலையையே காணக்கூடியதாக இருக்கின்றது.

இருபதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் காணக்கூடிய ஒரு சிறப்பானதும். பாராட்டத்தக்கதுமான ஓர் விடயம் தேசியம் பற்றிய விழிப்புணர்வாகும். ஒவ்வொருவரும் தாம் வாழுகின்ற தேசம், நாடு என்பன தொடர்பாக கொண்டிருக்கின்ற பற்று மற்றும் அந்தத் தேசம் தொடர்பான விழிப்புணர்வே தேசப்பற்றாகும். கதிரைமலைப்பள்ளு எனும் நூலில் மாகவலி கங்கை நாடெங்கள் நாடே என்றும் ஒலிக்கத் தொடங்கிய இலங்கைத் தேசியம் தொடர்பான குரல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டினுடைய நடுப்பகுதியில் ஆறுமுகநாவலரின் நல்லறிவுச்சுடர் கொளுத்தல் வாயிலாக உரத்து ஒலிக்கத் தொடங்கியது. ஆனால் அதனுடைய தர்க்கரீதியான வளர்ச்சியை இருபதாம் நூற்றாண்டினுடைய இலக்கியத்திலேயே காணக்கூடியதாக உள்ளது. தேசிய ரீதியான இலக்கியச் சிந்தனை இலங்கைத் தமிழ் இலக்கியத்தை தனியாக இனங்காட்டத் தொடங்கியது.

இவ்வாறாக தேசிய ரீதியான சிந்தனை வளர்ச்சியுடன் இணைந்தவாறே மண்வாசனை கமழ்கின்ற இலக்கியங்களும் படைக்கப்படத் தொடங்கின இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலேயே இதற்கான முத்தாய்ப்பைக் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தாலும்கூட 1940 களில் இருந்து பிரக்ஞைபூர்வமான தேசியம். மண்வாசனை முதலிய கருத்துக்கள் வளர்த்தெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. ஐம்பதுகளில் இவை முற்போக்கு இலக்கிய கோட்பாட்டுடன் இணைந்து கொள்வதைக் காணலாம்.

1948 இல் சுதந்திரம் பெற்ற இலங்கையில், 1950 களிலிருந்து விழிப்புணர்வு ஏற்பட்டு வருவதை இலங்கைத் தமிழ் இலக்கியத்திலே தரிசிக்க முடிகிறது. சமூக, பொருளாதார விடுதலை உணர்வுகள் மேலோங்கத் தொடங்குவதை அந்தக்காலகட்டத்தில் அவதானிக்கலாம். அதன் விளைவாக சமூகத்தின் அடிமட்ட நிலையில் இருந்து புதிய எழுத்தாளர் குழாம் நவீன இலக்கிய முயற்சிகளில் ஆர்வத்தோடு ஈடுபடத் தொடங்குவதைக் காணலாம். அதேவேளை, ஐம்பதுகளில் இனமுரண்பாடுகள் கூர்மையடையத் தொடங்கி யதனால் குறிப்பாக கவிதைத் துறையில் அந்தக்காலகட்டத்தில் இனவுணர்வு ஓரளவுக்கு அதிகரித்துக் காணப்பட்டது.

**முக்கியத்துவம் பெற்ற கால கட்டம்**

இருபதாம் நூற்றாண்டினுடைய இலங்கைத் தமிழ் வரலாற்றில், 1960 கள் முக்கியத்துவம் பெற்ற ஒரு காலகட்டமாகும். அதேவேளை புனைகதைகளின் இலக்கியத்தரம் பற்றிப் பண்டிதப் பரம்பரையினருக்கும், முற்போக்கு இலக்கிய வாதிகளுக்குமிடையே சர்ச்சைகளும் ஏற்பட்டன.

இத்தகைய சர்ச்சைகள், புனைகதைகள் தொடர்பாக மக்கள் மத்தியில் புதிய விழிப்புணர்வு ஏற்பட இவை உதவியாக அமைந்தன. மறுபுறத்தில் ஐம்பதுகளில் மேலை நாடுகளின் வசப்பட்டிருந்த இலங்கைப் பல்கலைக்கழகங்கள் அறுபதுகளில் இருந்து சுதேசிய விழிப்புணர்வு கொள்ளத் தொடங்கின. அதன் பயனாக பல்கலைக்கழகங்களில் இருந்து தேசிய உணர்வு மிக்க புதியதொரு பரம்பரை ஒன்று வெளியேறத் தொடங்கியது. இன்னொரு புறத்தில், அந்தக் காலகட்டத்தில் இருந்து மலையகமும் இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் முக்கிய களமாக அமையத் தொடங்கியது. அதற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே மலையகத்தில் இலக்கியப் பங்களிப்புக்கள் தொடங்கிவிட்டன என்றா லும் பிரக்ஞைபூர்வமான தேசிய உணர்வு மிக்க இலக்கியப் படைப்புக்கள் இந்தக் காலத்திலேயே ஏற்படத் தொடங்கின. ஆர்வமும் ஆற்றலும் மிக்க எழுத்தாளர் குழாமானது இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தன்னையும் இணைத்துக் கொண்டது.

1970 களில் யாழ்ப்பாணம் முதல் திக்குவல்லை வரை இலங்கையின் இலக்கிய களங்கள் விரிவடையத் தொடங்கின. யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த தமிழ் மன்னர்களினுடைய காலத்தில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோண மலை, மட்டக்களப்பு ஆகியவையே இலங்கையின் தமிழ் இலக்கியக் களங்களாக இருந்த நிலை மாறி, அதனையடுத்த காலகட்டங்களில் அவை மேலும் பெருகத் தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புதிய புதிய பிரதேசங்கள் இலக்கிய வளர்ச்சியில் இணைந்து கொண்டன. அதே நேரத்தில் இலக்கியத்தில் அழகியல் தொடர்பாக இடம்பெற்ற சர்ச்சைகள், இலங்கை யின் இலக்கிய வளர்ச்சியில் புதிய உந்து சக்திகளாக அமைந்தன.

இருபதாம் நூற்றாண்டின் இறுதி இரு தசாப்தங்களிலும் இலங்கைத் தமிழ் இலக்கியம் ஒரு புதிய பரிணாமத்தை பெறத் தொடங்குகின்றது. அடக்குமுறைகளுக்கு எதிரான விடுதலை உணர்வும், பெண்ணிலைவாதமும் முக்கியம் பெற்றன. இந்தக் காலகட்டத்தில் இலங்கைத் தமிழ் இலக்கியம் புதிய தேடல் முயற்சிகளையும் ஆரம்பித்துள்ளது. அதேவேளை புகலிட இலக்கியம் என்ற புதிய கிளையொன்றும் தமிழ் இலக்கியத்திலே இடம் பெறுகின்றது.

இருபதாம்நூற்றாண்டில் குறிப்பிடத்தக்க பிறிதோர் அம்சம் என்னவெனில் இலங்கைத் தமிழ் இலக்கியம் ஆனது தமிழ் நாட்டு இலக்கியப் போக்கில் இருந்து மெதுமெதுவாக தன்னை விடுவித்துக் கொண்டு, தனியான பாதையில் நடைபோடத் தொடங்கியமையாகும். இதற்கு இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணங்கள் அடிப்படையாக அமைந்தன.

இலங்கைத் தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை இருபதாம் நூற்றாண்டானது குறிப்பிடத்தக்க ஒரு காலகட்டமாக விளங்குகின்றது. அதேவேளை இலங்கையின் இலக்கியத் திறனாய்வுத் துறை விதந்துரைக்கக்கூடிய வளர்ச்சி நிலையைப் பெற்றுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுக நாவலரும், சி.வை.தமோதரம்பிள்ளையும் வழிகாட்டிகளாக விளங்கியதைப் போல் இருபதாம் நூற்றாண்டில் சுவாமி விபுலானந்தரும், தனிநாயகம் அடிகளாரும், பேராசிரியர் க.கைலாசபதியும், கா.சிவத்தம்பியும் முன்னோடிகளாக விளங்குகின்றனர்.

பொன்னாலையூர் ச.சகலகலாவல்லி

# நான்கு கோடிப் பாடலை நாமும் அறிவோம்

அன்று, இன்று, என்றும் எனப் போற்றப்படும் தமிழ்ப் புலவர்களில் ஔவையார் மிச் சிறப்புப் பெற்றவர். சிறுவர் முதல் பெரியோர்வரை எல்லோர் நாவிலும் அவரின் நன்னெறி வாக்கியங்கள், பாடல்கள் ஒலித்த வண்ணமே இருக்கும். ஔவையார் வாழ்ந்த காலத்திலும், அதற்கு முன்னரும் பின்னரும் அரசாண்ட தமிழ் அரசர்கள் தமிழை வளர்ப்பதில் பெரும் பங்காற்றினர். புலவர்களைப் போஷிப்பதிலும் அவர்களின் புலமைத் திறனை ஊக்குவிப்பதிலும் தமிழ்ப் புலமையை ரசித்துப் பரிசளிப்பதிலும் மிக ஆர்வமுடன் விளங்கினர். ஒவ்வொரு அரசனின் சபையிலும் புலவர்கள் வீற்றிருந்து தங்கள் தமிழ்ப் புலமையைப் பிரபல்யப்படுத்தினர் அச்செயற்பாடு அந்தக்கால வழக்கமாகவே இருந்து வந்தது. அரசன் புலவர்களின் புலமையை ஊக்குவிக்க சவால்களையும், போட்டிகளையும் முன்வைத்துப் பரிசுகளும் வழங்கிக் கௌரவிப்பான்.

அவ்வாறே ஒரு முறை அரசனின் சபையிலே புலவர்கள் வீற்றிருக்கிறார்கள். அரசன் அவையோரை, புலவர்களை நோக்கி இன்று நான் உங்களுக்கு ஒரு சவால் விடுக்கப் போகிறேன். அந்தச் சவாலை ஏற்று யார் வெற்றி கொள்கிறார்களோ அவர்களுக்கு விலையுயர்ந்த பரிசு அளிக்கப்படும் என்று கூறினான். அவையோடு புலவர்களும் அரசே சவால் யாது எனக்கூறுங்கள் என்று ஒரே குரலில் ஆர்வமுடன் வினவினர். அரசன் கூறுகிறான், யார் நான்கு நாள்களில் நான்கு கோடி பாடல்கள் ஆக்கிச் சபையில் முன்வைக்கிறார்களோ அவர்களுக்குச் சிறந்த பரிசு அளிக்கப்படும் என்றான். எல்லோர் முகத்திலும் அதிர்ச்சி, பரபரப்பு, ஆச்சரியம். எப்படி நான்கு நாள்களில் நான்கு கோடி பாடல்களை ஆக்க முடியும். இருந்தாலும் தங்கள் இயலாமையை வெளிக்காட்ட முடியாது. ஏன் எல்லோரும் கலை மகள் கடாட்சம் பெற்ற கவிஞர்கள் தானே. சரி அரசே என்று கூறி மனதைத் திடப்படுத்திக் கொண்டு வார்த்தை ஒப்புடன் கலைந்து சென்றனர்.

நான்கு நாள்கள் கெடு வந்துவிட்டது. அனைவரும் அரசசபையில் கூடினர். அறிஞர்கள், புலவர்கள், புரவலர்கள் நிறைந்திருக்கின்றனர். அரசர் சபைக்கு வருகிறார். எல்லோரும் எழுந்து பணிந்து அமர்கின்றனர். அரசன்அவையை நோக்கி விரை கின்றான். புலவர்களே சவாலை நிறைவு செய்வோமா? ஒவ்வொரு புலவர்க ளின் முக பாவமும் ஒவ்வொரு விதமான நிலையில் காட்சி கொடுத்தது. ஔவைப்பாட்டியார் மட்டும் அமைதியாக, அடக்கமான புன்முறுவலுடன் வீற்றிருக்கிறார்.



அரசர் ஒவ்வெரு புலவர்களையும் அழைத்து அவர்கள் பாடிய பாடல்களைப் பற்றி வினவுகிறார். அரசே, பாடல்களை ஆக்கிவிட்டோம். ஆனால் ஒரே நாளில் ஒப்புவிப்பது கடினமே எனக்கூறினர். சில புலவர்கள். வேறு சிலர் இன்னும் ஒரு நாள் அவகாசம் தர வேண்டும் என்றனர். அரசன் ஔவையாரைப் பார்த்து அம்மையே உங்கள் பாடல் எந்தளவில் என்றார். அரசே பாடல்களை நிறைவு செய்துவிட்டேன். இதோ சபையில் செப்புகிறேன் என்று பாடத் தொடங்கினார். ஔவையார் இதோ அவர் பாடிய நான்கு கோடி பாடல்கள்

*மதியாதார் முற்றம் மதித்தொரு காற்சென்று*
*மதியாமை கோடி பெறும் (1 கோடி)*

*உண்ணீர் உண்ணீரென்று உபசரியார் தம் மனையில்*
*உண்ணாமை கோடிபெறும் (2கோடி)*

*கோடான கோடி கொடுப்பினுந் தன்னுடை நாக்*
*கோடா(ணா)மை கோடி பெறும் (4 கோடி)*

அரசன் ஓடிச் சென்று ஔவையாரை ஆரத்தழுவினான். அதியுயர் பரிசளித்தான். என்னே புலமை என்னே தமிழின் பெருமை.

# கனடா ராஜாஜி ராஜகோபாலனின்
# ‘ஒரு வழிப்போக்கனின் வாக்குமூலம்’

யோ.புரட்சி

‘பாத்ரூம் பாடகர்’ கவிதையில் இப்படி எழுதுகின்றார் ராஜாஜி.

பாத்ரூமில் மட்டுமே
பாடுவது என் வழக்கம்.
காரணம் ஒன்று
உள்ளே நுழைந்து
எவரும் அடிக்கமாட்டார்.
காரணம் இரண்டு
கதவுக்குத் தாழ்பாள்
கழன்று பல காலமாச்சு.

நகைச்சுவையும் பொருள்ச் சுவையுமாய் நடையிடுகின்றது கவி. ஒருவரின் எழுத்து அவரின் வயதைப் புலப்படுத்தும் என்பது எல்லோருக்கும் தெரியாது. அதேநேரம் எல்லோருக்கும் அது பொருந்தாது. கனடா வாழ் பன்முகப் படைப்பாளி ராஜாஜி ராஜகோபாலன் அவர்கள் எழுதிய ‘ஒரு வழிப் போக்கனின் வாக்குமூலம்’ கவிதை நூல் சொற்களின் ஒரு கவி விதை நூல். விதைக்கப்பட்ட ஒவ்வொரு விதைகளும் விருட்சமாகித் தளிர் மொழிவாய் விரிந்திருக்கின்றன.
பன்முகப் பார்வை. பாவிலே தரமான சொற்சேர்வை. பேச்சு வழக்காகவும், உரை வீச்சு வழக்காகவும், ஆங்காங்கே ஆழ்மன விளக்கமாகவும் என ஒடுகிறது அவரது கவிநதி.
ஊரைத் தேரிலே ஏற்றி பல கவிதைகள். ஊருக்கே உரித்தான நினைவுகளையும், பதிவுகளையும் பதியம் போட்டிருக்கிறார் ராஜாஜி.

**பயன்பாட்டில் இல்லாத தட்டிவான்**

இன்று பயன்பாட்டில் இல்லாத தட்டிவான் தொடக்கம், பயன்பாட்டிலிருந்து அழியாத பருத்தித்துறை வடை வரையும் கவிக்கு கருப்பொருளாகியிருக்கின்றன. இவ்வளவு ஏன்? தனது ஊரின் தோசைக்கு கூட ‘தோசைக் கடை’ கவிதையில் ஓரிடம் கொடுத்திருக்கிறார் கவிஞர்.

நோபல் பரிசுப் பட்டியலில்
பத்து வருசமாய் இருக்கிறதாம்
பருத்தித்துறைத் தோசை
என்று தொடங்கி, இப்படி தொடர்கிறார் ராஜாஜி.

தோசைக்காரி பெரும்பாலும்
வாய்கொழுப்புக்காரி.
கொழுவுப்பட்டீர்களோ
கடதாசிக்குப் பதிலாகக்
கந்தபுராணத்துக்
கடைசி ஒற்றையில்தான்
தோசை சுற்றித் தருவாள்.

அழகும், ஆழமுமாய் அசத்துகிறார் தனக்குரிய தனியான மொழிநடையில் கவிஞர். ‘ஒரு வழிப்போக்கனின் வாக்குமூலம்’ கவிதை நூலை 34 கவிதைகள் நிறைக்கின்றன. இரசனைக் குறிப்பை ஈழத்தின் இலக்கிய விமர்சகர் கே.எஸ்.சிவகுமாரன் வரைந்திருக்கின்றார். தன்னுரையை வரைந்திருக்கும் நூலாசிரியர் இப்படிச் சொல்கின்றார். ‘தேசங்களையும் தேசிய இனங்களையும் தரிசித்துக் கற்றவையிலும் பார்க்க என் வீட்டுத் திண்ணையிலும் நான் வாழ்ந்த கிராமத்தின் தெருப்புழுதியிலும் கற்றவைகளே இன்று என் கவிதைகளுக்கு முதுகெலும்பாயின’
கவிஞர் உரைத்தமைக்கொப்ப நோக்கின், கிராமமும் அதன் வாழ்வியலும் அதிகம் ஆதிக்கம் செய்யும் கோட்டைதான் இக்கவிக்கோட்டை.

**ஆளுமையான சொற்கள்**

ஆளுமையான் சொற்கள் ஆட்சி புரியினும், வழமையாகக் கையாளும் வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்த்திருக்கலாமே? ‘சுடலை ஞானம்’ கவிதை தேவையான கருத்தெனிலும் அது புதிதான ஒரு பொருளல்லவே.

கெட்ட செயலெதுவும்
செய்யாதிருந்தாலே போதும்
நல்லவனென்ற பெயர்
நாளடைவில் வந்துவிடும்.

உரைக்கப்பட்டது உண்மை எனினும் இவ்விதமானவை ஏலவே பலருரைத்தவையாகையால் இவ்விதத் தொகுப்புக்களில் இவை போன்ற பொதுக்கருத்து சார் விடயங்கள் தவிர்த்தல் நன்றாம். ஆயினும் பொதுக்கருத்தை புதிய உத்தியில் சொல்லப்புகின் அது ஏற்றமாம்.
பின் அட்டைக் குறிப்பில் கவிஞர் குறித்து அறியக்கிடைக்கின்றது. இந்தக் குறிப்பை மேமன்கவி வரைந்திருக்கிறார். ‘ராஜாஜி ராஜகோபாலன் ஈழத்திலிந்து 1980களில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர். இவர் ஒரு சட்டத்தரணி ஆவார். 1970 முதலாக எழுதி வருகின்றார். மல்லிகை, அலை, வீரகேசரி, தினகரன், போன்ற அச்சுசார் ஊடகங்களில் இவரது படைப்புக்கள் வெளியாகி இருக்கின்றன. ‘குதிரை இல்லாத ராஜகுமாரன்’ எனும் சிறுகதை நூலையும் இவர் வெளியிட்டிருகின்றார். ‘ஒரு வழிப் போக்கனின் வாக்குமூலம்’ எனும் இந்தக் கவி நூலை இந்தியாவின் ‘வளரி எழுத்துக் கூடம்’ வெளியிட்டிருக்கின்றது.




அமிழ்தினும் இனிய மகள் அருள்மொழியின் நினைவாக’ என நூல் அர்ப்பணமாக்கப்பட்டிருக்கின்றது. அறிமுகப் பகிர்வை அருணா சுந்தரராசன் எழுதியிருக்கின்றார்.
‘இறைவனைக் கண்டால்’ எனும் கவிதையில், கடவுளைக் காண நேரின் எதையெல்லாம் கேட்பேன் என ஒரு பட்டியல் இட்டிருக்கின்றார்.
நூலில் சில சுருக்கக் கவிகள். சில பெருக்கக் கவிகள். அநேகமாக எளிமைச் சொல்லாடல்கள் புரிதற்கு ஏற்றவை. சில கொஞ்சம் யோசித்துப் புரியவேண்டியவை. அதற்காக எழுதியிருப்பாரோ? இதற்காக எழுதியிருப்பாரோ? என எண்ணத்தோன்று பவை.
‘ஒரு கார் வாங்கப்போனேன்’ கவிதையில் ஒரு நாடகமே நகர்கிறது. சிரிப்பும், சிந்தனையும் எனவிருக்கும் அந்தக் கவி இப்படி முடிகின்றது.

செல்போன்காரி
சதி செய்யாது விட்டிருந்தால்
லெக்ஸஸ் கன்னி என்
காலடியில் விழுந்திருப்பாள்.
ஆனால் என்
வீசாக் கடன் ஒருபக்கம்
விஷம்போல் ஏறியிருக்கும்.
கார்க் கடன் மறுபக்கம்
கழுத்தில் விழுந்த சுருக்குத்தான்.
பெண்சாதிமாராலும் சிலவேளை
பிரயோசனமுண்டு பாருங்கோ!

**கவிச்சாலை**

கதையும் கருத்தும் சமமாக நடையிடும் சாலைதான் இந்தக் கவிச்சாலை. ‘ஓ..தமிழகமே’ கவியில் ஈழத்தமிழனின் விண்ணப்பம் விரைகிறது. ‘மரங்களை நேசிப்போம்’ கவிதை தாவர தர்மத்தை ஊட்டுகிறது.
சில கவிதைகள் முடிவு வரிகளில் மூச்சடைக்க வைக்குமாற்போல அழகான அதிர்ச்சியாய் முடிகின்றன. ‘என் தங்கை’ கவிதை இதற்கு உதாராணம். ‘ஒரு வழிப் போக்கனின் வாக்குமூலம்’ கவிதை புத்தரை நோக்கி போடப்படும் கருத்துக்களின் கலவையாகிறது. புத்தரை மையமாக வைத்து நடக்கும் பலரின் நாடகங்களைப் பக்குவமாகச் சொல்லும் பாவிது. ஆழமான கருத்துக்கள் அசைகின்றன.
வன்னியில் ஆதரவற்ற பெண்களை வழி தவறி நடக்கப் பண்ணுவோரிடமிருந்து தம்மைப் பாதுகாக்கப் பெண்களே துணிந்தெழ வேண்டிய முக்கியத்துவம் ‘ஆயுதம் செய்வோம்’ கவிதையில் ஊடாடுகின்றது.
இப்படி இன்னுமின்னும் ஏராளம். ஒரு கருப்பொருளில் அல்லாமல் பல கருப்பொருளில் அமையப்பெற்றதும், சீராக வரிசைக்கிரமம் ஆக்கப்பட்ட தொகுப்பென்பதாலும் சலிப்பின்றிப் படிக்கமுடிகின்றது இந்த ஒரு வழிப்போக்கனின் வாக்குமூலத்தை.





## உரையாடல்

இலக்கியக்குவியத்தின் ஏற்பாட்டில் திசேராவின் ‘யோவான் 14:2”, வி.கௌரிபாலனின் ‘காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல்” மற்றும் சாத்திரியின் “அவலங்கள்” ஆகிய மூன்று கதைப்புத்தகங்களைப் பற்றிய உரையாடல் நிகழ்வுகள் கடந்த 30 ஆம் திகதி அன்று பி.ப .3 மணிக்கு யாழ்ப் பாணத்தில் இடம்பெற்றது.

# இந்தியத் தூதரக அதிகாரிகள்

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

***கூட்டரசாலும் பயனில்லை***

நாங்கள் கடுமையாக முயன்று இந்த விடயம் சட்டமா அதிபர் திணைக்களம் வரைக்கும் வந்துள்ளது. பலரும் வாக்குமூலம் கொடுத்து விட்டார்கள். ஆனால் இதுவரையும் நடவடிக்கை இல்லை. 2006ஆம் நடத்தப்பட்ட படுகொலை குறித்தும் பொலி ஸாருக்கு சாட்சிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனாலும் இன்னும் நடவடிக்கை எதுவும் இல்லை.

இன்றைய கூட்டு அரசு பதவியேற்ற பின்னர் அவர்களாலும் இதுவரையும் எதனையும் செய்யமுடியவில்லை. மாறாக நேற்று நடந்த பேரணியில் மகிந்த ஆட்சிக்கு வலுச் சேர்க்கும் மாதிரி மக்கள் அங்கு குவிந்துள்ளார்கள்.

உதயன் படுகொலைகள் தொடர்பாக இந்த வருடம் விசாரணைக்கு எடுப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. அடுத்த மே மாதத்துக்கு இடையில் ஏதாவது மாற்றங்கள் தென்படுகின்றதா என்று பார்ப்போம். தற்போது நேரடியாக தாக்குதல்கள் இல்லாவிட்டாலும் மறைமுகமான அச்சுறுத்தல்கள் இருக்கின்றன.

***இந்தியத் தலையீடு***

இப்போது மறைமுகமாக அண்டை நாடு கொஞ்சம் தலையிடுகின்றது. முன்னரும் தலையிட்டவர்கள்தான் அவர்கள். தற்போது எமது பத்திரிகையில் இந்தியாவைப் பற்றி எதிர்மறையாக எதுவும் வரக்கூடாது என்று சொல்கின்றார்கள். இந்தியக் கலைஞர்களை இங்கு அழைத்து வருவது குறித்து எமது பத்திரிகையில் தனது கருத்தைத் தெரிவித்ததற்காக ஒருவருக்கு இந்தியா செல்லும் விசா வழங்க மறுத்திருக்கிறார்கள். உள்ளூர்க் கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றுதான் அவர் கூறியிருந்தார். அது இவர்களுக்குச் சுடுகிறது.

உதயன் பத்திரிகையில் கட்டுரைகள் எழுதினார் என்பதற்காக ஒருவரின் கலாநிதிப் படிப்பைப் பாழ்படுத்தியிருக்கிறார்கள். அவர் தனது ஆய்வுக் கட்டுரையைப் பல்கலைக்கழகத்தில் முன்வைக்கவேண்டிய தருணத்தில் அவருக்கு விசா வழங்காமல் அவரது எதிர்காலத்தையே நாசமாக்கியிருக்கிறார்கள்.

இங்கே இருக்கும் இந்தியத் துணை தூதரகம் மிகமோசமாக இயங்கிக்கொண்டிருக்கின்றது. அவர்களுடைய செய்கைகளைப் பொறுக்கமுடியாதுள்ளது. வந்தார்கள், இருந்தார்கள், போனார் கள், அபிவிருத்தியைச் செய்தார்கள் என்று இல்லாமல் எங்களை வழி நடத்துவதற்கும் மறைமுகமாக ஆக்கிரமிப்பதற்கும் முயன்றுகொண்டிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகததுக்குப் பொறுப்பானவர் அந்த மாதிரியான செயற்பாடுகளில் இறங்கியுள்ளார். மிகக் கேவலமான முறையில் நடந்துகொள்கிறார்.

ஒரு தடவை அவர் என்னிடமே நேரடியாகப் பத்திரிகையில் அப்படி எழுதுகிறார்கள், இப்படி எழுதுகிறார்கள் என்று சொன்னார். நடப்பதை மக்களுக்கு சொல்லவேண்டும் அதுதானே பத்திரிகையின் பணி.

இந்திய இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது யாழ். போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்து சுட்டார்கள். அதில் மருத்துவர்கள், தாதியர் எனப் பலர் உயிரிழந்தனர். அவர்களின் நினைவு தினம் ஒவ்வொரு வருடமும் கடைப்பிடிக்கப்படுகிறது. அதைப் பத்திரிகையில் செய்தியாக வெளியிடுகிறார்கள். இங் குள்ள இந்தியத் தூதர் கேட்கிறார், ஏன் அதனை மீண்டும் மீண்டும் போடுகின்றீர்கள் என்று.

***வடக்கு கிழக்கு இந்தியாவுக்கா?***

தெற்கில் சீனாவின் கை ஓங்குவதால் வடக்கு கிழக்கை தங்கள் பிடியில் வைத்திருக்கவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்களோ தெரியாது. இது பற்றி கூட்டமைப்பின் தலைமை நிச்சயம் கவனத்தில் எடுத்து நடந்துகொள்ள வேண்டும்.

நடராஜன் இந்திய துணைத்தூதுவர் அல்ல. அவரது பதவியின் பெயர் அது அல்ல. அவரது பதவியின்பெயர் கொன்சூலர் ஜெனரல். அவர் ஒரு அதிகாரி. அவ்வளவே! அவருக்கு மேலே தூதரகத்தில் அதிகாரம் உள்ள பதவிகள் எத்தனையோ உள்ளன.

பத்திரிகை உண்மையை உண்மையாகச் சொல்லத்தான்வேண்டும். அதை யாரும் கட்டுப்படுத்த முடியாது. எந்தச் செய்தியைப் போட வேண்டும் எதைப் போடக்கூடாது என்று சொல்லக்கூடாது. வெளியிட்ட செய்தியில் உங்களுக்கு உடன்பாடு இல்லாவிட்டால் அல்லது அது தொடர்பில் நீங்கள் ஏதாவது தீர்வைப் பெறவேண்டியிருக்கிறது என்றால் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிடம் முறையிடுங்கள். பத்திரிகையில் உள்ள பிழையை சுட்டிக் காட்ட எல்லோருக்கும் உரிமை உள்ளது. அதற்காக அதன் சுதந்திரகத்தைக் கட்டுப்படுத்த, அதனை மிரட்ட முனையக்கூடாது. எங்களிடம் பிழை இருந்தால் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்வோம். அதைச் சுட்டிக்காட் டுங்கள்.

இதற்காக நாங்கள் இந்தியாவுக்கு எதிரானவர்கள், இந்தியாவை வெறுப் பவர்கள் என்று அர்த்தம் அல்ல. இங்குள்ள சில அதிகாரிகளின் செயற்பாடுகளால் அவ்வாறான ஒரு நிலை வந்துவிடுமோ என்றுதான் அஞ்சுகின்றோம். தீர்வு விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு அவசியம் என்பதில் எமக்குக் கருத்து வேற்றுமை இல்லை. இந்தியா ஈழத் தமிழர்களின் பக்கம் இருக்கவேண்டும் என்பதைத்தான் நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் புதுடில்லியால் இங்கு நியமிக்கப்படும் அதிகாரிகளோ இந்தியாவையும் ஈழத் தமிழர்களையும் பகைத்துக்கொள்ளச் செய்துவிடுவார்கள் போன்று உள்ளது - என்றார்.

(உ-10)


## வேலையாள்கள் தேவை

வவுனியாவில் உள்ள விவசாய தோட்டமொன்றில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாள்கள் உடன் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**071 867 6424**

## தவறிவிட்டது

கந்தசாமி இராசசிங்கம் ஆகிய எனது காப்புறுதி வரி அனுமதிப்பத்திரம். மோட்டார் வாகன புத்தகம் ஆகியன 17.04.2017 திங்கள்கிழமை விசுவமடுவுக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. விவரம் அறிந்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொண்டு உதவுங்கள்.

**077 556 8772, 077 554 2795**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த, பூர நட்சத்திரம், 77 பாவமும், 8இல் செவ்வாயுமுடைய சுயதொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**077 254 3119**

## சிவன் ஜோதிடம்



இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள

**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**

**076 585 9977 , 075 787 3073**

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு. காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள். பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

**இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,**
**(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)**
**யாழ்ப்பாணம்.**
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

## மணமகள் தேவை

* 1978 இல் பிறந்த, யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நன்கு படித்த லண்டன் வதிவிடவுரிமை உள்ள குறுகிய காலத்தில் விவாகரத்தானவருக்கு A/L மேல் படித்த பெண்தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. இராசி மிதுனம், திருவாதிரை முதலாம் பாதம், மொத்த கிரகபாவம் 92
* 1981 இல் பிறந்த யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நன்கு படித்து அரச ஆசிரியராக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. அரச உத்தியோகத்தவராக இருத்தல் வேண்டும்.

(சி.எஸ். 3664) (13)

**தொடர்பு: 075 038 4721**

## தேவை

புங்குடுதீவு பிரதான வீதியில் காணி தேவை

**077 729 5428**

## விற்பனைக்கு

Ruling,Cutter இயந்திரம், தொழிற்சாலைப் பொருள்கள் மற்றும் காகிதம் முதலிய எழுது பொருள்கள்.

**தொடர்பு: 011 268 6585**

## சண்டிலிப்பாயில் வேலைவாய்ப்பு

சண்டிலிப்பாய் சந்தியில் இயங்கிவரும் Business Bank.lk வியாபார நிலையத்துக்கு முகாமைத்துவ உதவியாளர் தேவை. கணினி அறிவும், ஆர்வமும், சமூக சேவை நோக்கமும் கொண்டவர்கள் சுயவிவரக் கோவைகளை businessbank.lk@gmail.com என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**077 736 0696**

## சாரதி தேவை (Personnel Driver)

- தனிநபர் ஒருவரின் வாகனத்திற்கு மன்னார் பிரதேசத்தில் வசிக்கும் சாரதி தேவை.
- அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிந்தவர்கள் விரும்பத்தக்கது வயது எல்லை: 40 -50
- உங்களது சுயவிவரங்களை கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துக்கு SMS செய்யவும் -

075 841 6353

(சி.எஸ். 3667) (13)

Rotary

## யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் HOPE செயற்றிட்ட பயனாளிகளுக்கான அறிவித்தல்

இந்தியாவின் சேலம் றோட்டறி மாவட்ட றோட்டறிக் கழகங்களின் HOPE - செயற்கைக் கால்கள் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் அவயவங்களைப் பெற்றுக் கொண்ட பயனாளிகள் தங்களது அவயவங்களில் ஏதாவது திருத்தப்பணிகள் தேவைப்படின் கீழுள்ள தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

செயற்றிட்டத்தில் பதிவு செய்து அவயவங்களை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் தொடர்பு கொள்ளுமிடத்து இயலுமானவரை விரைவாகப் பெற்றுக் கொடுப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அவயவங்கள் தேவைப்படும். பதிவு செய்யத் தவறியவர்கள் தொடர்பு கொண்டு தங்கள் விவரங்களைப் பதிவு செய்யலாம்.

தொடர்புகளுக்கு : **021 492 7780**

## அபிவிருத்தி லொத்தர் சபை (நிதி அமைச்சு) உபயோகித்த மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்வதற்கு கேள்விகோரல்

அபிவிருத்தி லொத்தர் சபையின் பின்வரும் உபயோகிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்வதற்கான விலை கோரப்பட்டுள்ளது.

**வாகன வகை**

72 CC சிங்கர் சபாரி 4 எஸ் ரக மோட்டார் சைக்கிள்கள் 18
(பதிவு செய்யப்பட்ட வருடம் 2012)

**பதிவு இலக்கம்**

◆XP - XXXX ◆XP -XXXX ◆XP - XXXX ◆XP - XXXX ◆XP - XXXX
◆XP - XXXX ◆XP -XXXX ◆XP - XXXX ◆XP - XXXX ◆XP - XXXX
◆XP - XXXX ◆XP- XXXX ◆XP - XXXX ◆XP - XXXX ◆XP - XXXX
◆XP - XXXX ◆XP- XXXX ◆XP - XXXX

02. வாகனங்களைப் பரீட்சிப்பதற்கு 02.05.2017 திகதியிலிருந்து 18.05.2017 ஆம் திகதி வரை கிழமை நாள்களில் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 3.00 வரை இலக்கம் 22, ரக்கா தெரு, ரக்கா வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் அமைந்துள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின், பிரதேச அலுவலகத்தில் வருகை தரவும். அதற்காகப் பிரதேச விற்பனை மேம்படுத்தல் உதவியாளர் (திரு.எம்.தவகோகுலன், தொ.பே.இல. 077 105 4884) அவர்களின் அனுமதியினைப் பெற வேண்டும்.

03. ஒரு மோட்டார் சைக்கிளுக்கு மீள வழங்கப்படாத வைப்பாக ரூ.250/=மற்றும் மீளப் பெறக்கூடிய வைப்புத்தொகை ஒரு மோட்டார் சைக்கிளுக்கு ரூ. 250/= ஆகும். 02.05.2017 ஆம் திகதியிலிருந்து 18.05.2017 ஆம் திகதி வரை கிழமை நாள்களில் முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 14.30 மணிவரை டென்டர் பத்திரங்களை அபிவிருத்தி லொத்தர் சபையின் நிர்வாகப் பிரிவின் நிர்வாக அதிகாரியிடம் அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் உள்ள விற்பனை மேம்படுத்தல் உதவியாளரிடம் பெற்றுக்கொள்ளவும்.

04. பூரணப்படுத்தப்பட்ட விலைக்கோரல் படிவங்களை கொழும்பு 02, யூனியன் பிளேஸ், இலக்கம் 356 இல் அமைந்துள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவருக்கு 19.05.2017 பிற்பகல் 14.30 இற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது அபிவிருத்தி லொத்தர் சபையின் நிர்வாகப் பிரிவில் வைத்துள்ள டென்டர் பெட்டியினுள் இடவும். குறித்த நேரத்துக்குப் பின்னர் விலைக்கோரல் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது. 19.05.2017 ஆம் திகதி பிற்பகல் 14.30 இற்கு விலைக்கோரல் படிவங்கள் திறக்கப்படும். அச் சந்தர்ப்பத்துக்கு டென்டர் கோருபவருக்கு அல்லது அவரின் அனுமதி பெற்ற நபருக்கு பங்கேற்க இயலும்.

**தலைவர், அபிவிருத்தி லொத்தர் சபை.**
**இல.356, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02**



# மேக்ரானா? மரீன் லெபெனா?

அமெரிக்க அதிபர் தேர்தலுக்குத் தரப்படும் முக்கியத்துவமும் உலக அளவிலான எதிர்பார்ப்பும் பிரான்ஸ் அதிபர் தேர்தலுக்கு வழக்கமாக இருப்பதில்லை. ஆனால், இந்த முறை நடக்கும் பிரான்ஸ் நாட்டின் அதிபர் பதவிக்கான தேர்தல் ஒரு விதிவிலக்கு. மேலை நாடுகளில் காணப்படும் ஆட்சிக்கு எதிரான மனநிலை தொடர்கிறதா? இல்லையா? என்பதை இந்தத் தேர்தல் வெளிப்படுத்தும் என்பதால்தான் இத்தனை முக்கியத்துவம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸ் நாட்டின் அதிபருக்கான தேர்தலின் முதல் சுற்று வாக்குப்பதிவு நடந்தது. மூன்று நாட்கள் முன்புதான் ஒரு பொலிஸ் அதிகாரி இஸ்லாமியத் தீவிரவாதியால் தலைநகர் பாரீஸின் மையப் பகுதியில் கொல்லப்பட்டார் என்பதால் கடுமையான பாதுகாப்புக்கிடையே வாக்குப்பதிவு நடைபெற்றது.

இந்தியாவையோ அமெரிக்காவையோ போலல்லாமல் மிகவும் உயர்ந்த ஜனநாயக முறை பிரான்ஸில் பின்பற்றப்படு கிறது. அங்கே ஐம்பது வீதத்துக்கு மேல் வாக்குகள் பெற்றால் மட்டும்தான் அதிபராக முடியும்.

பல கட்சி ஜனநாயகம் நடைமுறையிலுள்ள பிரான்ஸ் நாட்டில், குறைந்தபட்சம் ஐந்நூறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆதரித்து கையொப்பம் இட்டிருந்தால்தான் அதிபர் தேர்தலில் போட்டியிட, வேட்புமனுவே தாக்கல் செய்ய முடியும். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் அதிபர் தேர்தலின் முதல் கட்டத்தில் வேட்புமனு தாக்கல் செய்த அனைவருமே போட்டியிடுவார்கள். அவர்களில் ஐம்பது வீதத்துக்கு மேல் வாக்குகள் பெற்றவர் மட்டும்தான் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார். அப்படி யாருக்குமே ஐம்பது வீத வாக்குகள் கிடைக்காமல் **(27ஆம் பக்கம் பார்க்க)**

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி செல்வராசா

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர், காங்கேசன்துறை அ.மி.த.க.பாடசாலை)



அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி செல்வராசா நேற்று (02.05.2017) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிழக்கு வளவு, மல்லாகத்தைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை மயில்வாகனம் - உடுவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மயிலணியைச் சேர்ந்த மாணிக்கத் தியாகராஜா - புவனநாயகம் தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற செல்வராசா (சித்தியார் முன்னாள் முதலியார் உயர்நீதிமன்றம் மற்றும் முன்னாள் தலைவர் வலிகாமம் தெற்கு, பிரதேசசபை - சுன்னாகம்) அவர்களின் அன்பு மனைவியும் யுவீந்திரா வின் (ஓய்வு நிலை இலங்கை வங்கி உத்தியோகத்தர் - கனடா) பாசமிகு தாயாரும் றமணியின் (கனடா) பாசமிகு மாமியும் காலஞ்சென்ற ஹரிப்பிரணவனின் அன்புப்பேர்த்தியும் Dr.மகேசன், மகேந்திரன் (மகம்) ஆகியோரின் அருமைச்சகோதரியும் நாகேஸ்வரி, கலாறஞ்சிதம் காலஞ்சென்றவர்களான நடராஜா, மங்கையற்கரசி (ஆச்சி), துரைராஜா, தேவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் தயாளினி (நியூசிலாந்து), Dr. தீனதயாளன் (கொழும்பு தேசிய வைத்தியசாலை), தயாகரன் (முகாமையாளர் HNB, கிளிநொச்சி), ஆதவன் (லண்டன்), துளசி (நூலகர் சென்ஜோன்ஸ் கல்லூரி) ஆகி யோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2017) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துவாரகை,**
**இல.06, அம்பலவாணர் வீதி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

தகவல்: குடும்பத்தினர்.
021 224 0407
+164 752 23782 (யுவேந்திரா - கனடா)
yuvindraa@gmail.com

## மரண அறிவித்தல்

### திருமதி லீலாதேவி ஆலாலசுந்தரம்

யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும் தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாதேவி ஆலாலசுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/செங்குந்த இந்துக் கல்லூரி, யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) அவர்கள் நேற்று (02.05.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் - செல்லம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை ஆலாலசுந்தரம் (இலங்கை மின்சார சபை) அவர்களின் அன்பு மனைவியும், நளினி (இலங்கை பரீட்சைத் திணைக்களம்), வாகீசன் (கார்கில்ஸ் சிலோன் PLC ) ஆகியோரின் பாசமிகு தாயும், ஹேமமாலினியின் (கொ/விவேகானந்தா கல்லூரி), மாமியும், கேதாரனின் (கொ/சென் தோமஸ் கல்லூரி) அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 03.05.2017 காலை 8.30 மணிமுதல் வைக்கப்பட்டு பிற்பகல் 2.30 மணி முதல் நடைபெறும். இறுதிக் கிரியைகளைத் தொடர்ந்து தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 4 மணியளவில் கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி.29397) (13.17)

தொ.பே. 011273 4117 / 077 374 7814 / 077 670 9032

## கண்ணீர் அஞ்சலி



எமது சபையில் செயலாளராக கடமையாற்றும் திருமதி **சாரதா உருத்திர சம்பவன்** அவர்களின் அன்பு மாமனார்

### சுப்பிரமணியம் செல்லப்பா

(ஓய்வுபெற்ற ஆசிரியரும் சமாதான நீதவானும்)


அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிசங்கம்,**
**காரைநகர் பிரதேசசபை,**
**காரைநகர்.**

## மரண அறிவித்தல்

### கந்தவனம் சிவகுருநாதன்

(இளைப்பாறிய பகுதிநேர ஆங்கில ஆசிரியர், மருந்தாளர் - இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் - யாழ் கிளை)



யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் சிவகுரு நாதன் 01.05.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம் மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சந்திராவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செந்தூரன், தர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரஜப்பிரியாவின் மாமனாரும் கஷனின் அன்புப் பேரனும் சிதம்பரநாதன் காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் சிவபாலநாதன், சிவயோகநாதன் காலஞ்சென்ற சிவகுணநாதன் மற்றும் சிவராஜேஸ்வரி, சிவயோகேஸ்வரி, சிவலோகேஸ்வரி, சிவனேஸ்வரி சிவசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயகுமாரி, இந்திராணி, நாமகள், காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் சிவயோகர் இராமசாமி, செந்திநாதன், யோகேஸ்வரி, புவனேஸ்வரி காலஞ்சென்ற இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் பிறேமராஜன்(இலங்கை வங்கி), பிரேமகுணாளன், பிரேமச்சந்துரு, இந்துமதி, சுமதி, பிரேமரூபன், கேமாவதி, வித்தியாவதி, சத்தியாவதி, நித்தியாவதி, சசிலா, டினேஸ் ஆகியோரின் சிறிய தந்தையும் தர்சினி, சுரேஸ், கௌரி, குமுதினி, சுபாசினி, நிரோஜன், மாதங்கி, இளங்கோ, சங்கவி, பாரதி, சேரன், ஆரணி ஆகியோரின் மாமனும் சிவித்திரா, கீர்த்திகா, சாருஜன், நிர்த்திகா, சிந்துஜா, வர்ணிக்கா ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2017) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக குச்சுப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குருஸ்தான்,**
**நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.**

தகவல்
**குடும்பத்தினர்.**

**021 227 0337/ 077 318 5779**

# மேக்ரானா? மரீன் லெபெனா?

(26ஆம் பக்கத் தொடர்ச்சி)

போனால், அதிக வாக்குகள் பெற்ற முதல் இரண்டு வேட்பாளர்களும் இரண்டாவது சுற்று தேர்தலுக்குத் தயாராக வேண்டும்.

அதிபர் தேர்தலில் மட்டுமல்ல, பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தலிலும் இதே முறைதான் கடைப்பிடிக்கப்படு கிறது.

முதல் சுற்றுத் தேர்தலில் போட்டியிட்ட 4 முக்கிய வேட்பாளர்களும் தனித்துவம் பெற்றவர்கள். ஒருவர் ஐரோப்பிய யூனியன் ஆதரவாளர். இரண்டாமவர் அரசு செலவீனங்களையும் மானியங்களையும் குறைக்க வேண்டும் என்று கூறும் வலதுசாரி ஆதரவாளர். மூன்றாமவர் ஐரோப்பியக் கூட்டமைப்புக்கு எதிரான இடதுசாரி சிந்தனையாளர். வலதுசாரி சிந்தனை உடைய தேசியவாதியான நான்காமவர் வெற்றி பெற்றால் பிரான்ஸ் நாட்டின் முதல் பெண் அதிபராக சரித்திரம் படைப்பார்.

முதல் சுற்று முடிந்தவிட்ட நிலையில் பிரான்ஸ் அதிபர் தேர்தலில் இப்போது போட்டியில் இருக்கும் 2 வேட்பாளர்கள் 39 வயது இமானுவல் மேக்ரான் என்பவரும், தேசிய முன்னணியைச் சேர்ந்த மரீன் லெபென் என்கிற பெண்மணியும். இமானுவல் மேக்ரானும், தேசிய கூட்டணி தலைவி மரீன் லெபெனும்மே 7ஆம் திகதி நடக்க இருக்கும் இரண்டாவது சுற்று வாக்குப்பதிவில் மோதுகிறார்கள்.

இமானுவல் மேக்ரான் ஐரோப்பியக் கூட்டமைப்பில் பிரான்ஸ் தொடர வேண்டும் என்கிற கருத்தில் தீவிரமாக இருப்பவர். இவர் ஒரு வருடம் முன்னால்தான் கட்சியைத் தொடங்கினார். மேக்ரான் பள்ளி மாணவனாக இருக்கும்போதே தன்னைவிட 24 வயது மூத்த ஆசிரியையைக் காதலித்து திருமணம் செய்துகொண்டவர்.

அதிபர் தேர்தலில் வெற்றி பெறுவதால் மட்டுமே முடிந்துவிடுவ தில்லை. ஜூன் மாதம் நடைபெறும் தேசிய பேரவைக்கான தேர்தலிலும் அதிபராக தேர்ந்தெடுக்கப்படுவரின் கட்சி பெரும்பான்மை பலம் பெற்றால் மட்டும்தான் அவரால் சுதந்திரமாக செயல்பட முடியும்.

தேசிய பேரவைக்கான தேர்தலில் எதிர்க்கட்சி பெரும்பான்மை பலம் பெற்றுவிட்டால், அதன் தலைவரை பிரதமராக நியமித்து ஆட்சி நடத்த வேண்டிய கட்டாயம் அதிபருக்கு ஏற்படும்.

தனது நம்பிக்கைக்குரிய தேசிய பேரவை உறுப்பினர் ஒருவரை பிரதமராக நியமிக்கும் அதிகாரம் அதிபருக்கு இருக்கிறது என்றாலும், சட்டம்

இயற்றும் அதிகாரம் தேசியப் பேரவைக்குதான் உண்டு. அதுபோன்ற சூழ்நிலையில் தேசியப் பேரவையை ஓராண்டுக்குப் பிறகு அதிபரால் கலைத்துவிட முடியும். அப்படியொரு பரிசோதனையில் இறங்குவது ஆபத்திலும் முடியலாம்.

இந்த அதிபர் தேர்தல் முடிவு பிரிட்டன் வாக்காளர்கள் ஐரோப்பியக் கூட்டமைப்பிலிருந்து விலகுவது என்றும், அமெரிக்க வாக்காளர்கள் டொனால்ட் டிரம்ப்பை வெற்றிபெறச் செய்ததும்போல பிற நாட்டினரின் குடியேற்றத்துக்கு எதிரான மனநிலையை பிரதிபலிக்குமா? பிரதிபலிக்காதா? என்பதைவெளிப்படுத்தும். அதேபோல பிரான்ஸ் வாக்களிக்கப்போவது இடதுசாரிக் கொள்கைக்கா? வலதுசாரிக்கொள்கைக்கா? அல்லது கூட்டுப் பொருளாதாரத்துக்கா? என்பதையும் தேர்தல் முடிவு வெளிச்சம் போடும்.

மாணவர்களுக்கான புதிய கற்கை நெறிகள்
May 2017 ஆரம்பம்

Diploma Course
- Information and Communication Technology(ICT) – (8 Months Full Time)

Computer Certificate Courses ( 3 - 4 months Part time)
- NVQ Level 3 (Accredited) Course – Computer Application Assistant (CAA)
- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician

மூன்றாம் நிலைக்கல்வி தொழில்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.
பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Hostel, Library & Sports

For More Information :
DIRECTOR
JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI, JAFFNA , SRI LANKA.
Tel : 0213213139/0212250975 E-mail: ejcit@sltnet.lk

## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்)
## சபைநிதி வேலைத்திட்டம்

01. சபை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையிற் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை நிறைவேற்றவெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) வடமாகாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வீதி வேலைகளுக்கு கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது .
04. பொது நிர்வாகச் சுற்றறிக்கை 4/2016(1) இற்கமைவாக இவ்விலைமனுக்கோரலானது வடமாகாணத்துக்குள் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளைக் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (மல்லாகம்) தொலைபேசி:- 0212241130, தொலைநகல்:- 0212241130இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் 03.05.2017 ஆம் திகதியிலிருந்து 25.05.2017 வரை காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர்.பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) எனும் இடத்திலிருந்து 03.05.2017ஆம் திகதியிலிருந்து 25.05.2017 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 1500.00 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழ .வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) எனும் முகவரிக்கு 25.05.2017ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் / பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்விகள் செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) ரூபா | ஒப்பந்த காலம் | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த (ICTAD) தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விவைப்புப் பணம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41 (14)5/CF-01/2017 | பாடசாலை வீதிப்புனரமைப்பு வேலை - மல்லாகம் | 1.32 | இரண்டு மாதங்கள் | C9 அல்லது அதற்கு மேல் | 49 நாள்கள் | 13,500.00 | 10.08.2017 |
| 02 | NP/14/41 (14)5/CF-02/2017 | நாமகள் வீதிப்புனரமைப்பு வேலை – கட்டுவன் | 1.42 | இரண்டு மாதங்கள் | C9 அல்லது அதற்கு மேல் | 49 நாள்கள் | 14,500.00 | 10.08.2017 |
| 03 | NP/14/41 (14)5/CF-03/2017 | பெரியமதவடி கொங்கிறீற் வீதிப்புனரமைப்பு வேலை-அளவெட்டி | 3.06 | மூன்று மாதங்கள் | C8 அல்லது அதற்கு மேல் | 63 நாள்கள் | 31,000.00 | 24.08.2017 |
| 04 | NP/14/41 (14)5/CF-04/2017 | முத்துமாரியம்மன் வீதிப்புனரமைப்பு வேலை- மாவிட்டபுரம் | 2.22 | மூன்று மாதங்கள் | C8 அல்லது அதற்கு மேல் | 63 நாள்கள் | 22,500.00 | 24.08.2017 |
| 05 | NP/14/41 (14)5/CF-05/2017 | பெருமாள்கடவை வீதிப்புனரமைப்பு வேலை- அளவெட்டி | 1.01 | இரண்டு மாதங்கள் | C9 அல்லது அதற்கு மேல் | 49 நாள்கள் | 10,500.00 | 10.08.2017 |
| 06 | NP/14/41 (14)5/CF-06/2017 | இம்புலானை வீதிப்புனரமைப்பு வேலை- அளவெட்டி மேற்கு | 2.50 | மூன்று மாதங்கள் | C8 அல்லது அதற்கு மேல் | 63 நாள்கள் | 25,500.00 | 24.08.2017 |
| 07 | NP/14/41 (14)5/CF-07/2017 | வறுத்தலைவிளான் பாடசாலை இணைப்பு வீதிப் புனரமைப்பு வேலை- வறுத்தலைவிளான் | 5.44 | நான்கு மாதங்கள் | C7 அல்லது அதற்கு மேல் | 77 நாள்கள் | 54,500.00 | 07.09.2017 |

11. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 17.05.2017 ஆம் திகதி பி.ப.14.30 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (மல்லாகம்).**

( aja in 1885)

**03.05.2017**



யாழ்ப்பாணம் - மருதனார்மடம்
இராமநாதன் சங்கீத அக்கடமியில்
முன்னாள் இசை விரிவுரையாளர்
(1966 - 1974)
மகாவித்துவான்
A.G. ஐயாக்கண்ணுதேசிகர்
அவர்களின்
நூற்றாண்டு விழாவினைச் சிறப்பிக்கும்
முகமாக நடைபெறும்
இசை அரங்கம்



கர்நாடக சங்கீத உலகின் ஜாம்பவான்
சங்கீத ரத்னாகர
குரு. நெய்வேலி
சந்தானகோபாலன்
அவர்களின்
இசைக்கச்சேரி
இடம்பெறும்.
காலம்: 2017.05.06 சனிக்கிழமை
நேரம்: மாலை 4.30 மணிக்கு
இடம்: செல்வா மஹால் மண்டபம்
பூநாறிமடம்,
1229, கே.கே.எஸ். வீதி.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தேசிகர் நூற்றாண்டு விழாக் குழுவினர்.

## ஆட்சியைப்...

றார். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அந்தக் கட்சி ஏற்பாடு செய்திருந்த தொழிலாளர் தினக் கூட்டம் கொழும்பு பீ.ஆர்.சி மைதானத்தில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய அநுரகுமார திசாநாயக்க, கடந்த 69 வருடங்களாக மாறி மாறி ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் பொருளாதார ரீதியாகவும், சுற்றாடல் ரீதியாகவும் நாட்டை மோசமான நிலைக்குக் கொண்டு சென்றுள்ளனர். பன்னாடுகளிடம் பிச்சையெடுக்கும் நிலைக்கு நாட்டை முன்நடத்திச் சென்றுள்ளனர். நாட்டு மக்களைக் கௌரவமானவர்களாக வாழ வைப்பதற்குப் பதிலாக இழிவானவர்களாக வாழ்வதற்கான வழிகளையே இவர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

மகிந்த ராஜபக்ச சிங்களவர்களுக்கு எதிராகத் தமிழர்களை உசுப்பிட்டு தேசப்பற்றை வெளிக்காட்ட முயற்சிக்கும் அதேநேரம், ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்குச் சொந்தமான அரிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பதில் தீவிரம் காட்டியுள்ளார். மறுபக்கத்தில் மைத்திரிபால சிறிசேன பயத்தின் காரணமாக உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களை நடத்தாது பின்னடித்து வருகின்றார். தேர்தலை நடத்துவாராயின் அத்துடன் அவருடைய அரச தலைவர் பதவி இல்லாமல் போகும் என்பது அவருக்கு உறுதியாகத் தெரிந்துள்ளது.

கல்வித்துறை மற்றும் சுகாதாரத் துறைக்கான ஒதுக்கீடுகள் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றன. அரச தலைவருக்கு இரண்டு கார்களைக் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் 5 ஆயிரத்து 740 கோடி ஒதுக்கியுள்ளனர். அதேநேரம், தலைமை அமைச்சருக்கு இரண்டு கார்களைக் கொள்வனவு செய்ய 5 ஆயிரத்து 930 கோடியை ஒதுக்கியுள்ளார்கள். மறுபக்கத்தில் மீதொட்டமுல்லவில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வெறும் ஒரு இலட்சம் ரூபாவே நட்டஈடாக வழங்கப்படுகிறது. அரச தலைவர் தனது வீட்டிலிருந்து 20 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள நாடாளுமன்றத்துக்கு உலங்கு வானூர்தியில் செல்கின்றார். தற்பொழுது இருக்கும் ஆட்சி ஆட்சியாளர்களுக்கான ஆட்சியாகும். அவர்கள் பொது மக்கள் பற்றி கவலைப்படுவதில்லை.

போரில் ஏற்பட்ட பிரதிபலன் காரணமாக வடக்கில் மீண்டுமொரு ஆயுதப்புரட்சி ஏற்படாது. அவ்வாறு ஒரு புரட்சி ஏற்படுவதற்கு மக்கள் விடுதலை முன்னணி ஒருபோதும் இடமளிக்காது. யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக மே தினத்தை நடத்தி இந்த செய்தியையே நாம் அங்கு கூறியுள்ளோம் என்றார். (த-5)

## பொன்சேகா...

ளார்.

அமைச்சரவைக் கூட்டம் நேற்று மாலை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றுள்ளது. கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பேசப்பட்ட, சரத் பொன்சேகா விவகாரம் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது.

அரசியல் நோக்கில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும்போது மக்களுக்கான அத்தியாவசியச் சேவையை முன்னெடுப்பதற்காக அனைத்துத் தரப்புக்களையும் உள்ளடக்கிய செயலணியை நிறுவ வேண்டும். இது கட்சியைப் பாதுகாக்கும் நோக்கில் எடுக்கப்படும் முடிவு அல்ல. கூட்டு அரசையும், மக்களையும் பாதுகாக்கும் நோக்கில் எடுக்கப்படுகின்ற முடிவாகும்.

சரத் பொன்சேகாவைக் கூட்டுப் படைகளின் தளபதியாக நியமிப்பது தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை. அவரை அத்தியாவசிய சேவையை முன்னெடுக்கும் செயலணிக்குப் பொறுப்பாக நியமிப்பது பற்றியே பேசப்பட்டது. அமைச்சரவையில் பேசப்படும் விடயங்களை பொதுவெளியில் பேசும்போது அமைச்சர்கள் பொறுப்பாகச் செயற்பட வேண்டும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமைச்சர்களைக் கடிந்து கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், பொன்சேகாவை கூட்டுப் படைத் தளபதியாக நியமித்தாக அமைச்சர்கள் சிலர் கருத்து வெளியிட்டிருந்தனர். அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித, அவரை சிறப்புச் செயலணியின் தலைவராக நியமித்ததாகக் குறிப்பிட்டிருந்தார். அமைச்சரவையில் பேசப்பட்ட விடயம் தொடர்பில் மாறிமாறி தகவல்கள் அமைச்சர்களால் வெளியிடப்பட்டமையினாலேயே அரச தலைவர் இவ்வாறு கடிந்து கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## மருத்துவர்கள்...

ளீட்ட அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பெரிய வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தப் போராட்டத்துக்கு அரச துறைசார் பிரதான ஐந்து தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் மற்றும் அகில இலங்கைப் போக்குவரத்துச் சங்கம் என்பன அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்னெடுக்கும் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்துள்ளன.

மாலபே தனியார் வைத்திய கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஹோமாகம அரச மருத்துவமனையில் வைத்திய பரிசோதனையளிக்க அரசு முடிவு செய்திருந்தமையைக் கண்டித்து ஹோமாகமவில் மருத்துவமனைக்கு முன்பு நேற்றுப் பெரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உப தலைவர் ஹரித்த அளுத்கே கூறியதாவது:

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நாடு முழுவதும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளது. இதற்கு அரசின் முதன்மையான ஐந்து தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன. அரசு மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் விரைவில் உரிய தீர்மானம் எடுக்க வேண்டும். வெள்ளிக்கிழமை நடைபெறும் மிகப் பெரிய பணிப்புறக்கணிப்பின் பின்னரும் அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் வெடிக்கும்-என்றார். (த-5)

## 30 மியன்மார்...

இந்தியா அவர்களை நாடு கடத்த முயல்வதாகக் கருதித் தப்பிச் சென்றவேளையிலேயே இலங்கைக் கடற்படையினரிடம் தஞ்சம் அடைந்திருந்தனர்.

இவர்களைக் கடற்படையினர் காங்கேசன்துறைப் பொலிசாரிடம் ஒப்படைத்தனர். இவர்கள் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களை வைத்தியசாலைக்கு வந்து பார்வையிட்ட பதில் நீதிவான் 30 பேரையும் நேற்று வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

30 மியன்மார் அகதிகளும் நேற்று மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது அகதிகள் சார்பில் சட்டத்தரணி ருஸ்தி ஹபீப் முன்னிலையாகி குறித்த 30 பேரையும் மனிதாபிமான அடிப்படையில் அணுகிச் சிறைச்சாலையில் அடைக்காது சிறுவர்கள், பெண்களின் நிலமைக்கேற்ற தீர்வை வழங்குமாறு கோரினார்.

இவற்றை ஆராய்ந்த நீதிவான் குறித்த 30பேரையும் மீரிஹான தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார். (த-101)

## 4 மாதங்களில்...

தில் மாத்திரம் 2 ஆயிரத்து 400 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் டெங்கு நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்தது.

கடந்த ஏப்ரல் மாதத்தின் முதல் 21 நாள்களில் நாடு முழுவதும் 7 ஆயிரத்து 23 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, 2017 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 39 ஆயிரத்து 313 டெங்கு நோயாளர்கள் நாடு முழுவதும் இனங்காணப்பட்டுள்ளனர். மாத நிறைவுடன் இந்த எண்ணிக்கை 40 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

வடக்கில் 3 ஆயிரத்து 430 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2 ஆயிரத்து 400 பேரும் மன்னாரில் 384 பேரும், வவுனியாவில் 354 பேரும், கிளிநொச்சியில் 190 பேரும், முல்லைத்தீவில் 10 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் ஏற்பட்ட டெங்கினால் 20 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் சுகாதாரப் பிரிவு தெரிவித்தது.

எனவே டெங்குத் தொற்றுத் தொடர்பில் அனைவரும் மிக அவதானமாக இருக்கவும். டெங்குத் தொற்று ஏற்படாதவாறு சூழலைச் சுத்தமாக வைத்திருக்குமாறும் சுகாதாரப் பிரிவு பொதுமக்களைக் கோரியுள்ளது.

இதேவேளை, 2016 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப் பகுதிக்குள் 16 ஆயிரத்து 661 டெங்கு நோயாளர்களே நாடு தழுவிய ரீதியில் அடையாளம் காணப்பட்டதாகச் சுகாதார அமைச்சின் டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்தது. (த-4)

## ஹன்ரர்...

அண்மித்து இடம்பெற்றது. சம்பவத்தில் கிளிநொச்சி வன்னேரிக்குளத்தைச் சேர்ந்த ஜெகசோதி இருதயராஜ் (வயது - 17) என்பவரே உயிரிழந்தார்.

குறித்த சிறுவன் யாழ்ப்பாணத்திலுள்ள உறவினர் வீட்டுக்குச் சில நாள்களாக வந்து தங்கியிருந்துள்ளார். அவரது உறவினர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அதற்காகக் கடந்த 30 ஆம் திகதி குலையுடன் கூடிய வாழைமரத்தை ஏற்றியவாறு கூலர் வாகனத்தில் நண்பர்களுடன் சென்றுள்ளார். வாகனப் பின்கதவு திறந்திருக்க அதில் சாய்ந்திருந்தவாறு பாடல் பாடிக்கொண்டிருந்தவர் வாகனம் வீதியில் பள்ளத்தில் இறங்கி ஏறியபோது தூக்கி வீசப்பட்டார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. வீதியில் மயங்கிய நிலையில் காணப்பட்ட அவரைச் சக நண்பர்கள் மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் மாலை அவர் உயிரிழந்தார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-4-101)

## மைத்திரியிடம்...

சேனவைச் சந்தித்துப் பேசியுள்ளார். காணாமற்போனோர் விவகாரம் தொடர்பில் இந்தப் பேச்சில் ஆராயப்பட்டுள்ளது. இரண்டு விடயங்களை எதிர்க்கட்சித் தலைவர், அரச தலைவரிடம் அழுத்திக் கூறியுள்ளார்.

காணாமற்போனோரின் உறவினர்கள், தடுப்பில் உள்ளவர்களின் விவரங்களை வெளியிடக் கோருகின்றனர். அவற்றை வெளியிடுங்கள். அதில் பெயர் இல்லாதவர்கள் தொடர்பில் காணாமற்போனோர் அலுவலகத்தின் ஊடாக உடன் விசாரணைகளை ஆரம்பியுங்கள் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

எந்தவொரு பதிலையும் வழங்காமல், இவற்றைப் பொறுமையாகக் கேட்டு, அரச தலைவர் மைத்திரி தாளில் குறிப்பு எழுதிக் கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## ஜனநாயக...

கின்றது. அதற்கு ஆதரவானவர்களே காலிமுகத்திடலில் ஒன்று கூடுகின்றனர். நாட்டில் மீண்டும் ஜனநாயக விரோத ஆட்சியை ஏற்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்று நவ சமசமாஜ கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

தொழிற் சங்கங்கள் மற்றும் இடதுசாரி அமைப்புக்கள் இணைந்து நுகேகொட ஆனந்த சமரக்கோன் திறந்த வெளியரங்கில், தொழிலாளர் தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இன்று நாட்டில் இருப்பது இரண்டு கூட்டங்களாகும். அவைதான் ஜனநாயகக் கூட்டமும் ஜனநாயக விரோதக் கூட்டமுமாகும். ஜனநாயக விரோத கூட்டம்தான் இன்று (நேற்று முன்தினம்) காலிமுகத்திடலில் இடம்பெறுகின்ற மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியின் தொழிலாளர் தினக் கூட்டமாகும். மகிந்த ராஜபக்ச தலைமையிலான கடந்த அரசு மேற்கொண்ட பாஸிசவாத ஆட்சியை மீண்டும் ஏற்படுத்துவதற்கே இவர்கள் முயற்சிக்கின்றார்கள்.

அரசு ஊழல் மோசடிகாரர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கை மந்த கதியில் செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க, எக்னலிகொட போன்றவர்களின் கொலை மற்றும் கடத்தப்பட்டவர்கள் தொடர்பாக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோன்று அரசியல் கைதிகள் விடயத்தில் அரசு இன்னும் தீர்வொன்றை வழங்காமல் இருக்கின்றது.

இந்த அரசை அமைக்க இடதுசாரிக் கட்சிகள் முன்னின்று செயற்பட்டன. அதனால் அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம். குறிப்பாக சிறுபான்மை மக்களின் ஜனநாயக உரிமை மற்றும் புதிய அரசமைப்பை உருவாக்குதல் விடயம் தொடர்பாக அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (த-5)

## செல்பி...

றுள்ளது. சிலாபம் இலிப்பதெணிய கிழக்கு முங்கத்த லுவ பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதான டில்கி சிகாரா பிஸ்மத் என்ற இளம் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

காணாமற் போன இளம்பெண் தனது குடும்பத்தினருடன் சிலாபம் கடற்பகுதிக்குச் சுற்றுலா சென்றிருந்தார். கடற்கரையில் தமது உறவினர்கள் சிலருடன் செல்பி எடுத்துக் கொண்டிருந்தபோது அவர்களைக் கடலலை இழுத்துச் சென்றுள்ளது. இதன்போது 4 பெண்கள் அலையில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர். எனினும் மூவர் தப்பியிருந்தபோதும் ஒருவரைக் காப்பாற்ற முடியவில்லை.

விபத்து இடம்பெற்றுள்ள பகுதி ஆபத்தான பகுதி என்று சிலாபம் நகர சபை மற்றும் இடர் முகாமைத்துவ நிலையம் ஆகியவற்றால் எச்சரிக்கப்பட்டுப் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதனைக்கூட அவர்கள் கவனத்தில் கொள்ளாததனால் இந்த இடர் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-5)

## வழி நடத்தல்...

கடந்த டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இழுபறி உள்ளிட்ட பல்வேறு விடயங்களால், அரசமைப்பு முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லை.

மார்ச் மாதத்தின் பின்னர் அரசமைப்பு முயற்சிகள் வேகப்படுத்தப்பட்டிருந்தன. கடந்த மாதம் இடம்பெற்ற வழிநடத்தல் குழுவின் கூட்டத்தில், இடைக்கால அறிக்கையைத் தயார் செய்து மே 3ஆம் திகதிக்கு (இன்று) முன்னர் அனைத்துக் கட்சிகளுக்கும் அனுப்புவது. அதனை அடிப்படையாகக் கொண்டு மே 3 மற்றும் 4ஆம் திகதிகளில் ஆராய்வது. அதனை இறுதி செய்து நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பது என்று முடிவு செய்யப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக இடைக்கால அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது. அது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு அவர் இணங்கியுள்ளார். இதன் பின்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், வழிநடத்தல் குழுவின் முக்கியமான உறுப்பினர்களுக்கும் இடையே நேற்றுச் சந்திப்பு நடைபெற இருந்தது. கண்டியில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிலாளர் தினக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்றிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, கொழும்பு திரும்பத் தாமதம் ஏற்பட்டது. இதனால் அரச தலைவருடனான சந்திப்பு நடைபெறவில்லை. இடைக்கால அறிக்கை தொடர்பில் அரச தலைவரின் நிலைப்பாடு தெரியவராமையால், இன்றைய கூட்டத்தில் இடைக்கால அறிக்கை தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படாது என்று, இந்த விடயங்களைக் கையாளும் தரப்புக்கள் தெரிவித்தன (த-வ-5)

## காற்றோட்டத்துக்காக...

கப்பட்டார்.

இந்தச் சம்பவங்கள் புத்தூர் கிழக்கு குமாரசாமி வீதியில் நேற்று இடம்பெற்றன.

"தற்போது நிலவும் வெப்பமான காலநிலையால் வீட்டு வாசல் கதவுகளைத் திறந்துவிட்டு வீட்டிலுள்ளவர்கள் நித்திரைக்குச் சென்றுள்ளனர். அவ்வாறு வீட்டுக் கதவு திறந்திருந்தபோது வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அங்கு சல்லடையாகத் தேடுதல் நடத்தி 25 பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். நேற்றுக்காலையே சம்பவம் தெரியவந்தது என்று அச்சுவேலிப் பொலிஸில் நிலையத்தில் முறையிடப்பட்டது.

இதேவேளை, அதே பகுதியில் மற்றொரு வீட்டுக்குள் திருட்டில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் அந்த இடத்தைச் சேராத ஒருவர் நேற்றுஅதிகாலை ஒரு மணியளவில் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். அது தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று பொதுமக்கள் பிடித்து வைத்திருந்த நபரைப் பொறுப்பேற்றனர். 2 சம்பவங்கள் தொடர்பாகவும் விசாரணைகள் இடம்பெறுகின்றன" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பேச்சில் அதிருப்தி கலந்திருக்கும். குடும்பத்தினர் பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக் கிடைக்கும். பணக் கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.

**இடபம்:** எதிர்கால வாழ்வு சிறக்கப் பாடுபடுவீர்கள். பெரியவர்களின் ஆசியும், வழிகாட்டுதலும் கிடைக்கும். தொழில் வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். புத்திரர் விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**மிதுனம்:** சுய தேவை நல்லமுறையில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்பலாபம்கிடைக்கும். முக்கிய செலவுக்குச்சேமிப்பைப் பயன்படுத்துவீர்கள். வாகன பயணத்தில் கவனம் தேவை.

**கடகம்:** மனம், உடலில் புத்துணர்வு மேலோங்கும். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றிகாண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்து; பிரச்சினை நல்லமுறையில் தீரும்.

**சிங்கம்:** பிறருக்கு உதவும் எண்ணம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் தடை விலகி ஆதாயம் உயரும். அலங்காரப் பொருள் வாங்குவீர்கள். பிள்ளைகளின் செயல்பாட்டால் பெருமை உண்டாகும்.

**கன்னி:** நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். விருந்தினர் வருகையால் பணச்செலவு ஏற்படலாம். குடும்பத்தினர் ஆதரவு, மனதுக்கு நம்பிக்கை தரும்.

**துலாம்:** எதிலும் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. மனைவியின் செயல்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப வருமானம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பொது விடயங்களில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான வளர்ச்சி உண்டாகும். லாபம் சுமார். குடும்பத்தினரின் ஆதரவு உண்டு.

**தனுசு:** இனிமையாகப் பேசி, பிறர் மனதில் இடம்பெறுவீர்கள். பணிகள் அனைத்தும் எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். இல்லறத்துணை விரும்பியதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மகரம்:** மறைமுக எதிரியை இனம் கண்டு ஒதுங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பு தேவைப்படும். லாபம் சுமார். பிள்ளைகளின் செயல்பாடு மனதுக்கு நிம்மதி அளிக்கும். செலவு அதிகரிக்கும்.

**கும்பம்:** பொது விடயங்களில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. எதிர்பார்த்த நல்லசெய்தி வீடு தேடி வரும்.

**மீனம்:** சாதுரியமாகச் செயல்பட்டு நன்மை காண்பீர்கள். உறவினர் மத்தியில் செல்வாக்கு உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சி திருப்திகரமாகும். பிள்ளைகளின் நலனில் அக்கறை ஏற்படும்.

# அமெரிக்காவில் நடனமாடும் சந்தானம்



சந்தானம் நடித்து வரும் படங்களின் படப்பிடிப்புகள் அமெரிக்கா, ஜார்ஜியா, போலந்து என முழுக்க முழுக்க வெளிநாடுகளில் எடுக்கப்பட்டு வருகிறது. சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரையில் நகைச் சுவை நடிகனாக அறிமுகமான சந்தானம், தற்போது கதாநாயகனாக நடித்து வருகிறார். `வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்', `இனிமே இப்படித்தான்', `தில்லுக்கு துட்டு' உள்ளிட்ட படங்களில் நாயகனாக நடித்துள்ளார். தொடர்ந்து பல்வேறு படங்களில் நாயகனாக நடித்தும் வருகிறார். இதில், ஆனந்த் பால்கி இயக்கத்தில் 'சர்வர் சுந்தரம்' படத்தில் தன்னுடைய காட்சிகளை நடித்து முடித்துவிட்ட சந்தானம், அடுத்ததாக 'சக்கபோடு போடுராஜா' படத்தில் நடித்து வருகிறார். சேதுராமன் இயக்கத்தில் சந்தானம் புதுமுக நாயகி வைபவி நடிக்கும் படம் 'சக்கபோடு போடு ராஜா'. இந்தப் படத்தை விடிவி கணேஷ் தயாரித்து வருகிறார். இப்படத்தின் பாடல்களை அமெரிக்கா, ஜார்ஜியா உள்ளிட்ட முன்னணி நாடுகளில் படமாக்குவதற்குப் படக்குழு முடிவு செய்துள்ளது. ஆரம்பப் பாடலை முடித்த பிறகு செல்வராகவன் இயக்கும் 'மன்னவன் வந்தானடி' படத்துக்காகச் சந்தானம் போலந்து செல்கிறார். அங்கு, சில முக்கியக் காட்சிகளைப் படமாக்க இருக்கிறார்கள். இந்த இரண்டு படங்களையும் முடித்தபிறகு 'ஓடிஓடி உழைக்கணும்' படத்தில் நடிக்கும் சந்தானம், அதன்பிறகு ராஜேஷ் இயக்கத்தில் நடிக்கவுள்ளார்.

















# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | | 6 | | | 8 |
| 2 | | 1 | | | 7 | | | |
| | 7 | | | | | 4 | | |
| | 3 | | 6 | | 8 | | 5 | |
| | | | 5 | 3 | 9 | | | |
| | | 9 | | 7 | | | | |
| 3 | | | | | | | 6 | |
| | | | | | | 5 | 8 | 9 |
| | 6 | | | 5 | | 7 | | 4 |


சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 4 | 5 | 9 | 7 | 6 | 1 | 3 |
| 5 | 1 | 9 | 3 | 6 | 8 | 4 | 7 | 2 |
| 3 | 7 | 6 | 2 | 1 | 4 | 5 | 9 | 8 |
| 4 | 8 | 7 | 9 | 5 | 1 | 3 | 2 | 6 |
| 1 | 6 | 3 | 4 | 7 | 2 | 8 | 5 | 9 |
| 2 | 9 | 5 | 8 | 3 | 6 | 1 | 4 | 7 |
| 7 | 4 | 2 | 6 | 8 | 5 | 9 | 3 | 1 |
| 6 | 3 | 1 | 7 | 4 | 9 | 2 | 8 | 5 |
| 9 | 5 | 8 | 1 | 2 | 3 | 7 | 6 | 4 |

## கோப்பாய் பி.செயலகம் நேர் செற்றில் சம்பியன்



யாழ்ப்பாணம், மே 3
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரில், ஆண்கள் பிரிவில் கோப்பாய் பிரதேச செயலகம் கிண்ணம் வென்றது.
வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரை மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலகம் மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது.
முதலாவது செற்றை 21:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது கோப்பாய் பிரதேச செயலகம். அந்த அணி தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் தக்கவைத்து இரண்டாவது செற்றை 21:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முடிவில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-108)

## இறுதியில் டயமன்ஸ்

யாழ்ப்பாணம், மே 3
கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் கடும்போராட்டத்தின் பின் சமநிலை தவிர்ப்பு உதைமூலம் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது டயமன்ஸ் அணி.
இமையாணன்மத்தியவிளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் இளைஞர் கழகமும் கரணவாய் கொலின்ஸ் இளைஞர் கழகமும் மோதின.
ஆட்டம் ஆரம்பமாகி சில நிமிடங்களில் டயமன்ஸின் முதல் கோலைப் பதிவு செய்து கொலின்ஸுக்கு அதிர்ச்சி கொடுத்தார் நரேஸ். முதல் பாதியின் இறுதி நிமிடத்தில் கிடைத்த தண்ட உதை வாய்ப்பை சிறப்பாகப் பயன்படுத்தி முதல் கோலைப் பதிவுசெய்தது கொலின்ஸ். 1:1 என்ற நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது டயமன்ஸ். அணி. (ம-108)



# எவ்.ஏ.கிண்ணத்தொடரில் பாடும்மீன் வெளியேறியது

யாழ்ப்பாணம். மே 3
எவ்.ஏ. கிண்ணத் தொடரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறியது குருநகர் பாடும்மீன் அணி.
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டமொன்றில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து களுத்துறை புளூஸ்ரார் அணி மோதியது.
இரு அணிகளும் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. முதல் 30 நிமிடங்கள் வரை கோல்கள் எவையும் பதிவாகவில்லை. 37ஆவது நிமிடத்தில் களுத்துறை புளூஸ்ரார் அணியின் மஸ்மிர் தனது அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். பதிலடி கொடுக்க பலமுறை முயன்றது பாடும்மீன். ஆனால் வாய்ப்பு எதுவும் கிட்டாத நிலையில் புளூஸ்ராரின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதியின் 13 ஆவது நிமிடத்தில் களுத்துறை அணியின் திலன் ஜெயந்த சிமோன். அணியின் இரண்டாவது கோலைப் பதிவு செய்தார். இரண்டாம் பாதியின் 32ஆவது நிமிடத்தில் பாடும்மீன் அணியின் ஜோன் குயின்ரஸ் தனது அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது களுத்துறை புளூஸ்ரார். தொடரில் இருந்து வெளியேற்றப் பட்டது குருநகர் பாடும்மீன் அணி. (ம-23)



# பருத்தித்துறை பிரதேச செயலகம் கடற்கரை கரப்பந்தில் அசத்தியது

யாழ்ப்பாணம், மே 3
யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கடற்கரை கரப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது. வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரை மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேசசெயலகம் மோதியது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் முறையே 21:17, 21:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் கிண்ணம் வென்றது பருத்தித்துறை பிரதேச செயலக அணி. (ம-108-422)



## மோகனதாஸ் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், மே 3
நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் மட்டுவில் மோகனதாஸ் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.
பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன் தினம் மின்னொளியில் நடைபெற்ற ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரு செற்களையும் முறையே 25:22, 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம் கண்டது மோகனதாஸ் அணி. (ம-422)

## ஸ்பேஸ் சம்பியன்

யாழ்ப்பாணம். மே 3
சுழிபுரம் றோட்டறிக் கழகத்தின் வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகம்.
சுழிபுரம் றோட்டறிக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்திய துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகமும் இணுவில் கலையொளி விளை யாட்டுக் கழகமும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய கலையொளி அணி நிர்ணயிக்கப்பட்ட பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கோகுலன் 40 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் அஜித் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.
64 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஸ்பேஸ் அணி 6.4 பந்துப் பரிமாற்றங்களில் ஒரு இலக்கை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக பவன் 39 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பிரதீஸ் ஒரு இலக்கைக் கைப்பற்றினார். பவன் ஆட்டநாயகனாக தெரிவானார். (ம-108)

## வடக்கு மாகாண பெருவிளையாட்டு

யாழ்ப்பாணம், மே 3
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகி ஐந்து கட்டங்களாக நடைபெறவுள்ளன.
முதல்கட்டப் போட்டிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகின்றன. இதில் இருபாலாருக்குமான மென்பந்து துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், கால்பந்தாட்டம், எல்லே ஆகிய போட்டிகள் நடைபெறவுள்னன.
இரண்டாம் கட்டம் மன்னாரிலும், மூன்றாம் கட்டம் வவுனியாவிலும், நான்காம் மற்றும் ஐந்தாம் கட்டங்கள் யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளன. (ம-23)




# மேற்கிந்தியத் தீவுகளுக்கு பாக். முறையான கவனிப்பு



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடிய அறிகுறிகளை வெளிப்படுத்தியது பாகிஸ்தான்.

பாகிஸ்தான் மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் மேற்கிந்தியத் தீவுகளின் கிங்ஸ்டன் ஓவல் மைதானத்தில் கடந்த 30ஆம் திகதி ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. தொடரில் மூன்று ஆட்டங்கள். முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் வென்ற காரணத்தால் நடைபெற்றுவரும் ஆட்டத்தில் தீவுகள் வெல்லவேண்டும் என்ற நிலை உள்ளது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது தீவுகள். அந்த அணி முதல் நாள் முடிவில் 286 6 என்ற நிலையில் இருந்தது. சேஸ் 131 ஓட்டங்களுடனும், கோல்டர் 58 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுமுன்தினம் இரவு (இலங்கை நேரப்படி) களமிறங்கினர்.

மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் இருவராலும் பெறமுடியவில்லை. சேஸை வீழ்த்தினார் ஆமிர். கோல்டரை வீழ்த்தினார் அப்பாஸ். பின்வரிசை சரிவுகாண 312 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது தீவுகள்.

பந்துவீச்சில் அப்பாஸ் 4 இலக்குகளையும், ஆமிர் 3 இலக்குகளையும், யாசிர் 2 இலக்குகளையும், சடப்கான் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தானுக்கு ஆரம்ப வீரர்களான அசார் அலி, செசாட் இணை சிறந்த ஆட்டத்தை வழங்கியது. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தனர். இணைப்பாட்டமாக 155 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 70 ஓட்டங்களுடன் செசாட் வீழ்ந்தார். அசாம், யுனிஸ்கான் இருவரும் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தனர். நாள் முடிவில் பாகிஸ்தான் 3 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அசார் அலி 81 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் மிஸ்பா 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். (ம)

## பருத்தித்துறை பி.செயலகம் கிண்ணங்களை அள்ளியது

யாழ்ப்பாணம், மே 3

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு உட்பட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான கடற்கரை கபடியில் ஆண்கள், பெண்கள் என இருபால் பிரிவிலும் பருத்தித்துறை பிரதேச செயலக அணிகள் சம்பியன் கிண்ணங்களைச் சுவீகரித்தன.

வல்வெட்டித்துறை ரேவடி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச அணி மோதியது. இதில் பருத்தித்துறை பிரதேச அணி 46:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

பெண்கள் பிரிவு இறுதியாட்டத்திலும் பருத்தித்துறை பிரதேச அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச அணி மோதியது. இதில் பருத்தித்துறை பிரதேச அணி 36:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

(ம-108-422)

## வளர்மதி, பாரதி அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், மே 3

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் வளர்மதி, பாரதி அணிகள் வெற்றிபெற்றன.

பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவெட்டி வளர்மதி 'ஏ' அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 25:18, 25:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது மட்டுவில் வளர்மதி அணி.

தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:19, 25:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது பாரதி அணி.

(ம-23)

## டோனியின் ஆலோசனை மிகவும் பெறுமதியானது

### சிமித் புகழாரம்

புனே அணியை திறம்பட வழிநடத்திச் செல்வதற்கு டோனியின் ஆலோசனைகள் மிகவும் உதவுகின்றன என்று அந்த அணியின் தலைவர் சிமித் தெரிவித்தார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"டோனி மிக அருமையாக திகழ்கிறார். காரணம் அவருக்கு ஆட்டத்தின் போக்கு எவ்வாறு செல்கிறது என்பது நன்றாகவே தெரிந்திருக்கிறது. இலக்குக் காப்பாளராக பந்துவீச்சாளரிடத்திலும், அனுபவம் வாய்ந்த வீரராக என்னிடத்திலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறார்" என சிமித் மேலும் தெரிவித்தார்.

(ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 3

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக இருபிரிவாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று



வருகின்றன. இந்தத் தொடரில் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையில் இன்று சில ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது.

இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி வொலி கிங்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வழக்கம்பரை அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)

# மும்பை அணி தொடர்ந்தும் முதலிடம்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் இதுவரையிலுமான நிலவரத்தின்படி (நேற்று இரவு நடைபெற்ற டெல்லி, ஹைதராபாத் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் இந்தப் பட்டியலில் எடுத்துக்கொள்ளப்படவில்லை) மும்பை அணி முதலிடத்தில் நீடித்து வருகிறது.

இதுவரை 10 ஆட்டங்களில் விளையாடியுள்ள மும்பை அணி 8 வெற்றிகள் 2 தோல்விகள் என 16 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. 10 ஆட்டங்களில் விளையாடியுள்ள கொல்கத்தா 7 வெற்றிகள், 3 தோல்விகள் என 14 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், 10 ஆட்டங்களில் விளையாடியுள்ள ஹைதராபாத் 6 வெற்றிகள், 2 தோல்விகள், ஓர் சமநிலை என 13 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், 10 ஆட்டங்களில் விளையாடியுள்ள புனே 6 வெற்றிகள், 4 தோல்விகள் என மொத்தம் 12 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும் உள்ளன.

அடுத்தடுத்த இடங்களில் முறையே பஞ்சாப், குஜராத், பெங்களூர், டெல்லி அணிகள் உள்ளன. டெல்லி, பெங்களூர் அணிகள் கிட்டத்தட்ட தொடரில் இருந்து வெளியேறிவிட்டன என்றும், பஞ்சாப் மற்றும் குஜராத் அணிகளுக்கு அடுத்த சுற்றுக்கான வாய்ப்பு மிகக் குறைவு என்றும் கருதப்படுகிறது. இதனால் மும்பை, கொல்கத்தா, ஹைதராபாத், புனே ஆகிய அணிகளே பிளே ஓவ் சுற்றக்குத் தகுதிபெற வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

(ம)



# ஒற்றையிலக்கத்துடன் வீழ்ந்தார் சங்கா

இங்கிலாந்து கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் றோயல் லண்டன் தொடரில், நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் சர்ரேயைப்பிரதிநிதித்துவம் செய்த சங்கா தடுமாற்றம் காட்டினார்.

சர்ரேயை எதிர்த்து எசெக்ஸ் மோதியது. இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி மாலை 4 மணிக்கு ஆரம்பமானது. நாண யச் சுழற்சியில் வெற்றிபெற்ற சர்ரே முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணி 13 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆரம்பவீரர் ஸ்ரோன் மன் வெறும் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மூன்றாவது வீரராக சங்கா களமிறங்கினார். 7 பந்துகளில் 6 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் வாக்நெரின் பந்துவீச்சில் இலக்குக் காப்பாளரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். சங்கா ஆட்டமிழந்த பின்னர் சர்ரே ஓட்டங்களைக் குவிக்க மிகையாகச் சிரமப்பட்டது.



முன்னதாக, கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் சர்ரே அணி தன்னை எதிர்த்து மோதிய கிலாமோர்கன் அணியை வீழ்த்தியது. இந்த வெற் றிக்கு சங்கா முக்கிய காரணமாக இருந்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய கிலாமோர்கன் அணி சகல இலக்குகளையும் இழந்து 239 ஓட்டங்களைச் சேர்த் தது. சர்ரே, தனது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாட ஆரம்பித்தபோது மழை குறுக்கிட்டது. இதனால் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 29 பந்துப்பரிமாற் றங்களில் 182 ஓட்டங்கள் சர்ரேக்கு இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆரம்பத்தில் சர்ரே சிறிது பின்னடைவைச் சந்தித்த போதிலும் சங்கா 69 பந்துகளில் ஆட்டமிழக்காது 81 ஓட்டங்களை விளாசி சர்ரேயை வெற்றிபெற வைத்தார்.

இதனால் சங்கா மீது நேற்று அதிகளவில் எதிர்பார்ப்புக்கள் இருந்தன. ஆனால் அவர் முழுவதுமாக ஏமாற்றிச்சென்றார். (ம)

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் உயர்கல்வி நிறுவனத்தில் உடனடிவேலைவாய்ப்பு (ஆண்/பெண்)

Receptionist (வரவேற்பாளர்)
Student Consultant (மாணவ ஆலோசகர்)
Administrative Assistant (நிர்வாக உதவியாளர்)

06.05.2017 சனிக்கிழமை நேரில் சமுகம் தரவும்

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சிறுநீரகம் தேவை

20 வயதுடைய இளைஞன் ஒருவருக்கு சிறுநீரகம் செயலிழந்துள்ளமையால் O+,O- இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை. தொடர்புகளுக்கு -
077 3911406, 021 222 7263, 077 979 7403

யாழில் புதிய பிரிவுகள் ஆரம்பம்

கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி Mobile Phone Repairing Course திருத்தும் துறையில் 10 வருடத்துக்கும் மேல் அனுபவம் கொண்ட முதல்தர ஆசிரியர் Ganesh Sir அவர்களினால் நடாத்தப்படுகின்றது.


May - 06 சனிக்கிழமை
காலை - 09 மணி முதல்
Reg fee - 2500/=
Course fee - 10000/=

6, 7,8,9 ஆகிய நான்கு நாள்களில் Smart Phone கள் உற்பட அனைத்து Phoneகளும் பயிற்சியளிக்கப்படும் சுயமாக வேலை செய்யும் அளவிற்கு பயிற்சி வழங்கப்படும். குறைந்த முதலீட்டில் உடனடியாக ஆரம்பிக்கக் கூடிய ஒரு சுயதொழில். பதிவுகளுக்கு முந்துங்கள்

Soft Vitw
No.221 Kandy Road, Jaffna. 077 747 5783

## மரண அறிவித்தல்

## பொன்னையா வல்லிபுரம்



சரசாலை வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா வல்லிபுரம் நேற்று (02.05.2017) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் ஏகபுதல்வரும் குமாரசாமி - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் நகுலேஸ்வரி, விமலேஸ்வரி, நகுலேஸ்வரன், கமலேஸ்வரி, ஜெகதீஸ்வரி, ஜெகதீஸ்வரன் காலஞ்சென்ற விமலேஸ்வரன், கமலேஸ்வரன், இலங்கேஸ்வரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஸ்ரீஸ்கந்தராசா, ஸ்ரீகாந்தரூபன், உதயரத்தினம், ஞானச்சந்திரன், இராஜ குலேந்திரன், பகீரதி ஆகியோரின் மாமனும் துவாரகன், பானுஜா, ஜானுகா, தனுசன், சோபிகா, விஷாலிகா, வினுஷன், ஜனுஷன், விவேந்தன், பிரணவி, யாகவி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2017) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொம்பிகுளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை வடக்கு சாவகச்சேரி.
077 323 6039, 077 748 4425, 077 6231 015
தகவல்: குடும்பத்தினர்.

# நடப்புச் சம்பியனை வீழ்த்தியது டெல்லி



ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் நடப்புச் சம்பியனான ஹைதராபாத்தை வீழ்த்தியது டெல்லி அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. வழக்கம்போல் சிறப்பாக ஆரம்பத்தை வழங்கியது தவான், வோர்ணர் இணை. 5 பந்துப்பரிமாற்றங்களில் அணி 50 ஓட்டங்களைத் தொட்டது. 30 ஓட்டங்களுடன் வோர்ணரை போல்ட் செய்தார் மொகமட் சமி. தவானின் இன்னிங்ஸ் 28 ஓட்டங்களில் முடிவுகண்டது. ஆரம்ப வீரர்கள் இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்ததால் சிறிது நிலைக்க ஆரம்பித்தார் வில்லியம்சன். அவர் 24 பந்துகளில் 24 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். வில்லியம்சனின் இன்னிங்ஸால் அணிக்கு பெரிதான நன்மை ஒன்றும் இல்லை. வில்லியம்சன் வீணடித்த பந்துகளை சரிசெய்ய ஆரம்பித்தார் யுவராஜ். யுவராஜின் அரைச்சதம் 34 பந்துகளில் பதிவானது. அரைச்சதத்தின் பின்னர் அதிரடியை இரட்டிப்பாக்கினார். முடிவில் மூன்று இலக்குகள் இழப்புக்கு 185 ஓட்டங்களைக் குவித்தது ஹைதராபாத். யுவராஜ் 70 ஓட்டங்களடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் சமி 2 இலக்குகளையும் மிஸ்ரா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லிக்கு ஆரம்பம் சுப்பராக அமையாவிட்டாலும், பரவாயில்லை என்று சொல்லிக் கொள்ளும்படியாக அமைந்தது. அணி 40 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சாம்சன் ஆட்டமிழந்தார். நாயர், பான்ட், அய்யர் முறையே 39, 34, 33 ஓட்டங்களைச் சேர்த்தனர். இலக்கை எட்டும்படியான பங்களிப்பு இது. சராசரியில் சிறிது தொய்வு இருந்தது. இதுவே டெல்லியின் பிரச்சினையாகவும் அமைந்தது. அண்டர்சன் 24 பந்துகளில் 41 ஓட்டங்களைக் குவிக்க இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் வைத்து வென்றது டெல்லி. டெல்லி அணியில் மத்தியூஸ் நேற்று இடம்பிடித்திருந்தார். எனினும் அவர் பந்துவீச ஒரு பந்துப்பரிமாற்றம்கூட கொடுக்கவில்லை. (ம)

காணி விற்பனைக்கு உண்டு
ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு
3 பரப்பு 6.49 அளவு கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.
(CS 003686) தொடர்பு: 076 702 3565






# எல்லாப் புகழும் ஸ்ரோக்ஸுக்கே

## சிமித் உருக்கம்

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் புனே அணி வெற்றிபெறுவதற்கு முக்கிய காரணமாகத் திகழ்ந்த ஸ்ரோக்ஸை, அந்த அணியின் தலைவர் சிமித் மிகையாகப் பாராட்டியுள்ளார்.

"மிகவும் சொற்ப ஓட்டங்களில் முன்வரிசையை இழந்த பின்னர் வெற்றிபெறும் நம்பிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. ஆனால் ஸ்ரோக்ஸ், டோனி இணை ஆட்டத்தின் போக்கை அப்படியே மாற்றி சாதித்துவிட்டது. ஸ்ரோக்ஸின் சதம் இல்லையென்றால் இந்த வெற்றி சாத்தியமில்லை. இந்த மைதானம் சிறியது. அதை ஸ்ரோக்ஸ் சிறப்பாகப் பயன்படுத்திக்கொண்டார். சிறந்த ஆட்டத்தை அவர் வழங்கினார். குஜராத் அணியின் தொடக்கம் அபாரமாக இருந்தது. அவர்கள் 200 க்கும் மேல் ஓட்டங்களைக் குவிக்கக்கூடிய வாய்ப்பு இருந்தது. ஆனால் எமது பந்துவீச்சாளர்கள் நிலைமையை சிறப்பாகவே கையாண்டனர்" என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)

# புவனேஸ்வர்குமார் முன்னிலையில்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் அதிக இலக்குகளைக் கைப்பற்றியவர்களின் வரிசையில் 20 இலக்குகளுடன் ஹைதராபாத் அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஸ்வர்குமார் முதலிடத்தில் உள்ளார். புனே அணியின் தாகிர் 16 இலக்குகளுடன் இரண்டாவது இடத்திலும், மும்பை அணியின் மக்கெலிநகன் 15 இலக்குகளுடன் மூன்றாவது இடத்திலும், குஜராத் அணியின் டை 12 இலக்குகளுடன் நான்காவது இடத்திலும், டெல்லி அணியின் மொறிஸ் 12 இலக்குகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். (நேற்று இரவு நடைபெற்ற டெல்லி, ஹைதராபாத் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் இந்தப் பட்டியலில் எடுத்துக்கொள்ளப் படவில்லை) (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 3.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.